# வட்ட தீபம்

மலர்:- 1

இதழ்:- 1

வெளியீடு:-


உயர்தர மாணவர் ஒன்றியம்

கிளி / வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
வட்டக்கச்சி.

வட்ட திபத்தின் ஒளி திக்கெட்டும் ஒளி பரப்ப எமது நல்லாசிகள்

# THASAN COLOR PHOTO CENTRE

Photograpers and Dealers in Fancy Goods
We Undertake Film Rolls For Processing
and Printing.



## வர்ணப் படத்தின் கலையரங்கம் தாசன்

கண்கவர் கலரில் உங்கள் இல்லங்களில் நடைபெறும்

★ திருமண விழா
★ புதுமனை புகுவிழா
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள் விழா

மற்றும்

மங்கள நிகழ்ச்சிகளை தன்னியக்க மின்னியல் பொறி மூலம் தரமான கலர் படமாக தருவதற்கு தரணியில் தமக்கெனவோர் இடம் பிடித்த நிறுவனம்

# தாசன் கலர் போட்டோ சென்ரர்

*Prop:*

S. SIVATHASAN
No. 442, Unit-5,
RAMANATHAPURAM,
KILINOCHCHI.

TCPC
RAMANATHAPURAM

# வட்ட தீபம்

மலர்:- 1

இதழ்:- 1

வெளியீடு:-

உயர்தர மாணவர் ஒன்றியம்

கிளி / வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
வட்டக்கச்சி.

With best wishes from:

# ST. ANTHONY'S

## Available

Iron Materials
Agro Chemicals
Paint Items
Hard Board Sheets
Petro-max
Aluminium Pots &
Buckets &
Spare parts for
Water Pump
Tractor
Cycle (Also Accessories)

"AMALIVANAM"


**VADDAKACHCHI.**

# செயற் குழு 1988 - 1989

| | |
|---|---|
| காப்பாளர் | :- திரு. ப. அரியரத்தினம் (அதிபர்). |
| தலைக்காப்பாளர்கள் | :- திரு. ச. தர்மரட்ணம். (உப அதிபர்). |
| | திரு. த. லிங்கநாதன். |
| | திரு. ஆ. க. ரவீந்திரன். |
| | திரு. க. விமலநாதன். |
| | திருமதி. மீ. விமலநாதன். |
| | திருமதி. ச. பத்மநாதன். |
| மன்றப் பொறுப்பாசிரியர் | :- திருமதி. நொ. யூ. தர்மரட்ணம். |
| தலைவர் | :- செல்வன். வை. முரளீதரன். |
| உப தலைவர் | :- செல்வன். வி. ஜெயமௌலீயன். |
| செயலாளர் | :- செல்வி. வ. லலிதா. |
| உப செயலாளர் | :- செல்வன். ப. தயாளன். |
| பொருளாளர் | :- செல்வி. ப. ஜெயவதனி. |
| இதழாசிரியர் | :- செல்வன். இ. சத்தியசீலன். |
| விளம்பரப் பொறுப்பாளர் | :- செல்வன். சி. உதயகுமார். |
| கணக்காய்வாளர்கள் | :- திரு. ஆ. க. ரவீந்திரன். |
| | செல்வன். இ. தமிழழகன். |
| செயற்குழு | :- செல்வன். ந. மன்மதன். |
| | செல்வி. சி. புஸ்பாதேவி. |
| | செல்வி. க. யமுனாதேவி. |
| | செல்வன். வை. முரளீதரன். |

உள்ளே.....


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | கொத்தணி அதிபரின் ஆசியுரை . | 01 |
| 02. | பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை . | 02 |
| 03. | கல்வி அதிகாரியின் பாராட்டு உரை . | 03 |
| 04. | காப்பாளர் கருத்துரை . | 04 |
| 05. | தலைவரின் பேனா முனையில் இருந்து . | 05 |
| 06. | இதழாசிரியரின் எண்ண உரை . | 06 |
| 07. | இராம அண்ணர் சொன்ன கதை . | 07 |
| 07. | விரதங்கள் . | 13 |
| 08. | மூட நம்பிக்கைகள் . | 15 |
| 09. | விலைக் சுட்டெண் . | 18 |
| 10. | பிரசுரக் கணக்கு . | 25 |
| 11. | உங்கிராட் அமைப்பும் முதல் விளைவுப் பொருட்களிலான வர்த்தகமும் . | 31 |
| 12. | சர்வதேச நிறுவனங்கள். | 38 |
| 13. | உலகைச் சூழும் பேரபாயம் . | 49 |
| 14. | தமிழ் மொழியில் சிற்றிலக்கியங்கள் . | 50 |
| 15. | நாட்டுப் பாடல்கள் . | 56 |
| 16. | மீண்டும் மண்ணில் பிறப்பாயா? அன்பு வழியில் நடப்பாயா? | 59 |
| 17. | நான் கண்ட கனவு . | 63 |
| 18. | இன்பத் தமிழ் . | 65 |

# கொத்தணி அதிபரின் வாழ்த்துரை

வட்டக்கச்சி
மகா வித்தியாலய
உயர்தர மாணவர்
ஒன்றியம் மலர் ஒன்றை
வெளியிடும் முயற்சியை கடந்த வருடம் ஆரம்பித்தது. அவ் ஆர்வத்தை நிறைவாக்கிட எதிர் நோக்கிய இடர்பாடுகளோ பல. அவை யாவையும் வென்றெடுத்து "வட்ட தீபம்" உருவாகி விட்டது.

இம் மலரினை ஆக்குவதில் முன்நின்று உழைத்த உயர்தர மாணவர் ஒன்றிய செயற்குழுவிற்கும் அம் முயற்சியில் ஆக்கமும் ஆலோசனையும் அளித்த ஆசிரிய குழுவிற்கும் எனது பாராட்டுக்கள். மலரின் உள்ளடக்கம் முதல் முயற்சி என்ற வகையில் பயிற்சியாக அமையட்டும். மறு மலர் பலரது ஆற்றலின் வெளிக்கொணர்வாக மலரட்டும்.

"வட்ட தீபம்" தொடர்ந்து சுடர் விட்டு ஓங்கி வளர்ந்து அறிவைப் பரப்பிட மனமார வாழ்த்துகின்றேன்.

ப. அரியரத்தினம்
கொத்தணி அதிபர்.

# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை

சுபமங்களம் வட்டக்கச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியம் "வட்ட தீபம்" என்னும் இவ்விதழை வெளியிடுவதையிட்டு கல்வித் திணைக்களத்தினர் பெரிதும் திருப்தி அடைகிறோம். இவ்வேளையில் இங்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

வட்டக்கச்சி மகா வித்தியாலயம் இவ்வூர் மக்களுக்குச் சிறந்ததோர் அறிவாலயம். வளர்ந்து வரும் பள்ளிக்கூடம், சங்கீத, நடன நாட்டிய, சமூக, சமய, விளையாட்டு முதலிய இணைப்பாட நிகழ்ச்சிகளில் இப் பள்ளிமாணவர்கள் ஈடுபாடுடன் பங்குபற்றுவது இதன் வளர்ச்சியைக் காட்டுகிறது. மேலும் பல்கலைக்கழக கல்வி பெற மாணவருக்கு அரியதொரு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொண்டது. கடந்த சில வருடங்களாக பல மாணவர் பல்கலைக்கழகம் சென்றுள்ளது இதன் வளர்ச்சியின் அடுத்த கட்டமாகும்.

உயர்தர மாணவர் பெற்ற பள்ளிக்கூட அனுபவம் இன்று மலராக வெளிவந்திருப்பது போற்ற கூடியதாகும். இம்மாணவர்களுக்கு ஆர்வமும், ஊக்கமும், ஊட்டி வழிநடத்திய அதிபர், ஆசிரியர், பெருமக்களின் பங்கு மதிக்கற்பாலது.

ஆண்டு தோறும் இவ் இதழ் மலர வேண்டி வாழ்த்துகிறேன்.

ஜெயமங்களம்.

க. கந்தசாமி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

# கல்வி அதிகாரியின் பாராட்டுரை.

வட்டக்கச்சி மகா வித்தியாலய க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியம் வெளியிடும் "வட்ட தீபம்" எனும் மலரிற்கு ஆசிச்செய்தி ஒன்றை வழங்குவதில் இம்மகா வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏறத்தாழ 3.5 வருடங்கள் வட்டக்கச்சி வாழ் மக்களின் கலங்கரை விளக்கமாக கல்வி ஒளிபரப்பிவரும் இம்மகாவித்தியாலயம் அதன் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்து, இன்று "வட்ட தீபம்" ஏற்றுகின்றது.

கலைத்திட்டத்தின் இணைந்த செயற்பாடுகளில் ஒன்றே மலர் வெளியீடாகும். மிகவும் இடர்பாடான இக்கால கட்டத்தில் மலர் வெளியீடு எனும் முயற்சி மிகவும் பாராட்டிற்குரியதாகும்.



இப்பாரிய கைங்கரியத்தில் ஈடுபட்டு உழைக்கின்ற இம் மகாவித்தியாலய அதிபர், ஆசான்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், காப்பாளர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவரதும் ஆக்கபூர்வமான இம்முயற்சி அளப்பரிய சேவை ஆகும்.

"வட்ட தீபம்" தன்னகத்தே இலங்கும், அறிவியற்றுறை, கலைத்துறை, வர்த்தகத் துறை சார் ஆக்கங்கள் வட்டக்கச்சி வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது மானவ சமுதாய வட்டத்திற்கு நன்மை பயக்க வேண்டி என்று நல்லாசிகளை உரித்தாக்குகின்றேன்.

பொன்சபாபதி
கல்வி அதிகாரி
கிளிநொச்சி

# காப்பாளரின் கருத்துரை

வட்டக்கச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட "வட்ட தீபம்" இப் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஓர் வழிகாட்டியாக அமையும் என்பது நம்பிக்கை. பல இடையூறுகளின் மத்தியிலும் மிக எளிமையான முறையில் இம்மலர் வெளியாவதையிட்டு நாம் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றோம்.

1989ம் வருட முற்பகுதியில் இம்மலர் வெளியீட்டுக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, பல இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தமையால் இவ் வெளியீட்டில் காலதாமதம் ஏற்பட நேரிட்டது. "வட்ட தீபம் எமது பாடசாலையின் உயர்தர மாணவர்களின் முதல் முயற்சியாக இருப்பதனால் முற்றுமுழுதாக தரமானதாக அமையும் என நாம் எதிர்பார்க்க முடியாது. இருந்த போதிலும் இன்று எரிய ஆரம்பித்திருக்கும் "வட்ட தீபம்" அடுத்து வரும் காலங்களில் சுடர்விட்டு பிரகாசித்து மாணவர்களின் அறிவுக்கு ஒளி கொடுக்கும் என்பது திண்ணம்.

எமது பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் உயர்தர மாணவர்களின் அயராத முயற்சி தோல்வி காணாது வெற்றிப் பாதையில் சென்று மாணவர்களின் கல்விக்கு வழிகாட்டும் அணையாத தீபமாக ஆண்டு தோறும் மலர இறையாசீர் வேண்டுகின்றேன்.

நொ. ம. தர்மரட்ணம்,
காப்பாளர்.

# தலைவரின் பேனா முனையிலிருந்து.



"வன்மையிலே உள திண்மையிலே - மனத்
தன்மையிலே மதி நன்மையிலே
உண்மையிலே தவறாத புலவர்
உணர்விலே உயர்ந்த நாடு"

என மக்கள் கவிஞன் பாரதி பாடினான். உண்மையிலே தவறாத அறிவாளிகளின் உணர்வில் தான் ஒரு நாடு உயர்வு பெறுகின்றது. அறிவாளிகளை ஏற்படுத்துவதற்கு நாட்டின் நாடி நரம்பு போல் அமைவதுதான் மாணவ சமுதாயம் சிறுமை கண்டு பொங்கி நாம் பெருமையில் வாழ என்றும் போதம் இலட்சியத்தைக் கைவிடாது உயர்ச்சி தேடி வளர்வதுதான் மாணவர் சமுதாயம் பாடசாலை அறிவாளிகளை ஆக்கும் தொழிற்சாலை என்றால் அங்குள்ள உயர்தர மாணவர் சமூகம் அந்தத் தொழிற்சாலைக்கு மூலப்பொருட்களை வழங்கும் களஞ்சிய அறை போன்றது. இந்த வகையில் இயற்கை எழில் கொஞ்சும் வட்டக்கச்சி தன்னில் விண்ணுயரப் புகழ் பரப்பும் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவராய் இருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அமைவதோடு அந்தப் பாக்கியத்தை அளித்த அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள் சகோதர சகோதரிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மன்ற வரலாற்றில் இதுவே "வட்ட தீபம்" எனும் சஞ்சிகை முதன் முதலாக வெளிவருகின்றது என்பதையும் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வட்டக்கச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றமானது நீண்ட காலமாக வட்டதீபம் எனும் ஒரு சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட ஆர்வம் கொண்டிருந்த போதிலும் "நற்பணிபுரிய நல்லவர் முன்வந்தால் எப்படியாவது இடர் வந்து சூழும்" என்பது போல முயற்சிகள் முடிவுகாணாது மடிந்து போவதற்கு பல இடையூறுகள் காரணமாய் இருந்தன. "மலையே வரினும் தலையே சுமை" என்பதற்கிணங்க இத்தனை இடையூறுகளையும் முறியடித்து இச் சஞ்சிகையை வெளியிட வேண்டும் என எமது வித்தியாலய அதிபர் மற்றும் காப்பாளர் நல்லாசிரியர்களின் ஊக்குவிப்பினாலும் நிர்வாக உறுப்பினரது அயராத முயற்சியினாலும் எமது மன்ற உறுப்பினர்களினதும் நல்லாதரவினால் இம்மலர் வெளியாகின்றது. தவிர்க்க முடியாத வசதியீனங்கள் காரணமாக இம் மலர் எளிமையான முறையில் வெளியாகின்றது. இச் சஞ்சிகையில் உள்ள அனைத்து ஆக்கங்களும் சக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அயராத முயற்சியினால் உருவானவை. இது என்றும் உயர்கல்வி கற்போருக்கும் சமூக அறிவு விரும்பிகளுக்கும் பூரண பயன் அளிக்கும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. எமது "வட்ட தீபம்" வெளியீட்டுக்கு ஒத்துழைப்புத்தந்த அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்வதோடு மலர் வெளியீடு சிறக்கவும் வட்ட தீபத்தின் ஒளி எட்டுத்திக்கும் பரவவும் உங்கள் மனப்பூர்வமான ஆதரவை வேண்டுகின்றேன்.

வைத்திலிங்கம். முரளிதரன்
தலைவர்

உயர்தர மாணவர் மன்றம்
வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
வட்டக்கச்சி.

# இதழாசிரியரின் எண்ணவுரை.

வட்டக்கச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்பட்ட வட்ட தீபம் எனும் பெயர் சூட்டப்பட்ட இச் சஞ்சிகையானது மாணவர்களின் நலன் கருதி மிகத் தரமான ஆக்கங்களை மாணவர் குலத்திற்கு வழங்கியுள்ளது.

மாணவ மாணவிகள் தங்களின் சுய சிந்தனையில் இருந்து மிகத் தரமான ஆக்கங்களை வ் வட்ட தீபம் எனும் சஞ்சிகைக்கு கொடுத்துதவி மிகச் சிறந்த முறையில் இன்நூலை வெளியிடுவதற்கு தம்மால் இயன்ற பங்களிப்பு செய்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச் சஞ்சிகையில் உயர்தர மாணவ மாணவிகளின் வளர்ச்சிகள் மட்டுமல்ல அவர்களின் முற் போக்கான எழுச்சியும் கூட பிரதிபலிப்பதை இன்நூலைக் கையாளும் போது நீங்கள் அறிவீர்கள்.

உயர்தர மாணவ மாணவிகள் இச் சஞ்சிகைக்கு கொடுத்துதவிய ஆக்கங்களின் எழுத்து பிழைகளைத் திருத்தியும் இச் சஞ்சிகையானது மிகத் தரமான முறையில் வெளியிடுவதற்கு மிகவும் அயராதுழைத்தும் சிறந்த முறையில் ஆக்கங்களைத் தொகுத்து உதவிய எமது உயர்தர மாணவர் மன்றத்தின் பொறுப்பாசிரியர் திருமதி தருமரட்ணம் ஆசிரியை அவர்கட்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

இன்நூலை வெளியிட அனுமதி வழங்கிய எங்கள் வித்தியாலய அதிபர் ப. அரியரட்ணம் அவர்கட்கும், இச்சஞ்சிகையை வெளியிட தம்மால் இயன்ற உதவிகள் நல்கிய எமது வித்தியாலய ஆசிரிய ஆசிரியைகள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

இச்சஞ்சிகையானது மாணவ மாணவிகளின் பாடநூல் கல்வி தொடர்பாக முற்போக்கான சிறந்த சிந்தனைகள் இதய அலையில் இருந்து தூண்டி விடும் ஒரு சிறந்த நூலாக விளங்கும் என நம்புகின்றேன்.

உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் இச் சஞ்சிகையானது மாணவர் குலத்திற்கு மிக பயனுள்ள நூலாக விளங்கும் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி.

இ. சத்தியசீலன்.

## ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதை.
***********************

### "உலக ஆசைகள் துன்பத்தைத் தரும்!

**கடவுள் கற்பக மரம் போன்றவர்:-**

சி. ஜீவரஞ்சனி,
ஆண்டு 13 கலைப்பிரிவு

ஒரு நாடோடி இருந்தான் அவன் ஊர் ஊராகச் சுற்றித்திரிந்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் பெரிய மைதானத்தை அடைந்தான் அன்றைய தினம் கடுமையான வெயிலில் நீண்ட தூரம் அவன் அலைந்திருந்தான் . எனவே உடம்பெல்லாம் அவனுக்கு வேர்த்துக் கொட்டியது. அத்தோடு களைப்படைந்து சோர்ந்தும் போயிருந்தான். தூரத்தில் ஒரு மரம் இருந்தது. அதைப் பார்த்ததும் களைப்பை நீக்கிக் கொள்வதற்காக மரத்தின் நிழலை அடைந்து உட்கார்ந்தான். காற்று இதமாக வீசியது அந்தக்காற்று அவனுக்கு இன்பமாக இருந்தது.

'ஆகா! இப்போது நல்ல படுக்கை ஒன்று இருந்தால் எவ்வளவு சுகமாகத் தூங்குவேன்! என்று தனக்குத்தானே அவன் சொல்லிக்கொண்டான். இந்த எண்ணம் உதித்து மறைவதற்குள்ளாகவே தனக்குப் பக்கத்தில் மெல்லிய பஞ்சணை ஒன்று இருப்பதைப் பார்த்தான். அது எப்படி அங்கு வந்தது என்பது அவனுக்கே தெரியவில்லை உண்மையில் அவன் கேட்டதை எல்லாம் கொடுக்கும் கற்பக மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தான். ஆனால் அது அவனுக்குத் தெரியவில்லை.

மேற்கொண்டு யோசித்துப் பார்க்காமல் களைப்பு மேலிட்டுப் போயிருந்த அவன் அந்தப் பஞ்சணையின் மீது சுகமாகப் படுத்துக் கொண்டான். சற்று நேரம் கழிந்தது. பிறகு அவன், 'உடம்பெல்லாம் ஒரே வலியாய் இருக்கிறதே' கை கால்களைப் பிடித்து விட இரண்டு இளம் பெண்கள் இப்போது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்று நினைத்தான், அவன் அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே இரண்டு இளம் பெண்கள் தோன்றித் தன் கால்களைப் பிடித்து விடுவதைப் பார்த்தான்.

அவன் உள்ளத்தில் உவகை பெருக்கெடுத்து ஓடியது! ஆனந்தத்தில் இருப்பவனுக்கு அவர்கள் வந்த அதிசயம் தோன்றுமா? வலி சற்றுக் குறையவும் பசி உண்டாவதைக் கண்டான். 'ஆகா! என்ன ஆச்சரியம்! நினைத்ததெல்லாம் இந்த இடத்தில் கிடைக்கிறதே! படுக்கை வேண்டும் என்று நினைத்தேன். படுக்கை வந்தது. கை கால்களைப்பிடித்து வலி நீக்க இளம் பெண்களை விரும்பினேன். இதோ அவர்களும் வந்து கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் கிடைத்த போது பசியாற உணவு வராதா? இப்போது அறுசுவை உண்டி கிடைத்தால், எவ்வளவு பிரமாதமாய் இருக்கும்! என்று நினைத்தான்.

இப்படி அவன் நினைத்தானோ இல்லையோ, உடனே தன் முன்னால் அறுசுவையோடு கூடிய உணவு வகைகள் இருப்பதைப் பார்த்தான். எப்படி அவை மாயமாய் வந்தன என்பதைப் பற்றி சிந்திக்கவில்லை. தன் பசியாற அவற்றை அவன் திருப்தியுடன் சாப்பிட்டு முடித்தான். பிறகும் அவன் அந்தப் பஞ்சணையின் மீது நன்றாகச் சாய்ந்து படுத்துக் கொண்டான்.

நினைப்பவை எல்லாம் கிடைப்பது பற்றி அந்த நாடோடி மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். இனி அவனுக்கு வேண்டியது ஒன்றும் இல்லை, போலும்! அன்றைய தினம் தனக்கு ஏற்பட்ட அதிசயச் செயல்களைப் பற்றிச் சிந்தித்தான். அப்படிச் சிந்தித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் போதே, அவனது உள்ளத்தில் ஒருவித பயம் உண்டாயிற்று; 'இப்போது ஒரு புலி இங்கே தோன்றினால் என்ன ஆகும்? என்று நினைத்தான். அந்த எண்ணம் வந்த உடனேயே ஒரு பெரிய காட்டுப் புலி அங்கு தோன்றியது. அது அவன் மீது பாய்ந்து அவனை கடித்துக் கொன்று விட்டது.

இம் மாதிரித்தான் உலகத்தவர் அனைவரும் ஆசா பாசத்தினால் கெடுகிறார்கள். அவர்களிடம் புத்தி ஒரு நிலையாக இருக்காது. நீயும் உன் தியான காலத்தில் பொருளையும் புகழையும் மற்றவற்றையும் விரும்பினால், விரும்பியதை எல்லாம் தரும் கற்பகமரம் போன்றவர் கடவுள். எதை ஒருவன் விரும்பினாலும் அதை அந்த மரம் கொடுத்துவிடும். ஆனால்; அப்படி நீ விரும்பியதைப் பெற்று மகிழ்ந்து கொண்டிருக்கும்போது, 'புலி வந்துவிட்டால்?' என்பதைப் போன்ற ஒரு பயம் உன்னை அறியாமலே உன் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும். அந்தப் புலி நோய், பிணி, மரணம், செல்வம், புகழ், ஆகிய வையாக இருக்கும் இவை புலியினால் வரும் துன்பங்களைக் காட்டிலும் பல ஆயிரம் மடங்கு பயங்கரமானவையாக இருந்து உன்னை வீழ்த்திவிடும்.

எனவே தியானம், பக்தி,ஜெபம் முதலிய நல்ல ஒழுக்கங்களைக் கொண்டு ஒருவன் தன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து வரும் போது சிறிது சிறிதாக உலக ஆசைகளை எல்லாம் விட்டுவிட வேண்டும்.

## *அறிந்தவன்*

* அறியாத ஒருவன் தனக்கு தெரியாது என்பதை
அறியாமல் இருந்தால் அவன் ஒரு முட்டாள்.
அவனை ஒதுக்கு.

* தெரியாத ஒருவன் தனக்குத் தெரியாது என்பதை
தெரிந்திருந்தால் அவன் ஒரு குழந்தை.
அவனுக்கு கற்றுக் கொடு.

* தெரிந்திருப்பவன் அது தனக்கு தெரியுமென்பதையே
தெரியாமல் இருந்தால் அவன் தூங்குகிறான்.
அவனைத் தட்டி எழுப்பு.

* அறிந்திருப்பவன் அது தனக்கு தெரியுமென்பதை
அறிந்திருந்தால் அவன் ஒரு தத்துவ ஞானி.
அவனைப் பின்பற்று.

## *அறியாமை*

மனிதர்கள் எல்லோரும் இறைவனது படைப்புக்கள். ஆனால், மனிதர்களோ தங்களுக்குள்ளாக, ஒருமை உணர்வு களையும் நல்லிணக்கச் சிந்தனைகளையும் பரஸ்பரம் வளர்த்துக் கொள்வதற்குப் பதிலாகத் தம்மிடையே வேறுபட்டு, உயர்வு தாழ்வுகளையும், மேடுபள்ளங்களையும், சமூகத்தின் பேராலும் அழிந்து போகும் மனத்தின் பேராலும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு "அறியாமை இது".

*அன்பில் அமைதி*

"ஆண்டவனே அன்பு. ஆண்டவன் மக்கள் எல்லோரையும்
நேசிக்கிறார். அதுபோல, மக்களும் ஒருவரையொருவர் நேசித்தல் அவசியம்,
இப்பொழுதுதான் ஒவ்வொருவரும் அன்புக்குத் தாழ
அமைதியை உலகிடை வாழ வைக்க இயலும்.
அன்பு வாழ, மக்கள் வாழ்வார்கள்; மக்கள் வாழ் அமைதி வாழும்,
அமைதி வாழ உலகம் வாழும்.

*இன்பம்*

"தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய ஊள்ளம் தொல்லுலக
மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்.
ஆங்கே [illegible], ந[illegible]லந்தான் தீர்ந்தாலே"

*மனிதனும் மிருகமும்*

அழகான புல்வெளி அதன்மீது ஆடு, மாடு, சிங்கம், புலி, கரடி யானை எல்லாம் நடந்து சென்றாலும் புல் தேய்வதில்லை. பூண்டு கருகுவதில்லை. ஆனால் ஆறறிவு பெற்ற மனிதர்கள் அதன் மீது நடந்தால் சில நாட்களிலேயே புல் தேய்ந்து, பூண்டு கருகி அங்கே ஓர் ஒற்றையடிப் பாதையை தோன்றிவிடும். மனிதர்களின் பாதங்கள் இப்படி எனில், படிவங்கள் எப்படியோ?

-சிரிப்பவன்-

மாண்பில் சிரிப்பவன் பண்பாளன்.
வெற்றியில் சிரிப்பவன் வீரன்.
விளையாமல் சிரிப்பவன் வீணன்.
தற் பெருமையால் சிரிப்பவன் கோழை
அருளுக்குச் சிரிப்போர் ஆண்டி,
அன்பால் சிரிப்போர் அன்னை
நின்று சிரிப்பவன் நினைவுள்ளவன்.
நினைவோடு சிரிப்பவன் அறிஞன்.
நிலை மறந்து சிரிப்பவன் காதலன்.
இதற்கும் மேலாக......
துன்பத்தில் சிரிப்பவனே மனிதன்.

# பக்திநெறி வளம் பெற்ற பல்லவர் காலம்

****************************

வி. சியாமளா,
ஆண்டு 13, கலைப்பிரிவு

தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப்பகுதியிலே சங்ககாலம், சங்கமருவிய காலம் என்ற இரு காலப் பகுதிகளையும் அடுத்து வரும் காலம் பல்லவர் காலமாகும். இக்காலப் பகுதியில் சமய சம்பந்தமான தோத்திரப் பாடல்கள் பெரிதும் எழுந்தமையாலும், இக்காலப் பகுதியைப் போல வேறெக்காலத்திலும் பக்தியிலக்கியங்கள் பெருந்தொகையினவாக எழாமையாலும், பல்லவர் காலம் பக்தியிலக்கிய காலம் எனப் போற்றப்படுகின்றது.

இவ்வாறு பக்தியிலக்கியங்கள் பெருவிளவாகத் தோன்றியமைக்கு சங்கமருவிய காலப் பகுதியில் ஏற்பட்ட பௌத்த சமண சமயங்களின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க காரணமெனலாம். இச்சமயங்களின் வளர்ச்சியினால் சைவ சமயமும், வைணவசமயமும் பின்தள்ளப்பட்டது அரசர்களும் சமண சமயத்திற்கு மாற்றப்பட்டமையினால் மக்களும் வைதிக மார்க்கங்களைக் கைவிட்டு சமண சமயத்தைத் தழுவினர். இதைக் கண்ணுற்ற சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தமது இசைப்பாடல்கள் மூலம் மக்களிற்கு இறையுணர்வினை ஊட்டமுயன்றனர். இதன் காரணமாகவே பல்லவர் காலத்தில் பெருமளவான தோத்திரப் பாடல்கள் தோன்றலாயின.

சைவசமயத்தை வளர்த்துச் சென்றவர்களாக திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள், திருமூலர் முதலானோரும், வைணவ சமயத்தை வளர்த்துச் சென்றவர்களாக பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார்கள் மூவருமொழிந்த திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், கோதையார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகரராழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய ஒன்பதின்மரும் பல்லவர் காலத்தில் சைவ வைணவ பக்தி நெறியினை வளர்த்துச் சென்றவர்களாவார்.

இவர்கள் ஊர்கள் தோறும் ஆலயத்திற்குச் சென்று இறைவனைப் பாடிப் பரவசமடைந்ததுடன் அத் திருத்தலங்களில் வீற்றிருக்கும் இறைவனின் அருட்டிறங்களையும் நினைந்து நெஞ்சுருகி தேவாரத் திருப்பதிகங்கள் பாடினர். "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்றும் "வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென் இறைவரிற் காட்பட்ட உத்தமர்க்கு யாதொரு துன்பமும் நேராது" என்றும் பக்தி வைராக்கியத்தில் நிலைத்து நின்றனர் அப்பர் சுவாமிகள்.

"நாளாய போகமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம்"

என்ற ஆளுடைய பிள்ளையார்

"புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி
அறிவழிந்திட்டைம் மேலுந்தி
அலமந் போதாக அஞ்சேலென்றருள் செய்வான்" இறைவன் என்கின்றார்.
"தூயவர் கண்ணும் வாயும் மேனியும் துன்னவாடை சுடலையில்
பேயோடாடலைத் தவிரும் நீரொரு வித்ரோ எம்பிரானிரே"

என இறைவனை முன்னிலைப்படுத்தி விளையாட்டாக எச்சரிக்கின்றார் சுந்தரர்.

"நாயாய்க் கிடந்த அடியேற்கு தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றும் "நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்" என்றும் பல இடங்களில் தம்மை இழிவுப் பொருள்படத் தாழ்த்திக் கொண்ட மணிவாசகர் தனது பக்தி மிகுதியினால் தான் இறைவனை வாங்கி தன்னை இறைவனிடம் கொடுத்துப் பண்ட மாற்றுச் செய்துவிட்டேன்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்"

என்று தனது வல்லமையை வாயாரப் பாடிப் பெருமிதம் அடைகின்றார்.

இவ்வாறாக சைவ நாயன்மார்கள் சிவனின் அருட்டிறங்களையும் அவன் மேல் தாம் வைத்த பக்தி வைராக்கியத்தினையும் தம் பாடல்களில் வெளிப்படுத்தினர். இறைவனோடு தம்மைத் தொடர்பு படுத்தி நான்கு மார்க்கங்களிலும் நின்று இறைவனை நாயன்மார்கள் வழிபட வைணவ ஆழ்வார்களும் நால்வகை பாவங்களின் மூலமாக திருமாலின் பெருமையினையும், திருமாலிடத்தில் தாம் கொண்டிருந்த பக்தியினையும் வெளிப்படுத்தினர். பக்திப் பிரபந்தங்கள் பல பாடிய ஆழ்வார்கள் திருமாலிடத்தில் கொண்டிருந்த அளவில்லா அன்பினை "என்றன் அளவன்றால் யானுடைய அன்பு" என்றும் "காண் காண் என விரும்பும் கண்கள்" என்றும் கூறும் அவர்களின் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

பக்திசாரர் என்று போற்றப்பட்ட திருமழிசையாழ்வார் திருமாலிடத்தில் கொண்டிருந்த அளவற்ற அன்பினையும் பக்தி வைராக்கியத்தையும்

"என்றும் மறந்தறியேன் என் நெஞ்சத்தே வைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை"

என்ற பாடுவதிலிருந்து அறிய முடிகின்றது. திருமாலை, திருப்பள்ளியெழுச்சி முதலிய பிரபந்தங்களை திருமால் மீது பாடியருளியவர் தொண்டரடிப் பொடியாழ்வார். ஆண்டான் அடிமை முறையில் திருமாலை ஆண்டானாகவும், தன்னை அடிமையாகவும் கொண்டு இவர் பாடிய பக்தி நலங் கனிந்த பாடல்களுள்

"பச்சை மா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்"

எனத் பாடல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். திருமாலின் மேனியழகை உவமைகள் கொண்டு விளக்கிக் கூறுவதுடன் "தனக்கு இந்திரலோகம் ஆளும் பேறு கிடைத்தாலும் நான் அங்கு செல்லமாட்டேன். அதனிலும் சுவை உன்னைப் பாடிப் பரவசமடைவதே" என்ற கூற்று சுவைத்து இன்புறத்பாலது.

ஸ்ரீவில்லிப் புத்தூரிலே அவதரித்து பாண்டி நாட்டில் வைணவசமயத்தை வளர்த்து வந்த பெரியாழ்வாரும் திருமாலைப் போற்றிப் பாடியிருக்கின்றார். இவரது மகளாகிய கோதையார் மதுர பாவத்தில் நின்று திருமாலை வழிபட்டவர். அதாவது தன்னை நாயகியாகவும், திருமாலை நாயகனாகவும் கொண்டு அன்பு நெறியில் வழிபட்டவர். இவர் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இருபிரபந்தங்களைப் பாடி அருளியுள்ளார். நாயகனான திருமாலின் மீது அவர் கொண்ட காதலின் சிறப்பினை இவ்விரு பிரபந்தங்களையும் நோக்கியறியலாம்.

12

"தந்தையுந் தாயும் உற்ருரும் நிற்கத்
தனிவழி போயினளென்னும் சொல்லு
வந்த பின்னைப் பழி காப்பரிது
மாயவன் வந்துருக காட்டுகின்றான்"

என்ற பாடல் வரிகளில் திருமாலின் மீது கொண்ட அன்பினால் கரைபுரண்டோடும் காதல் வெள்ளத்தில் அவர் பற்றுக் கோடின்றித் தவிப்பதைக் காண முடிகின்றது.

மாணிக்கவாசகரது திருவெம்பாவை போல இவர் பாடிய திருப்பாவை மார்கழி நோன்பினை ஆதாரமாகக் கொண்டெழுந்த சுவை மிக்க பாடல்களாகும்.

"எல்லே இளங்கிளியே
இன்ன முறங்குதியோ?
-------------
--------------
வல்லானை கொன்றானை
மாற்றரை மாற்றழிக்க
வல்லானைமாயனைப்
பாடேலோரம்பாவாய்"

என்றவாறு வரும் திருப்பாவையின் முப்பது பாடல்களும் நாடகப் பாங்கு அமைப்பில் பாவையர் ஒருவரையொருவர் துயிலெழுப்பி நீராடி இறைவனை வணங்கி வேண்டுவதாக அமைந்துள்ளன.

இவர்களை விட நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார் முதலானோரும் திருமாலின் மீது பல பிரபந்தங்கள் பாடி வைணவ நெறியினை சிறப்பாக வளர்த்துச் சென்றனர்.

இவ்வாறு பெருந்தொகையான பக்திப்பாடல்கள் பாடப்பட்ட பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் தோன்றியமையால் புறச்சமயங்களான பௌத்தமும், சமணமும் வலுவற்ற சைவமும் வைணவமும் நாயன்மார்களின் தேவாரப் பாமாலைகளாலும் ஆழ்வார்களின் பக்திப் பிரபந்தங்களினாலும் வளம் பெற்றுச் செழித்து வளர்ந்தன. சாதி வேற்றுமைகள் பாராட்டாது

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவாழ் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்ற

அன்பு நெறியை வலியுறுத்தி பக்திப் பிரவாகத்தில் இறைவனைப் புகழ்ந்து பாடிய நாயன்ளார்களினதும், ஆழ்வாக்களினதும் பக்திப் பாமாலைகள் திருமுறைகளாகவும், திவ்வியப் பிரபந்தங்களாகவும் தொகுக்கப்பட்டு இன்றும் போற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

***

"அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்"

# விரதங்கள்
******

ச. மகேஸ்வரி,
ஆண்டு 13

சமயங்கள் எல்லாவற்றிலும் கடவுள் வழிபாட்டைச் சிறக்கச் செய்வன விரதங்களேயாகும். விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்களாகும். சிவபெருமானை குறித்து அனுட்டிக்கும் விரதங்கள் பேரின்பம் பயப்பன. உமாதேவியார், பிள்ளையார், சுப்பிரமணியர், ஆகிய கடவுளரின் விரதங்கள் உலகியல் சிறப்பினை தருவனவாகும்.

விரதம் அனுட்டிக்கும் பொழுது ஒரு நாளில் ஒரு பொழுதேனும், இரு பொழுதேனும், முப்பொழுதேனும் உணவு உண்ணாதிருத்தல் வேண்டும், மூன்று பொழுதும் உணவு உண்ணாதிருத்தல் "உபவாசம்" எனப்படும். உணவை சுருக்கும் பொழுது அல்லது உண்ணாது விடும் பொழுது மனம் பொறி வழிப் போகாது ஒரு வழிப்படும். அப்பொழுது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன் போடு வழிபடுதலே விரதமாகும்.

விரதங்களை பற்றி ஔவையார் பாடல்கள் முதல் ஆகம சுலோகங்கள் வரை கூறுகின்றன. காப்பது விரதம், மீதூண் விரும்பேல், நோன்பென்பதுவே கொன்று தின்னாமை, பொல்லாங்கென்பவை எல்லாந் தவிர், மோனமென்பது ஞானவரம்பு, விருந்திலோர்க்கில்லை பொருந்திய வொழுக்கம், எனப்பலவாறு விரதங்களின் சிறப்பை ஔவையார் கூறியுள்ளார்.

இன்னும் "மேலைத்தவத்தளவே யாகுமாந் தான் பெற்ற செல்வம்" என்றும் கூறியுள்ளார். இக் கருத்தையே "இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோவாதவர்" என்று திருவள்ளுவரும் தவத்தின் பெருமையை கூறியுள்ளார்.

விரதமாவது நிபந்தனைகள் குறைவாயுள்ளதும், ஒருவரின் சக்திக்கேற்ப வீட்டில் செய்யக்கூடியதுமான ஒருவகைத் தவம் ஆகும். உடலுறுதியும், மனவுறுதியும் குறைந்தவர்களும் விரத நெறியை கொள்ளலாம். அது தவத்தைப் போல இடையுறின்றித் தொடர்ந்து கொள்ள வேண்டியதன்று விரதம் அவரவர்கள் பக்தி, விருப்பம், பொருள், இடம், காலம், பருவம் முதலிய வசதிகள் நோக்கிச் செய்யக்கூடியது. எனவே தான் விரதங்கள் பலவாக உள்ளன.

விரதம் பொதுவாக நித்திய விரதம், நைமித்திய விரதம் என இரு வகைப்படும் நித்திய விரதமாவது அருளுடமை, இன்னா செய்யாமை. புலால் உண்ணாமை, பொய் பேசாமை கள்ளுக்குடியாமை, களவு செய்யாமை முதலிய நல்லொழுக்கங்களாகும் நாயன்மார் வரலாற்றிலே அவர்கள் தாங்கள் மேற் கொண்ட ஒழுக்கத்தில் எத்தனை இடையூறுகள் எதிர்த்து வந்த போதிலும் அவர்கள் தளராமல் அவற்றை நிறைவேற்றி வந்தார்கள் என்பதை நாம் அறிந்துள்ளோம்.

நைமித்திய விரதமாவது உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் முக்கரணங்களோடு கடவுளை வணங்குதலாகும். இங்ஙனம் விரதங்காக்கும் போது அகத்தூய்மை, புறத்தூய்மை அமைதல் வேண்டும், பொறுமை, கொடை, உண்மை, புலனடக்கம் அவாவின்மை என்பன அமைதல் வேண்டும்.

எனவே நான் சில விரதங்கள் விரதநாட்களில் இன்பங்கள் போக போக்கியங்களைத் தவிர்த்து வெறுந் தரையில் கிடத்தல், உறக்கந்தவிர்த்தல், உபவாசம் இருத்தல், ஆகியவற்றை இயன்றவரையில் அனுட்டிக்கின்றார்கள் உபவாசம் என்பது உப + வாசம் எனப் பிரிந்து தெய்வத்துடன் நெருங்கிய உறவு பூண்டு அண்மையில் இருத்தலை குறிக்கும். ஆனால் அது பட்டினி கிடத்தலையே இக் காலத்தில் குறிக்கின்றது.

விரதம் அனுட்டிப்போர், நான் இதை அனுட்டித்து நிறைவேற்றுவேன் என்று சங்கற்பித்துக் காப்பு கட்டுதல், தருப்பை அணிதல் வழக்கம். அவர்கள் அறு சுவை உணவு அருந்துதல் தகாது. அவர்கள் நாவியங்களை உப்பின்றி அவித்து புழுக்கிய அவியை புற்கையாக்கி உண்டால் முறையாகும். அதனிலும் பார்க்க உண்ணா நோற்றலே நோன்பென்பர் பெரியோர்.

மேலும் விரதம் அனுட்டிக்கும் முறையை எடுத்து நோக்குவோமாயின் விரதத்தை மேற் கொண்டவர் காலையில் எழுந்து கடன்களை முடித்துக் கொண்டு நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து அனுட்டானஞ் செய்து கொள்ளல் வேண்டும். பின் ஆலய தரிசனம் செய்து திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல், சிவத் தொண்டு செய்தல், மக்களோடு கூடியிருந்து சிவ கதைகளைப் பேசுதல் நன்று. விரதம் அனுட்டிப்போர் தம்மால் இயன்ற வரையில் உணவை சுருக்குதல், வேண்டுமைகையால் தீர்த்தம், பால், புற்கை, பழம் ஏதாவது உட்கொள்ளலாம், விரதம் முடிந்தபின் அடுத்த நாள் காலை விரதத்தை இறக்குதல் என்னும் கருத்தில் பாரணம் செய்தல் வேண்டும்.

இவ்வாறாக நாம் விரதத்தை அனுட்டிக்கும் போது பல நன்மைகள் உண்டாகின்றது. அவை தேகசுத்தி, நோயின்மை, நீண்ட கால வாழ்வு, மனத்தூய்மை, பாவநீக்கம், நினைத்தகாரியம் சித்தி உண்டாகும் மன மகிழ்ச்சி கடவுள் பக்தி என்பன போன்ற நன்மைகளை நாம் விரதம் அனுட்டித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

*****

"வட்டதீபம் வளர அதன் ஒளி பரவ எமது நல்லாசிகள்"..........

SUNDARAM STORES.

நேர்மையும், நிதானமான விலையும் உடைய ஸ்தாபனம்.

* சில்லறைச் சாமான்கள்.
* சாப்புச் சாமான்கள்.
* சயிக்கிள் சாமான்கள்.
* பாடசாலை உபகரணங்கள் யாவற்றிற்கும்

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

சுந்தரம் ஸ்டோர்ஸ்.

கட்சன் வீதிச் சந்தி வட்டக்கச்சி.

# மூட நம்பிக்கைகள்
*************

ஐ. சுகுமார்
ஆண்டு 13 வர்த்தகப்பிரிவு

இயற்கையன்னை மனிதனை அறிவுவளர்த்தற்குரிய மூளையோடும், உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளாள். எனினும் நம்பிக்கை எனும் கருவி அவன் வாழ்வின் உதயமாகின்றது. நம்பிக்கை மாபெரும் சக்திகளில் ஒன்று அஃது அணுவாற்றல் வன்மையினும் மிக்கது. குகைகளிலே வாழ்ந்த மனிதன் கோள்களின் இயல்பைக்கண்டறிய வான்வெளிப்பயணம் செய்யுமளவுக்கு வளர்ந்துள்ளான் என்றால் அவ் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தவை நம்பிக்கைகள். அவை மனிதனின் சிந்தனையிலே புடமிட்டு உண்மையினடிப்படையிலெழுந்த நல்ல நம்பிக்கைகள். இரண்டும், இரண்டும் நான்கென்பது ஓர் உண்மை. அஃது அன்று முதல் இன்றுவரை நம்பப்படுகின்றது. எப்படி நான்காயிற்று? என்ற வினாவுக்கு இடமேயில்லை. இத்தகைய உண்மைகள் சந்தேக விபரீதம் கடந்து அறிவியலாக மலர்ந்து உலகோரால் நம்பப்பட்டு உலக வளர்ச்சிக்கு உறுதுணையாயின.

இவையன்றி சமுதாயக் கட்டுக் கோப்புக்காக ஏற்படுத்தப்பட்ட சில நன்னெறிகளும் காலப்போக்கில் நம்பிக்கைகளாயின. சுற்றப்பிரதர் மரண, ஜனன ஆசௌசங்காத்தல் அறிவுக்கு பொருத்தமற்றதாயினும் அந் நம்பிக்கை அவர்களிடையே ஒருவகைப்பாச உணர்வை உண்டாக்கி ஒற்றுமையைப் பேண வகை செய்கின்றது. இவ்வகை நம்பிக்கைகள் அறிவுக்கு பொருத்தமற்றவையாயினும் அந்நம்பிக்கை அவர்களிடையே ஒரு வழக்காக மிளிர்கின்றது. அத்துடன் பயனுள்ளவை எவ்வளவு உண்மையுமின்றி பொய்மையிலேயே பிறந்து பொய்மையிலேயே வளர்ந்து காலத்திலே பழக்கமாகி நம்பிக்கை எனும் பெயர் பெறுவனவும் உண்டு. அவைகளே மூடநம்பிக்கைகள் அவை மனிதவளர்ச்சிக்கு எச்சந்தர்ப்பங்களிலும் உதவுவன அல்ல!

அறிவியல் மிகுந்த வளர்ச்சியடைந்த தன்மையால் எதனையும் கூர்ந்து நோக்கி காரணம் காணும் இந்நாளிலும் உலகமெங்கும் பலவகைப்பட்ட மூடநம்பிக்கைகள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மனிதன் இயற்கையின் திருவிளையாடல்களுக்கு காரணம் காணவியலாத போதும் இயற்கைச்சக்திகளை அடக்கியாளவழிகாணாத போதும் அவற்றுக்கு அஞ்சி அவற்றை தம்மினும் மேம்பட்டதொன்றாக கருதி வணங்கத்தொடங்கினான். கண்ணைப்பறிக்கும் மின்னலைக் கண்டு மருண்டான் கர்ணகடூரமான இடியோசையைக்கேட்டு அவன் கலங்கினான். இவ்வாறு காரணம் கண்டு தெளிய இயலாத போது அச்சம் கொண்டான் அதன் நிமித்தம் பல பல எண்ணங்கள் அவன் மனத்தில் பதிந்தது காலப் போக்கில் அவை மூட நம்பிக்கைகளாக உருப்பெற்றன. ஆகவே மூடநம்பிக்கைகளுக்குரிய அடிப்படைக்காரணம். அச்சமும் சிந்தனைத்திறனின்மையுமே ஆகும்.

இன்று நம்மிடையே காணப்படும் மூடநம்பிக்கைகள் பல. அவற்றை காரண காரிய முறைப்படி ஆராய்ந்தால் பற்பல மூடநம்பிக்கைகள் பரவிக் கிடப்பதை காண இயலும். அவற்றை வகைப்படுத்திக் காணுதல் சாலச் சிறப்புடையது. சகுனம் பார்த்தல் சாத்திரம் கேட்டல், போலித்துறவிகளால் ஏமாறுதல், பேய்பிசாசுகளுக்கு அஞ்சுதல் செய்வினை சூனியத்துக்கு அஞ்சுதல். பலியிடல் மனிதருள் ஒரு பகுதியினரை தீண்டாதாரென ஒதுக்குதல் முதலியனவாக அவற்றினை வகைப்படுத்தலாம். பூனையும், சாரையும் குறுக்காதல். ஒற்றைப்பார்ப்பானும், இரட்டைச் சூத்திரனும் எதிர்ப்படுதல் முதலியனவாகச் சகுனங்கள் நிரைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு குழந்தை பிறந்த போது அதன் தாயோ

அல்லது தந்தையோ நோய் காரணமாக இறந்து விட்டால் அப்பிள்ளை தாயை தின்றுவிட்டது அல்லது தந்தையை தின்று விட்டது என சமூகம் திட்டுகின்றது. இதுவும் ஓர் மூடநம்பிக்கையே இவை செவிவழியாக பரப்பப்பட்டு மனித உள்ளங்களில் நிலையான இடத்தினை பெற்றுவிட்டன.

சோதிடம் என்னும் அறிவுத்துறையின் அரிச்சுவடிதானும் தெரியாதவர்களும், கைரேகை நிபுணர்களும் மரத்தடிச் சோதிடர்களும் பாமரமக்களின் அறியாமையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பிழைக்கின்றனர். மக்களும் தம் எதிர்காலம் பற்றி அவர்கள் கூறுவன சரியென மூடநம்பிக்கை பூண்டு தமது பொருள், பண்டங்களை அழிக்கின்றனர். காகங்கள் வீட்டினில் கத்திவிட்டால் அவற்றுக்கு ஒவ்வொரு பொருள் கொண்டு மயங்குவது எமது கண்கூடே. பல்லி வீட்டினுள் கத்தும் போது அதற்கொரு பொருள் கூறுவர். காகமும், பல்லியும் எதிர்கால சகுனங்களை கூறவல்லன என நம்புவது நகைப்புக்கிடமானது. தொற்று நோய்கள் பரவி விட்டால் மருத்துவர்களின் வழிகாட்டலுக்கு அமைந்து நடப்பதே சிறந்தவழி. அதனை விடுத்து அது இறைவனின் சீற்றம் எனக்கருதி குளிர்த்தி செய்தலும், பலியிடலும் மனிதனின் பகுத்தறிவை எள்ளி நகையாடும் செயல்கள். மனத்துள்ளே ஆசையும். மோகமும் உடையவர்களாய் வெளிவேடத்தில் தவவேடம் பூண்டு திரியும் சன்னியாசிகளின் அலங்கார வார்த்தைகள் பாமர மக்களை மயக்கிக் கொடுக்கின்றன. அவர்களது போலி மந்திரங்களாலும் மருந்துகளாலும் அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர். மக்கள் மனத்திலே ஆழப்பதிந்துள்ள பேய் பிசாசுகளைப் பற்றிய நம்பிக்கை அவர்களை அஞ்சியஞ்சிச் சாகச் செய்கிறது. குழந்தைகளையும் பெரியவர்களையும் கோழைகளாக்கிறது. பேய் பிசாசுகளுக்குப் பெயர் வைக்குமளவுக்கு நமது மூடநம்பிக்கை வளர்ந்துள்ளது. ஆலமரத்திலே முனியன் அரசமரத்திலே மாடன், குளக்கரையிலே மோகினி என்று எங்கெங்கும் பேய்பிசாசுகள் உலாவுவதாக நம்பிப்பயந்து வாழ்கின்றனர். அவர்களது அறியாமையை மூடநம்பிக்கையைக் கண்ட பாரதியார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே"

"வஞ்சனைப் பேய்கள் என்பார் - இந்த
மரத்திலென் பார் அந்தக் குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டி லென்பார் - மிகத்
துயர்படு வாரெண்ணிப் பயப்படுவார்"

என்று பாடி மனம் வெதும்புகிறார். மீண்டும்

"மந்திர வாதி யென்பார் - சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்
யந்திர சூனி யங்கள் - இன்னும்
எத்தனை யாயிரம் இவர்துயர்கள்"

என்று மந்திரவாதிகளைப்பற்றிக் கூறுகிறார். "அருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்" என்ற பழமொழியை ஈண்டு நினைவுகூருதல் நன்று எல்லாவகையான மூடநம்பிக்கைக்கும் அறியாமையில் விளைந்த அச்சமே காரணம் என்பதை அது காட்டுகிறது.

இவ்வித மூடநம்பிக்கைகளைப் புறங்கண்டு திண்ணிய மனங் கொண்டு உயர்வடைந்த மக்கள் வாழும் நாடே சிறப்புடைய நாடாக விளங்குதல் முடியும், நம் நாட்டிலே ஆழமாக இவர் விட்டு வளர்ந்த அறியாமை வித்துக்களைப் பரப்பி, மக்கள் மனத்தை நச்சாக்கிக் கெடுக்கும் மூட நம்பிக்கையென்னும் பெருந் தருவை வெட்டிச் சாய்க்கும் போதுதான் நம்நாடு உயர்வடைய முடியும் எனவே, அதனை வெட்டிச் சாய்த்தற்கு அறிவென்னும் வலிமைமிக்க கோடரி வேண்டும், அறிவொளி உலக முடுக்கெங்கும் பரவுதல் வேண்டும். ஆனல் மந்திரம் மூட நம்பிக்கை யென்னும் பேயினைப் போக்கிவிட முடியாது. காரண காரியத்தோடு எதனையுஞ் சிந்தித்துத் தெளியுந்திறங்கொண்ட பெரியோர்களும் இளைஞர்களும் இத்துறையில் ஈடுபடுதல் வேண்டும். பொதுமக்கள் மூட நம்பிக்கைகளினால் அஞ்சியஞ்சி வருந்தும் போதெல்லாம் அவற்றின் வலியின்மையைக் காட்டி அவர்கள் அச்சத்தை நீக்குதல் வேண்டும். சிந்தனைத் திறன் அற்ற அறிவால் மூடநம்பிக்கையை அழித்தல் முடியாதாகையால், மக்கள் மத்தியிலே அறிவோடு சிந்தனைத் திறனையும் வளர்க்க முயலுதல் வேண்டும்.

****

With best wishes! From:

Suguna Tex

SILVA ROAD VADDAKACHCHI.

வண்ணக் கலையுகத்து
வளமார்புடவைகள்
எண்ணம் போல் தேர்வு செய்ய
ஏற்றதோர் எழிற் கூடம்.

Reliable people for
Quality Textile

சுகுண ரெக்ஸ்

சில்வா றோட் வட்டக்கச்சி.

# விலைச் சுட்டெண் ( PRICE INDEX )

வை. முரளீதரன்,
1990 வர்த்தகப்பிரிவு

நாணயத்தின் உள்ள க பெறுமதியினை தீர்மானிக்கின்ற காரணியாக பொது விலை மட்டம் கருதப்படுகின்றது. பொது விலை மட்டம் என்பது சாதாரண விலை மட்டத்தினைக் காட்டியும் வேறுபட்ட தொன்றாகும். வளர்ந்து வரும் இவ் உலகில் விலை என்பது இன்றி அமையாத ஒன்றாக விளங்குகின்றது. குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் இவ் விலைகள் எவ்வாறு மாற்றம் அடைந்து செல்கின்றன என்பதனை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும், ஒரு குறிகாட்டியே விலைச்சுட்டெண் ஆகும். இவ் விலை மட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை கண்டு அறிவதற்கு உதவியாக இருக்கின்றது.

இவ் வகையில் பொது விலை மட்டம் என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம். "குறிப்பிட்ட காலங்களுக்குள் பொருட்கள் சேவைகளின் விலைகளில் ஏற்படும் சராசரி மாற்றங்களினைப் புலப்படுத்துவதே பொது விலை மட்டமாகும்" பொது விலை மட்டத்தின் போக்கினை விலைச்சுட்டெண்கள் அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யலாம். விலைச்சுட்டெண் பொது மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள் சேவைகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற விலை மாற்றத்தினை அறிவதற்காக குறிப்பிட்ட ஆண்டினை அடிப்படையாண்டாகக் கொண்டு நிறையிடுதலினூடாக தயாரிக்கப்படுகின்ற குறிகாட்டிகளே விலைச் சுட்டெண் ஆகும்.

## சுட்டெண் தயாரிக்கும் முறை:-

விலைச் சுட்டெண் ஒன்று தயாரிக்கப்படும் போது பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. அடியாண்டு ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

இவ் ஆண்டானது ஓர் இயல்பான ஆண்டாக அமைந்து இருத்தல் வேண்டும். அதாவது பணவீக்கமோ, பணச்சுருக்கமோ அற்ற ஆண்டாக இருத்தல் வேண்டும்.

2. ஒரு குறிப்பிட்ட பொருத்தமான பண்டத் தொகுதியினை தெரிவு செய்தல் வேண்டும்.

3. பண்டங்களின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப நிறையிடுதல்களை மேற்கொள்ள வேண்டும். அதாவது நுகர்வோரால் பயன்படுத்தப்படும் எல்லாப் பொருட்களும் ஒரே விதமான முக்கியத்துவத்தினைக் கொண்டிருப்பதில்லை. உ--ம் உப்பையும் சீனியையும் எடுத்துக் கொண்டால் இரண்டுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்படுவது இல்லை. சதாரணமாக நுகர்வோரின் வாழ்க்கை நிலைமையினை அறிவதற்கு பயன்படுத்தப்படும் சுட்டெண்களை கவனத்தில் எடுக்கும் போது அவர்களால் அவசியமாக பயன்படுத்தப்படும் பொருட்களினை கவனத்தில் எடுக்க வேண்டும்.

4. விலைகளின் மாற்றங்களைப் பொறுத்து பண்டங்களினை நிறைகளில் அல்லது பண்டத் தொகுதியில் மாற்றங்கள் ஏற்படுத்தல் வேண்டும்.

5. விலை மாற்றங்களை அசாதாரணமாக நிற்குமாயின் அடியாண்டு மாற்ற அமைக்கப்படுதல் வேண்டும்.

6. விலைச் சுட்டெண்ணை தயாரிக்கும் போது பரப்பளவும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதாவது எந்தப் பிரதேசம் பற்றிய குறிகாட்டியைத் தயாரிக்கப் போகிறோம் என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

7. விலைச்சுட்டெண்ணில் "பாஸ்லே" குறிகாட்டி "லாஸ்பியர்" குறிகாட்டி "பெஷே" குறிகாட்டி ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட குறிகாட்டியில் படி கணிப்பிடுதல் வேண்டும்..

விலைச்சுட்டெண் ஒன்று கணிப்பீடு செய்யும் முறையினை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

| அடிப்படையாண்டு 1952 = 100 | | | நடைமுறை ஆண்டு 1982 | |
|---|---|---|---|---|
| பண்டத்தொகுதி | விலை | விலைசார்பளவு | விலை | விலைசார்பளவு |
| உணவு | 30/= | 100 | 60/= | 200 |
| உடை | 25/= | 100 | 75/= | 300 |
| வாடகை | 20/= | 100 | 30/= | 150 |
| எரிபொருள் | 10/= | 100 | 15/= | 150 |
| நானாவிதமானவை | 5/= | 100 | 10/= | 200 |
| | | 500 / 5 = 100// | | 1000 / 5 = 200// |

இவ்வாறு விலை அடிப்படையில் அல்லது நிறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படலாம். அதற்கு ஏற்ப விலைச் சுட்டெண்ணும் மாற்றம் அடையலாம்.

20



| அடிப்படை ஆண்டு 1952 = 100 | | | | நடைமுறை ஆண்டு 1982 | | |
|---|---|---|---|---|---|---|
| பண்டத்தொகுதி | விலை | நிறை | விலைசார்பளவு | விலை | நிறை | விலைசார்பளவை |
| உணவு | 10 | 10 | 100x10=1000 | 20 | 10 | 200x10=2000 |
| உடை | 20 | 8 | 100x8 = 800 | 30 | 8 | 150x8= 1200 |
| வாடகை | 25 | 5 | 100x5 = 500 | 50 | 5 | 200x5=1000 |
| எரிபொருள் | 12 | 8 | 100x8= 800 | 36 | 8 | 300x8 = 2400 |
| நாநாவிதமானவை | 8 | 9 | 100x9 = 900 | 32 | 9 | 400x9= 3600 |
| மொத்தம் | | | | | | |

$\frac{4000}{40} = 100$ $\frac{10200}{40} = 255$

இலங்கையில் பொது விலை மட்டப் போக்கினை அறியவென பின்வரும் நான்கு சராசரியான விலை குறிகாட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன.

1. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
2. மொத்த விற்பனை விலைச்சுட்டெண்
3. தேசிய உற்பத்தி சுருக்கி
4. கூலி விலைச் சுட்டெண்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்:-

இலங்கையில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைச் செலவு மாற்றங்களினை அறிந்து கொள்வதற்காக முதன் முதலாக குடிசனப் புள்ளி விபரத் திணைக்களத்தில் தயாரிக்கப்பட்ட விலைச் சுட்டெண்ணாக இது விளங்குகின்றது. கொழும்பில் உள்ள சராசரித் தொழிலாளரின் குடும்பத்தில் வாழ்க்கைச் செலவில் ஏற்படுகின்ற மாற்றங்களை அறிந்து கொள்வதற்காக சில்லறை விலையின் அடிப்படையில் "லாஸ்பியர்" குறி காட்டியின் முறைப்படி தயாரிக்கப்படுகின்ற குறிகாட்டியே கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகும். இச் சுட்டெண் ஆனது 1952ம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு (1952-100) கணிப்பீடு செய்யப்படுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நிறையிலானது 48-50ம் நுகர் வான் நிதி அளவீடுகளில் இருந்து இச் சுட்டெண்ணுக்கான நிறையிடல் ஆனது இவ் விலையின் ஆய்விலேயே மேற் கொள்ளப் படுகின்றது. மேலும் இச் சுட்டெண்ணுக்குரிய பண்டத் தொகுதியானது பின்வரும் ஐந்தாக வகைப்படுத்தலாம்.

1. உணவு
2. உடை
3. இருப்பிட வசதிகள்
4. எரிபொருள்
5. நாநாவிதமானவை

இச் சுட்டெண்ணுக்குரிய பண்டத் தொகுதியானது துறை ரீதியாக வகைப்படுத்தப்படும்பொழுது பின்வரும் மூன்று உப தொகுதிகளாக அமையலாம்.

1. ஏற்றுமதி பொருள் தொகுதி
2. இறக்குமதி பொருட் தொகுதி
3. உள் நாட்டு பொருட் தொகுதி

இவ்வாறு முறை ரீதியாக வகைப்படுத்திக் கொள்வதற்கான காரணம் விலைச்சுட்டெண் மாற்றத்துக்கு எத்தகையானது காரணம் என்பதற்கு இலகுவில் இவ் அமைப்பின் மூலம் அறிந்து கொள்ள முடியும், இலங்கையின் வீக்க வீதத்தினை அளவீடு செய்வதில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பின்வரும் குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

1. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது அடியாண்டாக பிந்திய ஆண்டாக 1952ம் ஆண்டினை எடுத்தது தவறாகும். ஏனெனில் அது இலங்கையைப் பொறுத்த வரையில் சாதாரண ஆண்டல்ல. அவ் ஆண்டில் அத்தியாவசியப் பண்டங்களின் நுகர்வுக்காக மானியங்கள் அதிகளவில் வழங்கப்பட்டு இருந்தன. தற்போது மானியங்கள் பெருமளவு அகற்ற ~~அதிகரிக்கப்~~பட்டுள்ளன. அத்துடன் கொரிய யுத்தத்தின் பின்னர் இலங்கையின் சென்மதி நிலுவை பாதக நிலையினை அனுபவித்த ஆண்டாகும். எனவே 1952ம் ஆண்டினை அடியாண்டாக எடுத்துக் கொண்டமை தவறாகும்.

2. கொழும்பு மாவட்டத்தில் நிலவும் விலையை மட்டும் கருத்தில் கொண்டு இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களை கொண்டு விளக்குதல் தவறானதாகும். ஏனெனில் இது ஏனைய மாவட்ட பிரிவுகளுடைய விலை மட்டங்களை காட்டுவதில்லை.

3. அடியாண்டு விலைகள் எல்லாம் இயல்பான விலைகளாக இல்லாமல் கட்டுப்பாட்டு விலைகளாக உள்ளன. இதனால் உண்மையான விலை மட்டத்தை இவை புலப்படுத்துவது இல்லை.

4. இச் விலைச்சுட்டெண்ணில் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டச் சேர்க்கைகளில் மாற்றம் செய்யப்படவில்லை. அதாவது தற்போது வெளிநாட்டு தொடர்பு, வருமானம், சுவை என்பன மாறியுள்ள போதும் இவை கவனத்தில் கொள்ளப்படாமல் இருக்கிறது.

5. இவ் விலைச்சுட்டானது பண்டத் தொகுதியினை ஐந்து வகைகளுக்குள் உள்ளடக்குகின்றது. அதாவது தொழிலாளரின் வாழ்க்கைச் செலவைப் பாதிக்கின்ற பல்வேறு பண்டங்களின் விலைகள் இவற்றில் இடம் பெறவில்லை.
உ-ம்:- சவர்க்காரம்.

6. காலத்திற்கு காலம் ஏற்படுகின்ற நிரம்பல் மாற்றத்திற்கு ஏற்றதாக விலைத் தளம்பல்களை கருத்தில் கொண்டு அடியாண்டுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது உண்டு. ஆனால் இலங்கையில் 37 ஆண்டுகளாக அடியாண்டு மாற்றப்படவில்லை.

7. அறியாமை, அக்கறையின்மை காரணமாக வழங்கப்படக்கூடிய பிழையான தரவுகளும் இச் சுட்டெண்ணில் குறைப்பாட்டை ஏற்படுத்தலாம்.

இது எவ்வாறு இருந்த போதும் அதாவது பல குறைபாடுகள் ஏற்பட்ட போதும் ஆரம்ப காலத்தில் இருந்து தயாரிக்கப்படுவதும் கிட்டத்தட்ட 4 தசாப்தங்களாக வேறு எச்சுட்டெண்ணும் இத்தகைய நிலைமையினை அனுசரிக்காமையினாலும் அதாவது இச் சுட்டெண் முதன் முதலாக தயாரிக்கப்பட்டது என்ற வகையில் இவ் விலைச்சுட்டெண்ணே உத்தியோக பூர்வ சுட்டெண்ணாக கருதப்படுகின்றது.

மொத்த விற்பனை விலைச் சுட்டெண்:-

இச் சுட்டெண்ணானது 1974ம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு (1974=100) லாஸ்பியர் குறிகாட்டியின் படி இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்படுகிறது. இது இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நலப் போக்கினை(விலை மட்டப் போக்கினை) அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றன. இலங்கையில் இரண்டாவது விலைச்சுட்டெண் இதுவாகும் இது நாட்டின் மொத்த விலைகளில் மாற்றங்களை காட்டுவதாக இருக்கும். சந்தைக்கு வரும் முதன்நிலைப் பொருட்களின் விலைகளின் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. இவ் விலைச்சுட்டெண்ணின் மாற்றங்கள் பொருளாதாரத்தின் பண்டத் தொகுதி மாற்றங் களைக் கண்டு அறிய உதவுகிறது. இவ் விலைச்சுட்டெண்ணின் அடக்கப்படும் பண்டத் தொகுதி பதின்மூன்று (13) வகையாக அமைகின்றது அவையாவன

1. உணவு
2. வெறிக்குடிவகைகள்
3. புடவையும் காலணியும்
4. தாழ் உற்பத்திகள்
5. இரசாயனமும் இரசாயன உற்பத்திகளும்
6. பெற்றோலிய உற்பத்திகள்
7. உலோகமல்லா உற்பத்திகள்
8. உலோக உற்பத்திகள்
9. போக்குவரத்து கருவிகள்
10. மின்சார பொருத்து வகைகள்
11. யெந்திர சாதனங்கள்
12. எரிபொருளும் வெளிச்சமும்
13. நானாவிதமானவை

இவற்றை துறை ரீதியாக வகைப்படுத்தும் போது இரு வகையாக வகைப்படுத்தப்படுகிறது.

1. உள்நாட்டு பொருள் தொகுதி
   ஏற்றுமதி பொருள் தொகுதி
   இறக்குமதி பொருள் தொகுதி

2. நுகர் பொருள் தொகுதி
   முதலீட்டுப் பொருள் தொகுதி
   இடைநிலைப் பொருள் தொகுதி

இவ் விலை குறிகாட்டியினை தயாரிக்கும் பொழுது இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களையும் கவனத்தில் கொள்கின்றமையால் இலங்கையின் வீக்க வீதத்தினை அளவீடு செய்வதில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை விட இது பொறுப்பை அதிகமாக உடையதாக கருதப்படுகின்றது. இவ் விலைச்சுட்டெண் சிறிது காலத்தின் முன்னர் அதிகரித்த வேகமாகக் கூடுகின்றது. இவை பொதுவாக உற்பத்தி சார்ந்தவையாகவும் இறக்குமதி சார்ந்தவையாகவும் காணப்படுகிறது.

தேசிய உற்பத்தி சுருக்கி:-

தேசிய வருமானத்தில் அளக்கப்படுகின்ற பொருட்கள் சேவைகள் என்பவற்றின் விலை மாற்றப் போக்கினை அறிந்து கொள்வதற்காக ஏதாவது ஒரு ஆண்டை அடிப்படையாண்டாகக் கொண்டு மத்திய வங்கியினால் தயாரிக்கப்படுகின்ற ஒரு குறிகாட்டியே தேசிய உற்பத்தி சுருக்கியாகும். இவ் விலைச்சுட்டெண்ணை கணிப்பீடு செய்வதற்கு 1983 ற்கு முன்னர் 1970ம் ஆண்டை அடிப்படையாண்டாக எடுக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது 1982ம் ஆண்டை அடிப்படையாக்க் கொண்டு (1982-100) இச் சுட்டெண் கணிக்கப்படுகின்றது. இச்சுட்டெண் தொடர்ந்துஅதிகரித்த போக்கினையே கொண்டுள்ளது. இதன்படி

1982ம் ஆண்டு 100 ஆக்வும்
1983ம் ஆண்டு 115 ஆகவும்
1984ம் ஆண்டு 135 ஆகவும்
1985ம் ஆண்டு 136 ஆகவும்
1986ம் ஆண்டு 143 ஆகவும் காணப்படுகிறது.

தேசிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது நடைமுறைக் காரணிச் செலவால் கணிக்கப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியினை நிலையான காரணிச் செலவிலான மொத்தத் தேசிய உற்பத்தியாக மாற்றப்படுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அதன் படி நடைமுறை காரணிச் செலவிலான மொத்த தேசிய உற்பத்தியினை நிலையான காரணிச் செலவிலான மொத்தத் தேசிய உற்பத்தியினால் வகுத்து 100 இனால் பெருக்குவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

$$\text{தேசிய உற்பத்தி} = \frac{\text{நடைமுறை விலை தேசிய உற்பத்தி}}{\text{மாறாத விலை தேசிய உற்பத்தி}} \times 100$$

கூலி வீத சுட்டெண்:-

ஒரு குறிப்பிட்ட ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு தொழிலாளர்களின் பணக் கூலியில் ஏற்படுகின்ற மாற்றங்களினை அறிந்து கொள்வதற்காக தயாரிக்கப்படுகின்ற குறிகாட்டியே கூலி வீத சுட்டெண் ஆகும். இது இலங்கையில் 1978ம் ஆண்டு டிசம்பரை அடியாண்டாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. (1978-100) இது கூலி உயர்வுக்கு வழிவகுப்பதோடு நாட்டின் சகல துறைகளினதுமான உற்பத்தி செலவுடன் தொடர்புடையது என்பதனால் பொது விலை மட்ட உயர்வுக்கு காரணமாக அமையக்கூடியது. இது ஒழுங்காக நிர்ணயிக்கப்பட்ட அரச துறைகளினதும் ஏனைய துறைகளினதும் வேதன மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவதனால் இச் சுட்டெண் ஆனது நேரடியாக விலை மட்ட மாற்றத்தை காட்டாத போதிலும் மறைமுகமாக காட்டக்கூடியதாகும்.

கூலி விலைச்சுட்டெண்ணானது இலங்கையில் பொதுவாக பயன்படுத்துகின்ற போதிலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணுமே முக்கியமானதாக கருதப்படுகின்றன. சமூக உடமை பொருளாதார நாடுகளிலே பண வீக்கம் இல்லை. விலைகள் தனியாரால் நிர்ணயிக்கப்படுவது இல்லை இம் மட்டுப்படுத்தப்பபட்ட விலைகளே நிலவுவதனால் நிலைத்தளம்பல்கள் ஏற்படுவது இல்லை. இதனால் வாழ்க்கைத்தரம் உறுதியானதாகவும் சமமானதாகவும் காணப்படுகிறது. அரசாங்கமானது சில நன்மைகளைக் கருதி விலைச் சுட்டெண்ணை குறைத்துக் காட்டவும் முற்படுகின்றது. சம்பள உயர்வினை வழங்காமல் விடுவதற்கும் வாழ்க்கைச் செலவு புள்ளியை குறைத்துக்காட்டவும் இது மேற்கொள்ளப்படலாம். குறைந்த விலையுள்ள பண்டங்களை சேர்ப்பதன் மூலம் விலைச்சுட்டெண்ணானது குறைத்துக்காட்டப்படலாம். விலைச்சுட்டெண்ணின் அதிகரிப்பானது நாட்டின் மிகப் பெரிய அரசியல் பிரச்சனைகளை உருவாக்கக் கூடியதாக அமையும்.

---

*With the best compliments from:*

# பூமகள் ஸ்ரோர்ஸ்.

உப உணவுப் பொருட்கள்.
சயிக்கிள் உதிரிப் பாகங்கள்.
பெற்றோல்மாக்ஸ் உதிரிப் பாகங்கள்.
சாப்புச் சாமான்கள்

இவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

**POOMAGAL STORES.**

ART BY LUSHIAN

MARKET SQUARE — VADDAKACHCHI.

---

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை."

## பிரசுரக் கணக்கு

ரி. லிங்கநாதன் BSc Hons. (முகாமைத்துவம்)

பங்குதாரர்களும் பொது மக்களும் பார்வையிட்டு விளங்க வைப்பதை நோக்கமாகக் கொண்டே பிரசுர இலாபநட்டக் க/கும் ஐந்தொகையும் தயார் செய்யப்படுகின்றது. இதனை வெளியீடு செய்வதற்கு முன் சாதாரண முறையில் இலாபநட்டக் கணக்கு செய்து வியாபாரத் தேறிய இலாபம் கணித்தல் வேண்டும். இவ் இலாபம் கணிப்பீடு செய்யும் பொழுது நடைமுறைக்கு உட்படாத செலவுகள் பதிவழிக்கப்படாததுடன் வியாபாரத்திற்கு உட்படாத வருமானங்களும் சேர்த்துக் கொள்ளல் ஆகாது. ஏனைய தகவல்களில் இருந்து வியாபாரத் தேறிய இலாபம் கணித்தபின்பு பிரசுர இலாபநட்டக் க/கு தயார் செய்தல் வேண்டும்.

1982ம் ஆண்டு 17ம் இலக்க இலங்கை கம்பனிக்கட்டளைச் சட்டத்தின் படி திருத்தி அமைக்கப்பட்டதன் பின்னுள்ள மாதிரியானது:-
(மாதிரி அமைப்பு)

வரையறுக்கப்பட்ட-------------------கம்பனி 19--------------இல்
முடிவடையும் ஆண்டிற்கான இலாபநட்டக் க/கு:-

| விபரம் | | | தொகை | |
|---|---|---|---|---|
| விற்பனை - குறிப்பிட்ட ஆண்டின் மொத்தப்புரள்வு:- | | | | ***** |
| பின்வரும் செலவுகள் உட்பட எல்லாச் செலவினங்களும் கழித்த பின்னர் தோன்றும் குறிப்பிட்ட ஆண்டுக்கான வியாபார இலாபம் | | | | ***** |
| நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு:- | | | | |
| காணி கட்டிடம் | ** | | | |
| மோட்டார் வாகனம் | ** | | | |
| யந்திரம் பொறி | ** | | | |
| தளபாடம் பொருத்திகள் | ** | | | |
| ஏனைய நிலையான சொத்துக்களின் வாடகை | ** | **** | | |
| இயக்குனர்/பணிப்பாளர் கட்டணங்கள்:- | | | | |
| கட்டணங்கள் | ** | | | |
| சம்பளம் | ** | | | |
| செலவு | ** | | | |
| பொருள் நயங்களாக கிடைத்தது | ** | | | |
| ஒய்வூதியம் | ** | | | |
| பதவி இழப்பு நட்ட ஈடு | ** | **** | | |
| முகாமையாளர் கட்டணங்கள்:- | | | | |
| சம்பளம் | ** | | | |
| கட்டணங்கள் | ** | | | |
| செலவு | ** | *** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்காய்வாளர்கட்டணங்கள் :- | | | | |
| கட்டணங்கள் | ** | | | |
| சம்பளம் | ** | | | |
| செலவு | ** | *** | | |
| | | | | ***** |
| கடன் வட்டிகள் :- | | | | |
| வங்கிக்கடன் வட்டி | ** | | | |
| ஈட்டுக்கடன் வட்டி | ** | | | |
| தொகுதிக்கடன் வட்டி | ** | | | |
| ஏனைய கடன் வட்டி | ** | *** | | |
| வியாபாரப் புரள்வு வரி | | ** | | |
| (+) வியாபாரத்திற்கு உட்படாத வருமானங்கள் (தேறியது) :- | | | | |
| முதலீட்டு வருமானம் விலை கூறப்பட்டது | | | ** | |
| விலை கூறப்படாதது | | | ** | |
| பங்குமாற்றக்கட்டணம் | | | ** | |
| பங்கு இலாபங்கள் | | | ** | |
| சொத்து விற்பனை இலாபம் (சிறிய தொகையாயின்) | | | ** | |
| பெற்ற நில வாடகை | | | ** | |
| சிற்றுண்டிச்சாலை வருமானம் | | | ** | **** |
| | | | | ***** |
| (—) நடைமுறைக்கு உட்படாத செலவுகள் :- | | | | |
| (வியாபாரம் அல்லாத செலவுகள்) | | | | |
| தீயால் அழிந்த நட்டம் | | | ** | |
| சொத்து விற்பனை நட்டம் (சிறிய தொகையாயின்) | | | ** | |
| வழக்குச் செலவு ( " " ) | | | ** | |
| தொழில் கொள்வனவு நட்டம் ( " " ) | | | ** | |
| பணியாளர் உணவுச்சாலை நட்டம் | | | ** | (***) |
| வருமான வரி கழிக்க முன்னுள்ள வருடத்திற்கான தேறியலாபம் | | | | ***** |
| (—) வருட இலாபத்தின் மீதான வருமான வரி ஏற்பாடு | | | | (***) |
| வருமானவரி ஏற்பாடு கழித்தபின் வருடத்திற்கான தேறியலாபம் | | | | **** |
| (—) பகிர்வுகள் :- | | | | |
| நன்மதிப்பு பதிவழித்தல் | | | ** | |
| கற்பனைச் சொத்துக்கள் பதிவழித்தல் | | | ** | |
| மூலதன மீட்பு ஒதுக்கநிதி ஏற்பாடு | | | ** | |
| ஊழியர் உபகாரப்பணம் | | | ** | |
| பொது ஒதுக்கம் | | | ** | |
| பங்கு இலாபம் சமப்படுத்தும் நிதி ஏற்பாடு | | | ** | |
| | | | *** | |

| | தேறியது | வரி | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|
| பங்கு இலாபங்கள் (செலுத்திய இடைக்காலத்தில்) | | | | | | |
| — வீத முன்னுரிமைப்பங்குலாபம் | *** | ** | *** | | | |
| சாதாரண பங்கு லாபம் | *** | ** | *** | *** | | |
| | *** | *** | | | | |
| | | | | *** | *** | ***** |
| பங்கு இலாபங்கள் (பிரேரித்த இறுதியில்) | தேறியது | வரி | மொத்தம் | | | |
| — வீத முன்னுரிமைப்பங்குலாபம் | *** | ** | *** | | | |
| சாதாரண பங்கு லாபம் | *** | ** | *** | *** | *** | (****) |
| | *** | ** | | | | |
| இவ்வாண்டிற்கான பகிரப்படாத இலாபம் :- | | | | | | ***** |
| (+) சென்ற ஆண்டு பகிரப்படாத இலாபம் | | | | | *** | |
| தீர்மானிக்கப்பட்ட வருமானவரி மிகை/குறை | | | | (±) | ** | *** |
| இலாப நட்டக் க/கு மீதி/கீ கொ/செ. | | | | | | **** |

ⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞⓞ

வரை -------------------- கம்பனி, 19 -------------- இல் உள்ளபடியான ஐந்தொகை

| நிலையான சொத்துக்கள் | கொள்விலை | திரண்ட மீதி பெ.தே. ஒதுக்கம் | |
|---|---|---|---|
| நன்மதிப்பு/பதிப்புரிமை/வியாபாரக்குறி(ஏட்டுப் பெறுமதி). | | | *** |
| காணிக்கட்டிடம் | *** | ** | *** |
| மோட்டார் வாகனம் | *** | ** | *** |
| யந்திரம் பொறி | *** | ** | *** |
| தளபாடம் பொருத்துக்கள் | *** | ** | *** |
| குத்தகை ஆதனம் | *** | ** | *** |
| தங்கவயல் | *** | ** | *** |
| எண்ணெய்க் கிணறுகள் | *** | ** | *** |
| | **** | *** | **** |
| **முதலீடுகள்** | | | |
| வங்கி நிலையான வைப்புக் க/கு | | *** | |
| திறைசேரி உண்டியல்கள் | | *** | |

| | | | |
|---|---|---|---|
| வரி ஒதுக்கற் பத்திரங்கள் | | *** | |
| துணைக்கம்பனியின் பங்குக் கொள்வனவு | | *** | |
| துணைக்கம்பனியின் கடன்கள் | | *** | |
| விலை கூறப்பட்ட முதலீடுகள் | | *** | |
| விலை கூறப்படாத முதலீடுகள் | | *** | **** |
| | | ------- | |
| **நடைமுறைச் சொத்துக்கள்:-** | | | |
| இறுதி இருப்பு | | *** | |
| கடன் படுநர் | *** | | |
| (-) ஐயக்கடன் ஏற்பாடு | (**) | *** | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | | *** | |
| அட்டுற்ற வருமதிகள் (வருமதிவருமானங்கள்) | | *** | |
| வருமதி உண்டியல்கள் | | *** | |
| குறுங்கால முதலீடுகள் | | *** | |
| வங்கி, காசு | | *** | |
| | | ------- | |
| | | **** | |
| | | **** | ***** |
| **(-) நடைமுறைப்பரிப்புக்கள்:-** | | | |
| கடன் கொடுநர் | *** | | |
| அட்டுற்ற செலவுகள் (செலவு சென்மதி) | *** | | |
| வருமான வரிப்பொறுப்பு....ஆண்டு | *** | | |
| வருமானவரி ஏற்பாடு.....ஆண்டு | *** | | |
| சென்மதி உண்டியல்கள் | *** | | |
| வங்கி மீவரைவில் | *** | | |
| இறுதிப் பங்கு இலாபங்கள் (தேறியது) | *** | | |
| பங்கு இலாப வரி (இடைக்காலம் + இறுதி) | *** | (****) | |
| | ------- | ------- | |
| தொழிற்படு மூலதனம் | | | **** |
| | | | ------- |
| | | | ***** |
| | | | ***** |
| | | | ======= |

<u>மேற்கூறப்பட்ட வற்றிற்கு, பின்வரும் மூலங்களில் இருந்து நிதியளிக்கப்பட்டுள்ளது</u>

| பங்கு மூலதனம் | அனுமதித்த மூலதனம் | வழங்கி இறுத்த மூலதனம் |
|---|---|---|
| ஒன்ற ரூபா-----வீதம்----% முன்னுரிமைப்பங்குகள் | **** | **** |
| ஒன்ற ரூபா ----வீதம் சாதாரணபங்குகள் | **** | **** |
| | ------- | ------- |
| | **** | **** |
| | ======= | |

29

| | | |
|---|---|---|
| (—) நிலுவை அழைப்புக்கள் | | ~~*****~~ (**) |
| | | **** |
| **ஒதுக்கீடுகள் :-** | | |
| மூலதன மீட்பு ஒதுக்கம் நிதி | ** | |
| பங்கு மிகை (வட்டம்) | ** | |
| நி/சொத்துக்கள் மீள்மதிப்பு மிகை | ** | |
| உருவாக்கமுன்னுள்ள இலாபம் (கூட்டிணைக்குமுன்) | ** | |
| பங்குப் பறிமுதல் இலாபம் | ** | |
| தனிச்ச மீட்பு ஒதுக்கம் | ** | |
| பொது ஒதுக்கம் | ** | |
| பகிரப்படாத இலாபம் கி.தொ/வ | ** | *** |
| பங்கு மூலதனமும் ஒதுக்கங்களும் | | ***** |
| (—) கற்பனைச் சொத்துக்கள் (கட்டுப்படாவரவு மீதிகள்) :- | | |
| தொடக்கச் செலவு | ** | |
| பங்குக் கழிவு/செலவு | ** | |
| தனிச்சக் கழிவு/செலவு | ** | |
| பாரிய விளம்பரம் | ** | (***) |
| | | ***** |
| **நீண்டகாலக் கடன்கள் :-** | | |
| வங்கிக்கடன் | ** | |
| ஈட்டுக்கடன் | ** | |
| தொகுதிக்கடன் | ** | *** |
| | | ****** |
| | | ****** |

**ஐந்தொகையின் கீழ் குறிப்பு காட்டப்பட வேண்டிய விடயங்கள் :-**

* திரளும் முன்னுரிமைப் பங்குதாரருக்கான நிலுவைப்பங்கு இலாபமும் அவை செலுத்த வேண்டியுள்ள நிலுவைக் காலமும்.
* பொறுப்புக்கள் பெறப்படும் போது சொத்துக்கள் ஏதாவது பிணையாக/ஈடாகக் கொடுக்கப்பட்டிருப்பின் அவை பற்றிவிபரம்.
* பொறுப்பொதுக்கீடுகள் செய்யப்படாத நிகழத்தக்க பொறுப்புக்கள்.
* மூலதனச் செலவினங்களுக்காக கம்பனி செய்துள்ள ஒப்பந்தங்கள்.
* நடைமுறைச் சொத்துக்கள் ஏதாவது குறைந்த பெறுமதியில் தேறக்கூடியதில்லை என்பது பற்றியபரிப்பாளரின் உறுதி.

* விலை கூறப்பட்ட முதலீடுகளின் விற்பனைப் பெறுமதியும் அதன் முதலீட்டுப் பெறுமானமும்.
* விலை கூறப்படாத முதலீடுகளின் பணிப்பாளர் சபையின் பெறுமானம்.
* வெளிநாட்டுச் செலாவணி நாணய மாற்று விகிதம்.
* வருமான வரி கணிக்கப்படும் அடிப்படைகள்.
* குறிப்பிட்ட நிதியாண்டில் பங்கு மூலதனத்தில் ஏற்பட்டமாற்றங்கள்,
* குறிப்பிட்ட நிதியாண்டில் நிலையான சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்.
* நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கணிப்பீட்டு முறைகள்.
* இறுதி இருப்பின் கொள்விலைப் பெறுமதியும் சந்தைப் பெறுமானமும்.

கணக்காய்வாளர் அறிக்கை 1.------------------------

---------------------- 2.------------------------

----------------------

பணிப்பாளர் கையொப்பம்.

துணை நூல்கள்:-

* 1982ம் ஆண்டு 17ம் இலக்க இலங்கைக் கம்பனிகள் கட்டளைச் சட்டம்.
* SPICER AND PLEGLERS BOOK - KEEPING ACCOUNTANCY.
* COMPANY ACCOUNT TO MAGEC.
* இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அறிக்கை.

வட்டநீரும் வளம் பெற வாழ்த்துகிறோம்.

சாரதா ஸ்ரோர்ஸ்.

சந்தையடி வட்டக்கச்சி.

குறைந்த விலை! சிறந்த பொருள்!! நிறைந்த இடம்!!!

பல சரக்குச் சாமான்களை மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம் "சாரதா ஸ்ரோர்ஸ்" சந்தையடி வட்டக்கச்சி.

ART BY LUSHIAN

## உள்ராம் அமைப்பும் முதல் விளைவுப் பொருட்களிலான வர்த்தகமும்.

அ. தயாநிதி,
ஆண்டு 13, கலைப்பிரிவு.

முதல் விளைவுப் பொருட்களின் உற்பத்தியும் அவற்றின் பரம்பலும் வர்த்தகப் போக்கும்:-

இன்றைய நவீன உலகில் பயன்படுத்தப்படும் பொருட்களை பிரதானமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கைத் தொழில் பொருட்கள்
2. முதல் விளைவுப் பொருட்கள்.

முதல் விளைவுப் பொருட்களை இங்கு நாம் நோக்குவோம். முதல் விளைப் பொருட்களானது அண்மைக் காலத்தில் பெரும்பாலான வளர்ச்சி அடைந்து வருகின்ற அல்லது மூன்றும் உலக நாடுகளின் அபிவிருத்தியில் ஒரு பிரதான பங்கை வகிக்கின்றது. முதல் விளைபுப் பொருட்கள் எனக் குறிப்பிடுவது தயாரிப்புப் பொருட்கள் அல்லாத ஆகுல் நில நெல் தவிர்ந்த ஏனைய பொருட்கள் யாவும் முதல் வுளைவுப் பொருட்கள் ஆகும். இவற்றுள் பின்வருவன முக்கியமானவையாகும். தேயிலை, றப்பர், தெங்கு, கொக்கோ, நெல், கப்வா, கராம்பு, மிளகு போன்றவையும் வெள்ளி, இரும்பு, தகரம், செப்பு போன்ற மூலப் பொருட்களும் அடங்கும்.

இந்த முதல் விளைவுப் பொருட்களை பிரதானமாக நான்காக வகுக்கலாம்.

1. அத்தியாவசிய கைத் தொழில் கனிப் பொருட்கள், உலோகங்கள்.

இ

இவை கைத் தொழில் விஸ்தரிப்பிற்கு இன்றியமையாதனவாகிய இரும்புத்தாது மூலைட்சைட்டு, செப்பு, நாகம், ஈயம், மங்கனீசு, என்பன இவற்றுள் அடங்கும். விவசாயப் பொருட்களைப் போன்றல்லாது கனிப் பொருட்கள் மீண்டும் புதுமைப்படுத்தப் படாத பொருள்களாகும். அவற்றினைப் பயன்படுத்த போதிய அளவு முதலீடும் தொழில் நுட்ப அறிவும் அவசியமாகும், இதன் காரணமாக அபிவிருத்தியுறும் நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பாரிய அரசுக் கம்பனிகளில் தங்கி நிற்க வேண்டியுள்ளது. இப் பொருட்களுக்கான கேள்வி மிகவும் வலிமை வாய்ந்ததாகும். ஒரு சில பொருட்கள் மாத்திரமே இடைக்கால விலை நிலைமையால் பாதிப்பிற்குள்ளாகின்றன.

2.. அத்தியாவசிய உணவுப் பொருட்கள்:-

இத் தொகுதிக்குள் கோதுமை, அரிசி, தானியங்கள், சீனி, தாவர எண்ணெய்வகைகள், தாவர விதைகள், இறைச்சி, புகையிலை என்பன அடங்கும். அளவுக்கு மீறிய விலை ஏற்ற இறக்கத்தைத் தவிர்த்து சமீபத்திய உலக உணவு தட்டுப்பாடு கூடி இப் பொருட்களின் பிரமாண்டமான கையிருப்பு ஏற்படுத்துவதன் அவசியத்தை எடுத்துக் காட்டியது. இப் பொருட்கள் அபிவிருத்தி அடைகின்ற, அபிவிருத்தி அடைந்துள்ள இருதரப்பு நாடுகளிலுமே உற்பத்தியாகின்றன, என்பதை நாம் உணர வேண்டும். அபிவிருத்தி அடைகின்ற நாடுகளில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பொதுவாகக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினால் ஏற்படும் போட்டியில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது.

3. விவசாய மூலப் பொருட்கள்:-

இயற்கை றப்பர், பருத்திச்சணல், தும்பு, கம்பளி போன்ற பொருட்கள் இத் தொகுதியில் அடங்கும். இப் பொருட்கள் சம்பந்தமாக போட்டியிட வேண்டியுள்ளதுடன் இவை முக்கியத்துவம் இழக்கச் செய்யப் படும்ஆபத்து அதிகரித்து வருகின்றது. இவை பொதுவாக தாழ்ந்த உறுதியற்ற விலையையே பெறுகின்றன. சமீபத்திய பெற்றோலிய விலை ஏற்றம் இப் பொருட்கள் சிலவற்றின் விலைகளைப் போட்டி போட்டு உயர்வடையச் செய்தது. எனினும் இது தற்காலிக செயற்பாடே ஆகும்.

4. அயனமண்டல பானங்களும், பழங்களும்:-

தேயிலை, கோப்பி பழவகைகள் யாவும் இத் தொகுதியில் அடக்கப்படுகின்றது. இப் பண்டங்களின் விலைகள் நீண்ட காலமாகவே வீழ்ச்சியுற்ற நிலையிலேயே இருந்து வந்துள்ளன. இவற்றுக்கான கேள்வி உண்மையான வருமான அதிகரிப்புடன் ஒப்பிடும் போது பொதுவாக இழுபடும் தன்மையற்றது. எவ்வாறெனினும் அபிவிருத்தியுறும் நாடுகளின் மத்தியில் உற்பத்தியாளர்கள் அதிகரிப்பு, உரப்பசளை அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாகப் பெறக் கூடிய விளைச்சல் காரணமாக கேள்வியை விடவும் அதிகமாக வழங்கல் அதிகரித்துள்ளது.

உற்பத்தியும் பரம்பலும்:-

உலகின் தேயிலை உற்பத்தியை நோக்கின் இது ஒரு அயனமண்டலப் பயிராகவே காணப்படுகின்றது. இங்குள்ள பௌதிக சூழ்நிலைகள், கால நிலைகள் போன்றனவே இதற்குக் காரணமாகும். தேயிலைச் செய்கை ஆரம்பத்தில் சிறிய அளவிலேயே இடம் பெற்றது. இது ஒரு பானப்பயிராகவும் விளங்கியது. ஐரோப்பியர் தேயிலை உற்பத்தி நாடுகளைக் கைப்பற்றிய போதிருந்து தேயிலைச் செய்கை பெருந் தோட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இந்தியா, இலங்கை, தென்சீனா, ஜப்பான், உகண்டா, கெனியா, தன்சானியா, தைவான் ஆகிய நாடுகள் முக்கியமான தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.

குறிப்பாக வளர்முக நாடுகளின் தேயிலை உற்பத்தியே நவீனமயமாக்கப்பட்டு பெருமளவு முதற் செறிவான முறையில் அதாவது பெருந்தோட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இந் நாடுகளில் தேயிலைச் செய்கை சிறப்புற விளங்க முக்கிய காரணமாக இருப்பது தொழிலாளர் வசதியாகக் கிடைப்பதாகும். எனவே சனத்தொகை அதிகமான வளர்முக நாடுகளில் இச் செய்கை வெற்றிகரமாக நடை பெறுகின்றது. உலக தேயிலை உற்பத்தியில் ஏறக்குறைய 90% மான பங்கு ஆசியாக் கண்டத்திலேயே செய்கைபண்ணப்படுகின்றது. இதில் 60% மான பகுதியை இந்தியாவும் இலங்கையும் உற்பத்தி செய்கின்றன. இந்தியாவை நோக்கின் இந்தியாவின் வருடாந்த தேயிலை உற்பத்தி ஏறக்குறைய 452 ஆயிரம் மெற்றிக் தொன்களாகும். மொத்தம் 8 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இப் பயிர் செய்கை பண்ணப்படுகின்றது. இந்தியாவில் முக்கியமாக தேயிலை உற்பத்தி செய்யும் இடம் அசாம் பிரதேசமாகும். தென் இந்தியாவில் உள்ள ஆனைமலை, நீலகிரிக் குன்றுகளின் தேயிலை செய்கை அண்மைக்காலத்தில் விரிவு படுத்தப்பட்டமைக்கு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது முக்கிய காரணமாகும். அத்துடன் உலக தேயிலை ஏற்றுமதியில் இந்தியாவே முதலிடம் வகிக்கின்றது.

இலங்கையின் தேயிலைச் செய்கையை நோக்கும் போது இந்தியாவைப் போன்ற பல காரணிகளும் சாதகமாக அமைந்துள்ளன. அதேவேளை இலங்கையின் அந்நியச் செலாவணியில் ஏறக்குறைய இன்று 60% ற்கு தேயிலையின் ஏற்றுமதி வருமானமே ஆகும். எனவே இலங்கையின் வெளிநாட்டுப் பொருளாதாரம் தேயிலையிலேயே தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. ஆனால் தற்போதைய அரசாங்கம் பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களிலேயே அக்கறை கொண்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்வோம்.

உலகின் வருடாந்த தேயிலை உற்பத்தி 14 லட்சம் மெற்றிக் தொன்னாகும். இந்தியா, இலங்கை, சீனா ஆகிய மூன்று நாடுகளினதும் உற்பத்தி 8½ லட்சம் மெற்றிக் தொன்னாகும். உலக தேயிலை இறக்குமதியில் 50% ஐ ஐக்கிய இராட்சியத்தால் இறக்குமதி செய்யப்படுகின்றது. யூகோசிலாவியா, அவுஸ்திரேலியா, கனடா, எகிப்து, ஈரான், ஈராக் போன்றனவும் முக்கிய இறக்குமதி நாடுகளாகும்.

உலக கோப்பி உற்பத்தியில் 50க்கு மேற்பட்ட நாடுகள் ஈடுபட்ட போதிலும் உலக உற்பத்தியில் 75% க்கு மேலான பங்கினை இலத்தீன் அமெரிக்கா நாடுகள் வகிக்கின்றன. ஆனால் பிறேசில் உலக உற்பத்தியில் ஏறக்குறைய 50% ற்குப் பொறுப்பாக இருக்கின்றது. 2ம் உலகயுத்தத்திற்கு முன் உலக உற்பத்தியில் 2/3 பங்கினை பிறேசில் வகித்துள்ளது. ஆனால் யுத்தத்தின் போது ஏற்றுமதி தடைப்பட்டது. அத்துடன் 68 மில்லியன் பிரால் கோப்பி பிறேசிலில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டது. ஏனைய காப்பி உற்பத்தி செய்யும் நாடுகளாக கொலம்பியா, மெக்சிக்கோ, எதியோப்பியா, அங்கோலா; உகண்டா, இந்தோனேசியா, எல்சல்வடோர் போன்றவையாகும். இறக்குமதித் தொகையில் ஐக்கிய அமெரிக்கா 65% கோப்பியைப் பெற ஏனைய நாடுகளான பிரான்ஸ், பெல்சியம், லட்சம்பேக், இத்தாலி, ஐக்கிய இராச்சியம் போன்றன முக்கியம் பெறுகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் வரவு செலவுத்திட்டத்தில் 180 மில்லியன் கோப்பிக்கு ஒதுக்கப்படும். அதே வேளையில் தேயிலைக்கு 40 மில்லியன் டொலரையே ஒதுக்குகின்றது.

கொக்கோ உற்பத்தி செய்யும் நாடுகளாக கானா, நைஜீரியா, பிறேசில்; ஐவரிகோசு, ஈக்குவடோர், மெக்சிக்கோ, பிலிப்பைன்ஸ், இலங்கை, போன்றவையாகும். கொக்கோவை இறக்குமதி செய்யும் முக்கிய நாடாக ஐக்கிய இராச்சியம் விளங்குகின்றது.

இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளாக மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை இந்தியா, நைஜீரியா, என்பன முக்கியமானவையாகும். இந் நாடுகளில் இருந்து உலக உற்பத்தியில் 92% மான பகுதி பெறப்படுகின்றது. ஆனால் 2ம் உலக யுத்தத்தினால் மலேசியா, இந்தோனேசியா, பகுதிகள் யப்பானின் ஆதிக்கத்தின் கீழ்வந்தது. இதனால் இறப்பர் தோட்டங்களில் சில பகுதிகள் அழிக்கப்பட்டு உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1940ம் ஆண்டுகளில் செயற்கை றப்பர் கண்டு பிடிக்கப்பட்டமையும் இயற்கை றப்பர் உற்பத்தியைப் பாதித்தது. ஆனால் செயற்கை றப்பர் மலிவானதாகவும் காணப்பட்டது. உலக றப்பர் உற்பத்தியில் மலேசியா 1/3 பங்கினை உற்பத்தி செய்கிறது. இது உலகில் உற்பத்திய கூடிய நாடாகும். இரண்டாவது இடத்தை இந்தோனேசியா பெறுகின்றது. அதேவேளை ஐக்கிய அமெரிக்கா செயற்கை றப்பரை நுகருகின்ற போதிலும் இயற்கை றப்பரில் 40% யும் நுகருகின்றது. பிரான்ஸ் 7% யும் இறக்குமதி செய்கின்றன. இயற்கை றப்பருக்கு முக்கியமான போட்டிப் பொருளாக செயற்கை றப்பர் காணப்படுகின்றது.

ஆனால் அண்மைக்காலத்தில் பெற்றோலிய விலை ஏற்றத்தினால் செயற்கை றப்பரின் தாக்கம் ஓரளவு குறைந்துள்ளது.

பருத்தி உற்பத்தி செய்யும் பிரதான நாடுகளாக ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், பிறேசில், எகிப்து, துருக்கி, மெக்சிக்கோ, சூடான், உகண்டா, ஆகியனவாகும். பருத்திச் செய்கையில் முதலிடம் வகிப்பது ஐக்கிய அமெரிக்கா ஆகும். உலக பருத்தி உற்பத்தியில் இரண்டாம் இடத்தை யு. எஸ். எஸ் ஆர் வகிக்கின்றது. உலகில் வருடா வருடம் 2½ கோடி மெற்றிக் தொன் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டு இதில் 50% மான பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. முக்கிய ஏற்றுமதி நாடுகளாக மெக்சிக்கோ, எகிப்து, பிறேசில், பாகிஸ்தான் என்பன விளங்குகின்றன. ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஆகிய நாடுகள் பருத்தியை இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

சணலை நோக்கின் இந்தியா, வங்காள தேசம், போர்மோரா, நேபாளம், தாய்லாந்து, ப ர்மா, பிறேசில் என்பன உற்பத்தி செய்யும் நாடுகளாகும். உலக சணல் உற்பத்தியில் 96% யை இந்தியாவும் வங்காள தேசமும் உற்பத்தி செய்கின்றன. வர்த்தகப் பயன்பாட்டில் உள்ள மிக மலிவான நார் சணலாகும். முக்கியமாக கம்பளம், சிலவகைத் துணிகள் பின்னல் பாய்கள் போன்றவற்றுக்குப் பயன் படுகின்றது. இந்தியாவில் சணல் சிறப்புற்று விளங்க கங்கைக் கழிமுகத்தில் காணப்படும் வண்டல், படிவுகளும், மலிந்த கூலி பெறும் ஏராளமான தொழிலாளரும் கல்கத்தா துறைமுகமும் காரணமாகும். இந்தியா 12 லட்சம் மெற்றிக் தொன்னையும் வங்காளதேசம் 10 லட்சம் மெற்றிக் தொன்னையும் உற்பத்தி செய்கின்றன. இவை இரண்டும் முக்கியமான ஏற்றுமதி நாடுகளாகும். பிரித்தானியா, மேற்குஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், ஆகிய நாடுகள் சணல் இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

வர்த்தகப் போக்கு:-

முதல் விளைவுப் பொருளான தேயிலையின் சர்வதேச வர்த்தகத்தை நோக்கின் 1960க்குப் பின் மந்தமாகவே காணப்படுகின்றது. 1959-61 முதல் 1969-71 வரைக்கான காலகட்டத்தில் இலண்டன் ஏல விற்பனைகளில் வருடாந்தம் 1.4%த்தால் உயர்ந்துள்ளது. இதே வேளை கைத்தொழில் பொருட்களின் உற்பத்தி ஐக்கிய நாடுகள் சபை அலகுப் பெறுமதி வருடாந்தம் 1.8% தால் உயர்ந்துள்ளது. எனவே தேயிலை விலையின் வருடாந்தத் தேய்வு 3% ஆகும். சர்வதேச ரீதியில் வர்த்தகம் இன்றைய சூழ்நிலையில் நாடுகளிடையே அவசியமானதொன்றாகும். இருந்தும் இதனால் வளர்ச்சியடைந்த நாடுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்த நாடுகளாகவும் வளர்ச்சி அடைந்து வருகின்ற நாடுகள் தொடர்ந்தும் சுரண்டலுக்கு உட்பட்டு வறிய நிலைக்குத் தள்ளப்படுவதையும் அவதானிக்கலாம். வளர்ச்சி அடைந்த நாடுகளின் ஏற்றுமதித் தொகை பொதுவாக குறைவாகக் காணப்படுவதையும் காணலாம். உதாரணமாக 1973ல் ஐக்கிய நாட்டுப் புள்ளிவிபர ஆண்டறிக்கையை நோக்கின் 1972ல் 72.6 மெற்றிக் தொன்னும் 1958ல் 24.4 மெற்றிக் தொன்னும் 1938ல் 6 மெற்றிக் தொன்னும் என்ற ஏற்றுமதி அளவுகளை வளர்ச்சியுறும் மட்டல நாடுகள் கொண்டிருக்க வளர்ச்சி அடைந்த நாடுகள் இதே காலப்பகுதியில் 297.2 மெற்றிக் தொன்னும் 1958ல் 71.2 மெற்றிக் தொன்னும் 1938ல் 15 மெற்றிக் தொன்னுமாக காணப்பட்டது. ஆனால் இறக்குமதிகள் இங்கு மாறுகக் காணப்பட்டன.

35

வளர்முக நாடுகளின் வர்த்தக அமைப்பை நோக்கின் இவற்றின் உற்பத்தி உள்நாட்டு நுகர்விற்கு மட்டுமன்றி சிறப்பாக ஏற்றுமதிக்கென்றே உற்பத்தி செய்யப்படுகின்றது. அத்துடன் முதல் விளைவுப் பொருட்களில் பெரும் பகுதியை ஏற்றுமதி செய்வதாகவும் காணப்படுகின்றது. வளர்ச்சி அடைந்த நாடுகளின் முதல் விளைவுப் பொருட்களின் வர்த்தகத்தில் 13.7% மாக இருந்த அண்மைக் காலங்களில் 10% ற்கு உட்பட்ட அளவையும் கொண்டுள்ளன. இவ்வாறு இருப்பதற்கு குடியேற்ற ஆட்சியால் நிலவி வரும் இருமைத் தன்மை முக்கிய காரண மாகும்.

கீழேயுள்ள அட்டவணையில் ஒரு சில முதல் விளைவுப் பொருட்களின் ஏற்றுமதி வருவாயின் முக்கியத்துவத்தினைக் காணலாம்.

| நாடுகள் | பொருள் | ஏற்றுமதி வருவாய் வீதம் |
|---|---|---|
| பர்மா | அரிசி | 74% |
| எகிப்து | பருத்தி | 77% |
| கானா | கொக்கோ | 62% |
| இலங்கை | தேயிலை | 62% |
| கியூபா | சீனி | 54% |
| ஈக்குவடோர் | வாழைப்பழம் | 52% |

இவ்வாறான நிலையில் முதல் விளையுப் பண்டங்களின் ஸ்திர நிலைக்கு குறிப்பாக ஏற்றுமதி வருமானத்தை ஸ்திரப்படுத்த அனேகமாகப் பொருட்களைப் பொறுத்து சர்வதேச கூட்டுக்கள் அமைக்கப்பட்ட போதும் அக் கூட்டுக்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. இந்நிலையில் அதிக அளவான முதல் விளைவுப் பொருட்களையே உற்பத்தி செய்யும் உலக நாடுகள் குறைந்த அளவு அன்னியச் செலாவணியைப் பெற்று மேலும் பாதிப்பிற்கு உட்படுவதைக் காணலாம். இந்த வகையில் உங்ராட் நிறுவன்மானது முதல் விளைவுப் பொருட்களின் உற்பத்தியிலும் பரம்பலிலும் அப் பொருட்களின் வர்த்தகத்திலும் கொண்டுள்ள பங்கு பற்றி நோக்குவோம்.

உங்ராம் அமைப்பும் அதன் பங்கும்:-

1961ம் ஆண்டில் பெல்கிரேட்டில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மா நாட்டினைத் தொடர்ந்து 1962 யூலை மாதம் கெய்ரோவில் வளர்முக நாடுகளின் விசேட பொருளாதார மா நாடு நடை பெற்றது. இம் மா நாட்டிலேயே உங்ராட் நிறுவனம் வளர்முக நாடுகளின் நியாயமான கோரிக்கைகளையும் சர்வதேச நிறுவனங்கள் மூலமான வளர்ச்சி அடைந்த நாடுகள் வளர்முக நாடுகளுக்கு உதவி அளிக்க வேண்டிய தேவைகளையும் வெளிக் கொணரவாய்ப்பளித்தது.

1962ல் கெய்ரோவில் நடைபெற்ற வளர்முக நாடுகளின் விசேட பொருளாதார மா நாட்டில் 720 நாடுகளில் இருந்து 2000 மேற்பட்ட பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் உங்ராட் நிறுவனம் அமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் 5 குழுக்களும் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு விடயங்களில் தமது கவனத்தை செலுத்துவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஒவ்வொரு குழுக்களும் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

1. முதல் விளைவுப் பொருட்களின் சர்வதேச உடன்படிக்கை
2. சர்வதேச வர்த்தக வளர்ச்சிக்கு உதவியளித்தல்
3. சர்வதேச வர்த்தகமும் பொருளாதார விருத்திக்கும் அதன் முக்கியத்துவம்
4. கைத் தொழில் பொருட்களின் முக்கியத்துவம்
5. நிறுவன ஒழுங்கு முறை.

இத்தகைய ஆய்வின் மூலம் 3ம் உலக நாடுகளின் பல தேவைகள் வெளிக் கொணரப்பட்டன. எனவே தேவைகளை நிறைவாக்கும் முகமாக உங்ராட் நிறுவனம் தனது கொள்கைகளையும் குறிக் கோள்களையும் வெளிப்படுத்த வேண்டியேற்பட்டது. இக் கொள்கைகளும் குறிக்கோள்களும் உங்ராட் அமைப்பின் நன்மையை வெளிக் கொண்டதாக காணப்படுகின்றது. அவையாவன

1. நாடுகளிடையே இறைமையும் சமத்துவத்தையும் பேணல்
2. சமூகப் பொருளாதார முறைமையைக் கொண்ட பேதப்படுத்தலைத் தவிர்த்தல்.
3. இயற்கை வளங்களைப் பரிமாற்றம் சுதந்திரமாக வர்த்தகத்தில் ஈடுபட உள்ள உரிமை.
4. வளர்ச்சியைத் துரிதப்படுத்தி வருமான இடைவெளியைக் குறைத்தல்.
5. சர்வதேச தொழிற் பிரிப்பிற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு உதவியளித்தல்.
6. குறைவிருத்தி நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல்.
7. முதல் விளைவுப் பொருட்களுக்கு நியாய விலை கிடைக்கச் செய்தல்.
8. வர்த்தகத் தடையின்றி சில சலுகைகளை வழங்கல்.
9. பிரதேசக் குழுக்களால் வெளியார் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ளல்.
10. அரசியல் அல்லது இராணுவ உதவி தவிர்ந்த வகையில் உதவி அழித்தல்.
11. குடியேற்ற அமைப்பு முறையை பரவமாக மாற்றி அமைத்தல்.
12. அபிவிருத்தியில் காணப்படும் வேறுபாடுகளை அளவிடுதல்.

மேற்கூறப்பட்டவை தவிர:-

1. வர்த்தகத்தை விரிவு படுத்துவதற்கான கொள்கைகள்.
2. விவசாயத்துறையை நவீனமயமாக்கலும் கைத்தொழில் மயமாக்கலும்.
3. வளர்ந்து வரும் தொழில்களுக்கு பாதுகாப்பளித்தல்.
4. உள்நாட்டுப் பொருட்களில் அல்லது நாணய அளவில் செலுத்தக் கூடிய பன்முகக் கடன்களை வழங்குதல்.
5. கட்புலனாகா ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை உடுத்தல்.
6. வர்த்தக மாற்று வீத பாதக நிலையை நீக்குவதற்கு உதவி அளித்தல்.
7. தொழில் நுட்ப உதவிகள் பரிமாற்றம் செய்தல்.

மேற்கூறப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு 1964ல் நிரந்தர நிறுவனமாக நிறுவப்பட்டது. இதில் ஆரம்பத்தில் 132 அங்கத்தவர்கள் காணப்பட்டதுடன் 55 அங்கத்தவர்களைக் கொண்ட அதிகார சபையும் செயலகமும் அமைக்கப்பட்டது. இதன் முதலாவது செயலாளர் நாயகமாக 3ம் உலகவிருத்தியில் அக்கறையுள்ள டாக்டர் பிரவில் என்பவர் நியமிக்கப்பட்டார். உங்ராட் அமைப்பு தனது ஆற்றலை மேம்படுத்தி வெற்றிகரமாக எதிர் காலத்தில் மூன்றம் உலகின் பொருளாதாரத்தை விருத்தி அடையச் செய்யலாம்.

எனவும் வளர்ச்சியான பலனை அனுபவிக்கச் செய்தலை திறமையான செயற்பாட்டு முறை எனவும் கொள்ளப்பட்டது. எனவே மூன்றும் உலகின் பிரச்சனைகள் முன் எப்போதும் இல்லாதவாறு சர்வதேச அரங்குகளில் உரைப்பட்டது இது உங்ராட்டின் செயற்பாடுகளின் நிமித்தம் தான் என்று கூறலாம்.

உசாத்துணை நூல்கள்:-

* பொருளியல் நோக்கு.
* இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை.
* FROM BANDUNG TO COLOMBO
* REVIEW OF RADICAL POLITICAL ECONOMICS
* TRADE AND DEVELOPING COUNTRIES

*****

SENTHURAN TRADERS.

SELVA ROAD JUNSTION VADDAKACHCHI.

* * * *

உயர்ந்த ரகம்! நிதான விலை!!

* கோழித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள்.
* பனை உற்பத்திப் பொருட்கள்.
* மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள்.
* சிங்கம் மார்க், யானை மார்க் குளிர் பானங்கள்.
* மற்றும்
* பல சரக்குச் சாமான்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்குவதற்கு நாட வேண்டிய இடம்.

செந்தூரன் ரேடர்ஸ்.

செல்வா வீதி சந்தி, வட்டக்கச்சி.

வட்டதீபம் வளர எமது நல்லாசிகள்.

# சர்வதேச நிறுவனங்கள்
**************

கே. விமலநாதன்
B. A (HONS)

இரண்டாவது உலகப் போரினால் நிர்மூலமாக்கப்பட்ட பொருளாதார வளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் காலத்துக்கு காலம் இக்கட்டான நிலையை அடைந்த பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுமுகமாக ஒவ்வோர் காலங்களிலும் உருவாக்கப்பட்ட பலவகைப்பட்ட தாபனங்களே சர்வதேச நிறுவனங்கள் எனப்படும் அதாவது உலகசமாதானம் உலக மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சி அவற்றின் அடிப்படையிலான அபிவிருத்தி ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு சர்வதேச நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இந்த சர்வதேச நிறுவனங்களை நோக்கங்களின் அடிப்படையில் பிரித்து நோக்கலாம். உலக சமாதானத்தை நிலைநிறுத்தி போர்களிலிருந்து மனிதகுலத்தைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட சர்வதேச நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையாகும். போர்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உலக நாடுகள் சில தத்தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட நிறுவனங்களாக ஆசியான், ஒபெக், ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்பன விளங்குகின்றன. இப்படிப்பல ஒரு சில நோக்கங்களுக்காகவும் பல பல்வேறுபட்ட நோக்கங்களுக்காகவும், என தோற்றம் பெற்றுள்ள அவற்றினை இனி ஆராய்வோம்.

## 1 ஐக்கிய நாடுகள் சபை ( U. N. O )
************************

பல்நோக்கு அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஓர் நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையாகும். அதாவது சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல் சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார, மனிதாபிமான பிரச்சினைகளைத் தீர்த்தல் மனித அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் எனப்பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் உலகின் பெரும்பாலான நாடுகளைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது.

முதலாம் உலக மகாயுத்தத்தில் பல இலட்சம் மக்கள் மாண்டனர், இனிமேல் அத்தகைய யுத்தம் வராமல் தடுக்க எனவே சர்வதேச சங்கம் ஒன்று 27 நாடுகளின் அங்கத்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இச் சங்கத்தின் நோக்கம் நிறைவேறாததால் இரண்டாம் உலக மகாயுத்தம் உருவானது இவற்றிலிருந்து ஓர் நிரந்தரச் சமாதானத்தை நிலவச் செய்வதற்கு ஓர் சிறந்தோர் தாபனம் உருவாக்கப்பட வேண்டுமென 1944/1945ம் ஆண்டுகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெருமூவர் என்ப் பெயர் பெற்ற ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ற், மார்ஷல் ஸ்டாலின், பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் முன்னின்றுழைத்தனர். தூர கிழக்கில் போர் முடிய முன்னரே 1945 அளவில் சான்பிரான்சிஸ்கோ நகரில் முன்னின்ற பல பிரதிநிதிகள் மகாநாட்டை நடாத்தி ஐக்கிய நாடுகள் சாசனத்தை உருவாக்கினர். பின்னர் 51 நாடுகளின் அங்கத்துவத்துடன் உத்தியோக பூர்வமாக 1945 ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்தினமே ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ச்சபையானது ஆறு பிரதான அமைப்புக்களைக் கொண்டது.

1. பொதுச்சபை
2. பாதுகாப்புச்சபை
3. நம்பிக்கைப் பொறுப்புச்சபை
4. பொருளாதார சமூக சபை
5. சர்வதேச நீதிமன்றம்
6. செயலகம்.

1. செயலகம்:-

ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய அமைப்புக்களுக்கு சேவையாற்றுவதற்காக பொதுச்செயலகம் நியூயோர்க்கில் அமைக்கப்பட்டுள்ளது. தாபனத்தின் பிரதமநிருவாகி அதாவது செயலாளர். நாயகம், இவர் பாதுகாப்புச்சபையின் சிபார்சின் பேரில் பொதுச்சபையால் தெரிவு செய்யப்படுவார். இவரது செயற்பாடுடன் ஒவ்வொரு அங்கத்துவ நாட்டின் பிரதிநிதிகளும் இச் செயலகத்தில் கடமையாற்றி வருகின்றனர். ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகளைச் செயற்படுத்த இச் செயலகம் அவ்வப்போது கட்டளைகளைப் பிறப்பிக்கும். பிரதான கடமையாக உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் பாதிக்கும் எந்தவிடயத்தையும் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்கு கொண்டுவருவதாகும்.

2. பொதுச்சபை:-

பொதுவாக வருடத்திற்கு ஒரு தடவை கூடும் இச்சபையானது எல்லா அங்கத்துவ நாடுகளையும் உள்ளடக்கியதாகவுள்ளது. எந்த ஒரு அரசாங்கத்தையும் கட்டுப்படுத்த தத்துவம் இல்லை ஆனால் கருத்துக்களை நேர்மையாகக் கூறி நெறிப்படுத்த முடியும். சமாதானத்தை நிலைநாட்டல், சமூககலாச்சார பொருளாதாரப் பிரச்சனை, சம்பந்தமான பிரேரணைகளை முன்வைத்தல், பாதுகாப்புச்சபை போன்றவற்றிற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல், படைக்குறைப்பு, அமைதி பாதுகாப்புச் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கல், இனஒதுக்கல், கடல்கள் விண்வெளி போன்ற உலகளாவிய விடயங்கள் மீதான ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகளைப் பொதுச்சபை செய்யும் இப்பதவிகளை ஏழு பிரதான குழுக்கள் மூலம் பங்கீடு செய்து ஆற்றிவருகின்றது.

3. பாதுகாப்புச்சபை:-

உறுப்பு நாடுகள் 15ஐ கொண்டு உலக அமைதியையும் பாதுகாப்பையும் பேணும் சபையாக விளங்குகின்றது. அமெரிக்கா, சோவியத்யூனியன் ஐக்கிய இராச்சியம், சீனா, பிரான்ஸ், என்னும் ஐந்து வல்லரசு நாடுகளும் நிரந்தர உறுப்பு நாடுகளாயும் ஏனைய பத்து நாடுகளையும் பொதுச்சபையானது இரண்டாண்டு காலப்பதவிக்குத் தெரிவு செய்யும் சபையில் தீர்மானங்களை எடுப்பதற்கு நிரந்தர உறுப்பு நாடுகளும் மற்றதில் குறைந்தது நான்காயிரம் வாக்களிக்க வேண்டும். இன் நிலையில் வல்லரசுகளின் ஒருமித்த தீர்ப்பு இருந்தாலொழிய ஒரு வல்லரசேனும் எதிர்த்தால் பிரேரணை நிறைவேற்றப்படாது இத்தடையுரிமையை "வீட்டோ அதிகாரம்" என்பர்.

இதன்பணிகளாக தாபனத்தின் கொள்கைக்கேற்ப ஆக்கிரமிப்பு கூட்டுக்கு எதிராக இராணுவ பலத்தை பிரயோகித்தல், மோதல்களைத் தீர்ப்பதற்கான வழிகளை முன்வைத்தல் சமாதானத்துக்கு எதிராக எழும் எச்சரிக்கைகள், ஆக்கிரமிப்புகள் பற்றி ஆராய்ந்து வழிமுறைகளை முன்வைத்தல், எனப்பலவாகும்.

4. நம்பிக்கைப் பொறுப்புச்சபை:-

நம்பிக்கைப் பொறுப்புச் சபை என்பது சர்வதேச நம்பிக்கைப் பொறுப்பு முறையின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பு பிரதேசங்கள் எனப்படும் பிரதேசங்களை நிர்வாகம் செய்தல் ஆகும். நிர்வாகம் என்னும் போது அப்பிரதேச மக்களின் முன்னேற்றத்துக்கும் சுதந்திரத்துக்கும் வழிவகுத்தல் முக்கிய பணியாகும். இச்சபையின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் 11 நாடுகள் இருந்தன இன்று பசுபிக் தீவுகளைக் குறிப்பிடலாம்.

5. சர்வதேச நீதிமன்றம்:-

நெதர்லாந்து நாட்டில் ஹேக் நகரத்தில் அமைந்துள்ளது. இதில் 15 நீதிபதிகள் உள்ளனர் இம்மன்றத்தின் சட்டங்களை ஏற்றுள்ள எந்தவொரு நாடும் விரும்பினால் பிணக்கை சமர்ப்பிக்கலாம் அந்நிலையில் விசாரித்து தீர்த்துவைக்கும்.

6. பொருளாதார சமூக சபை:-

இச்சபையில் 54 உறுப்பு நாடுகளுள்ளன. இவற்றுள் 18 நாடுகள் மூன்றுண்டு காலத்துக்கெனப் பொதுச்சபையினால் தெரிவு செய்யப்படும் இச்சபையின் கீழ் உலகவர்த்தகம், கைத்தொழில் மயமாக்கல் இயற்கை வளங்கள் மனித உரிமைகள் மகளிர் அந்தஸ்து, மக்கள் தொகை, சமூகநலன், விஞ்ஞானம், தொழில் நுட்பம் குற்றத்தடுப்பு சிறந்த சுகாதார வசதிகளை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல் சீரிய கல்வி முறையை ஏற்படுத்தல் எனப்பல பணிகள் உள்ளன இவற்றைச் செயற்படுத்த பணிகளுக்குகந்த பிரிவடிப்படையில் 15 பணியகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

1. உணவு விவசாய நிறுவனம் (F. A. O )
2. உலக சுகாதார நிறுவனம் ( W. H. O )
3. ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாச்சார நிறுவனம் ( UNESCO )
4. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் ( ILO )
5. புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான வங்கி (IBRD )
6. சர்வதேச நிதி நிறுவனம் ( IMF )
7. சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பு ( IAEA )
8. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ( IDA )
9. சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம்( IFC )
10. சர்வதேச தபால் ஒன்றியம்( UPO )
11. சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனம் (ICAO )
12. உலக வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிலையம் ( W. M. O )
13. சர்வதேச தந்தி ஒன்றியம்( ITU )
14. கடலெல்லைகள் பற்றிய சர்வதேச மன நாட்டு நிறுவனம் ( IMCO )
15. சுங்கத்தீர்வை, வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கை ( GATT )

எனவே இத்தகைய தாபனத்தின் பணிகளின் பயன்களாக பலவற்றை அவதானிக்க முடிகிறது. உலகில் பெரும்போர் மூழலாமென கருதப்பட்ட சூழ்நிலைகளை வெற்றிகரமாகத் தடுத்துள்ளது. மத்திய கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு படைகளை ஈடுபடுத்தித் தடுத்துள்ளது. அரபு, யூத யுத்தங்கள் இவ்வாறு தடுக்கப்பட்டன. இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீரில் யுத்தம் செய்வதைத் தடுத்துள்ளது. கொரியாவில்

நடைபெற்ற சண்டையை நிறுத்தியது. லெபனான் சிரியா, ஈரான் போன்ற பல நாடுகளுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது. லெபனான் பகுதியிலிருந்து இஸ்ரேலியப்படைகளை அகற்ற படைகளை அனுப்பி உதவியது. அணுசக்தி உற்பத்தியையும் ஏவுகணைகளின் செயற்பாட்டையும் குறைப்பதற்கு வல்லரசுகளிடையே பேச்சு வார்த்தைகளை ஏற்படுத்தி முயன்று வருகிறது. வறுமையை நீக்கப் பெருமளவு பாடுபடுகின்றது. நிதி உதவிகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் ஆலோசனைகளையும் கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் பெரும் உதவிகளையும் செய்து வருகிறது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் ( உ--ம்:- இலங்கை) கூடுதல் பயன் அடைந்துள்ளன பல நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்களுக்கு ஜெனீவாவில் அலுவலகம் ஒன்றை நிறுவி உதவுகின்றது. ஏறத்தாழ 70 ஆள்புலங்கள் இறைமை அரசுகளாகிவிட்டன. சுருக்கச் சொல்லில் உலகரீதியில் மனுக்குலத்தை அழியாமல் காக்கும் ஒரே அரண் உலக சமாதானத்தின் காவலன் என எல்லாராலும் கருதப்படுகிறது.

உலக விவசாய நிறுவனம்:- ( F. A. O )

( FOOD AND AGRICULTURE ORGANIZATION )

ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் இணைந்த தாபனமாக 1945 ஒக்டோபர் 16ந் திகதி அமைக்கப்பட்டது. தலைமை அலுவலகம் இத்தாலியிலுள்ள ரோம் நகரில் உள்ளது. 1986ல் 156 நாடுகள் அங்கத்துவம்வகித்தன பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாடு ஒன்றுவிட்ட ஓர் ஆண்டு கூடி நிறுவனத்தின் கொள்கையைத் தீர்மானிப்பதுடன் வரவு செலவுத்திட்டம் உலக நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றையும் அங்கீகரிக்கின்றது. பணிகளாக

1. அங்கத்துவ நாடுகளின் போசனை மட்டத்தினையும், வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தல்.
2. விவசாயம், காட்டுவளம், மீன்பிடி ஆகியவற்றின் உற்பத்தி விநியோகத்தை விருத்தி செய்தல்.
3. கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
4. உலக உணவு நிலையை முற்கூட்டியே ஆராய்ந்து பற்றாக்குறை நிலவும் நாடுகளுக்கு உதவுதல்.
5. உணவு உற்பத்திகளைப் பாதிக்கின்ற காரணிகளை இல்லாமற் செய்வதற்கு இத் தாபனம் பல்வேறு வழிவகைகளை கைக்கொண்டு வருகிறது. எடுத்துக்காட்டாக : பங்களாதேஷ், பர்மா, பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளிலே சிறிய காடுகளுக்கு நீர்பாய்ச்சுவதற்கும் நீர் பம்பிகளைப் பயன்படுத்துவதற்கும் அவற்றை உற்பத்தி செய்யும் முறையைக் காட்டிக் கொடுப்பதற்கும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிக விளைச்சலைத்தரும் விதை வகைகளையும் பயிர்வகைகளையும் அறிமுகம் செய்ததன் பின் மேற்கு ஆசியாவின் சிற்சில பிரதேசங்களில் பால் உற்பத்தி 30%,- 60%ம் இடையில் உயர்ந்துள்ளதாக அறிக்கைகள் கிடைக்கின்றன. இலங்கைக்கு 1964 தொடக்கம் இன்றுவரை பல அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவி வழங்கியுள்ளது.

யுனெஸ்கோ நிறுவனம்:- ( UNESCO )

( UNITED NATIONS EDUCATIONAL SCIENTIFIC AND CULTURAL ORGANIZATION.) 1946 நவம்பர் 4ம் திகதி நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாச்சார நிறுவனம் எனப்படும் யுனெஸ்கோவானது பிரான்சின் பாரிஸ் நகரில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு விளங்குகின்றது.

இனம், மத, மொழி, பால், பேதங்களின்றி உறுதிப்படுத்தப்பட்ட நியாயம், சட்ட இறைமை, மனித உரிமைகள்இ அடிப்படைச் சுதந்திரம் போன்றவற்றை வளர்த்தற் பொருட்டுக் கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம், ஆகியவற்றின் மூலம் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்தலும் உறுதிப்படுத்தலும் குறிக்கோளாகும். குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இவற்றில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

உலக சுகாதார நிறுவனம்:- ( W. H.O )

( WORLD HEALTH ORGANIZATION )

சர்வதேச சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையமாக ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் இணைந்து 1948 ஏப்ரல் 7ம் திகதி சுவிற்சலாந்தின் ஜெனீவா நகரில் நிறுவப்பட்டதுதான் உலக சுகாதார நிறுவனம் ஆகும். இவ்வமைப்பில் இன்று (1986ல்) 166 நாடுகள் அங்கம் வகிக்கின்றன ஆளுநர்சபை வருடத்துக்கொருமுறை கூடும் நிர்வாக சபை 30 அங்கத்தவர்களைக் கொண்டது.

அயனமண்டலத்தில் பரவுகின்ற நோய்கள் பற்றி விசேட கவனம் செலுத்து வதுடன் வீட்டிலிருந்து 15 நிமிடத்திற் செல்லக்கூடிய இடத்தில் குடிப்பதற்கு உகந்த நீரும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளும் வைத்தியாலயத்துக்குள் 20 மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளையும் பிரதேசத்தில் ஏற்படுத்துதல் அதாவது"2000 ஆம் ஆண்டு சகலருக்கும் சௌக்கியம்" என்னும் தொனிப் பொருளுக்கேற்ற திட்டம் 1984ல் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டது மேலும் மலேரியா, டெங்கு காய்ச்சல், கழிசல், எயிட்ஸ், புற்றுநோய், போன்றனபற்றி ஆராய்தலும் முக்கிய குறிக்கோள்ளாகும். சுருங்கக் கூறின் சகல மக்களுக்கும் உச்சச் சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல் எப்பதாகும்.

புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான வங்கி ( IBRD ):-

( INTERNATIONAL BANK OF RECONSTRACTION AND DEVELOPMEENT )

1945 டிசம்பர் 27ஆந் திகதி இவ்வங்கி நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் வாசிங்டனில் இருக்கிறது. இவ் வங்கியையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தையுந் தான் "உலகவங்கி" என்பர். உலகவங்கியில் 150 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. மூலதனமில்லாத உறுப்பு நாடுகளுக்கு நியாயமான வட்டிக்கு கடனாக வழங்கி அவற்றின் விருத்திக்கு கூடுதலாக வழங்கப் பட்டு வருகிறது. 1986 வரை இலங்கை உலகவங்கியிடமிருந்து 12 திட்டங்களுக்கு 211 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றிருக்கின்றது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் மிகவும் வறிய நாடுகளுக்கு உலக வங்கியின் நிபந்தனைகளைத் தளர்த்தி கடன் வழங்குவதற்கென தாபிக்கப்பட்டதே சர்வதேச அபிவிருத்திச் சங்கமாகும். 50க்கு மேற்பட்ட நாடுகளுக்கு நிதியுதவி புரிந்துள்ளது. எதிர்பாராத இன்னல்களுக்கும் உலக வங்கியிடம் கடன் பெறலாம். 1985ல் மெச்சிக்கோவில் ஏற்பட்ட பெரிய பூமி நடுக்கத்தின் பின்னர் புனரமைப்புக்கு வழங்கப்பட்ட கடன் சான்றாகும்.

ஆசியான் ( ASEAN ):-

( ASSOCIATION OF SOUTH EAST ASION NATIONS )

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் 1967ல் தாபிக்கப்பட்ட இத்தாபனம் தென்கிழக்காசிய வலயத்தின் பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதையும் அதன் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் அங்கத்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பில் 1984ல் புரூனேயும் 1987ல் பபுவா நியூகினியும் அங்கத்துவம் பெற்றுள்ளன.

மேற்கண்ட நோக்கத்தின் அடிப்படையில்

1. ஆரம்பித்தில் பாதுகாப்பையும் அரசியலையும் குறிப்பாக மக்கள் சீனக்குடியரசின் ஆக்கிரமிப்புக்கெதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துதல்.
2. அங்கத்துவ நாடுகளிடையே சமாதானத்தையும், ஒத்துழைப்பையும் பேணல்.
3. சமூக பொருளாதார கலாசார உறவுகளைப் பேணல்.
4. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். கூட்டுக் கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
5. வர்த்தக நடவடிக்கையில் வலய நாடுகளுக்கு முன்னுரிமை ஆகியவற்றைப் பணிகளைக் கூறலாம்.

1979ல் கம்பூச்சியா மீது வியட்னாம் ஆக்கிரமித்த போது தனது கண்டனத்தை தெரிவித்தது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு விரித்தியடைந்த நாடுகளில் உதவி பெறல் வர்த்தக விருத்திக்கு யப்பான், விலங்கு வேளாண்மை விருத்திக்கு நியூசிலாந்து, கடற்றொழில் மேம்பாட்டிற்கு கனடா உதவி வருகிறது. உறுப்புநாடுகளின் ஒத்துழைப்புடன் பல கைத்தொழில்கள் அதாவது சிங்கப்பூர் - கெம்பரைத்தீன் ஊசிமருந்து, பிலிப்பைன்ஸ் - செம்பு இந்தோனேசியா - யூரியா போன்றன ஆரம்பிக்கப்பட்டன.

3. அணிசேரா நாடுகளின் இயக்கம்:-

ஐக்கிய அமெரிக்கா, சோவியத் சமவுடமைக் குடியரசு ஆகிய வல்லரசுகளின் பக்கம் சாராமல் நடுநிலை வகிக்க வேண்டி மூன்றும் மண்டல நாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே இதுவாகும். 1961ல் பெல்கிரேட்டில் நிகழ்ந்த மாநாட்டில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் இவ் இயக்கத்தின் தேவையை வற்புறுத்தி ஆரம்பித்தனர். பொதுநலவாயத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளும் வகிக்காத நாடுகளுமாக 101 நாடுகள் அங்கத்துவம் பெற்றிருக்கின்றன.

3ம் மண்டல நாடுகளின் அரசியல் பொருளாதார அபிவிருத்திக்காகவும் வல்லரசுகளின் மோதலின்போது நடுநிலை வகிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகளிடையே ஏற்படும் பிணக்குகளை தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்துவதும், சர்வதேசப் பயங்கரவாதம் ஒரு நாட்டிற்கெதிரான ஆக்கிரமிப்பு என்பதை எதிர்த்தால் அங்கத்துவநாடுகள் ஒற்றுமை கண்டன.

4. சார்க் ( SAARC ):-

( SOUTH ASEAN ASSOCIATION FOR REGIONAL CO - OPERATION )

தெற்காசிய நாடுகள் ஏழு இணைந்து 1985ம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமையம் என்பர்.

பொருளாதார விருத்திக்கு வழிவகுக்கும் ஆராய்ச்சிகளில் கூடிய கவனம் செலுத்திவருகிறது, சுகாதாரம், குடித்தொகை, சிவில் விமானப்பயணம், சூரியசக்தி தொடர்பாடல், புகையிரதச் சேவைகளிற்களில் ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவியுள்ளது. மேலும் பெண்கள் விவகாரம், போன்றவற்றிலும் பரஸ்பரம் உதவும் நிறுவனமாக அமையும் எனப்படுகிறது.

5. சியாட்டோ ( SEATO ):-

( SOUTH EAST ASIAN TREATY ORGANIZATION )

கம்யூனிச நாடுகள் தம்மைத் தாக்கும் என அஞ்சி அவுஸ்ரேலியாவும் நியூசிலாந்தும் பசுபிக்கிழக்கு, தெற்கு எல்லையிலுள்ள சில நாடுகளும் இந்நிறுவனத்தை உருவாக்கிக் கொண்டன. தென்கிழக்காசிய நாடுகளெனப் பெயர் பெற்றாலும் இதில் வேறும் சில நாடுகளாக பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பாகிஸ்தான் ஆகியநாடுகள் அங்கத்துவமும் ஆதரவும் வழங்கும் நாடுகளாகும்.

6. ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் (E. E. C ):-

( THE EUROPEAN ECONOMIC COMMUNITY )

இரண்டாம் உலகப் போரில் சீரழிந்த நிலையில் இருந்த ஐரோப்பிய நாடுகள் மீண்டும் சிறந்த நிலையை அடைய எண்ணி ஒரு பொருளாதார சமூகத்தை உருவாக்க முயன்றன பிரான்ஸ் முன்னோடியாகச் செயற்பட்டது. பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க், நெதர்லாந்து, இத்தாலி போன்றன பாரிசில் கூடி ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. பிரான்சிய வெளிவிவகார அமைச்சர் ஷூமான் முன்னின்றதால் ஷூமான் திட்டமெனவும் ஐரோப்பிய நிலக்கரி உருக்கு சமூகம் எனவும் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் அளித்தவெற்றி எல்லாத்துறைகளிலும் ஏற்பட வேண்டுமென்று 1957ல் ரோமில்கூடிய ஆறுநாடுகளும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் நிறுவனத்தை உருவாக்கின 1970ல் டென்மார்க் அயர்லாந்து ஐக்கிய இராச்சியம் போன்றன சேர்ந்தன 1979ல் கிறீஸ் சேர்ந்தது 1985 ஸ்பெயின் போத்துக்கல் என்பனவும் சேர்ந்துகொண்டன.

பொருளாதார ஒருமைப்பாட்டின் மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்குவது ஒருவர் மீது ஒருவர் விதித்து வந்த சுங்கவரிகளை நீக்கி தடையற்ற வர்த்தக சட்டம் ஆனால் அங்கம் வகிக்காத நாடுகள் மீது ஒரேவித வரிவிதிக்கும் கொள்கை. இச்சமூக நாட்டினர் விரும்பிய சமூகநாட்டுக்கு வேலைக்குச் செல்லாம். மற்றும் தம் ஆதிக்கத்தின் கீழ் முன் இருந்த ஆபிரிக்க நாடுகளுக்கு இணைப்பு உறுப்பு நாடுகள் என்ற தகுதி வழங்கிப் பொருளாதார ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றன.

மொழி, இனம், மதம், ஒற்றுமைக்குத்தடையல்ல என்பதை இச்சமூகம் என்னும் நிறுவனம் அதன் ஒருமைப்பாடு உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது என்பர்.

7. ஒப்பெக் ( OPEC ) :-

ஒபெக் என்பது பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனமாகும். 1960 ல் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் எண்ணெய் வர்த்தகம் பாதிப்படையாதிருக்க பாக்தாத்தில் ஈராக் முன்னணியில், வெனிசுவெலா, ஈரான், குவைத், சவுதிஅரேபியா ஆகியன ஒன்று சேர்ந்து இந்நிறுவனத்தை ~~அமைத்து~~ அமைத்தன பின்னர் அல்ஜீரியா, ஈக்வடோர், காபொன் இந்தோனேசியா, லிபியா நைஜீரியா, கட்டார் ஐக்கிய ~~அமெரிக்க~~ அரபியா எமிரேற் ஆகியன இணைந்தன.

உலக நிலநெய் ஏற்றுமதியில் 60% இந்நாடுகளின் கட்டுப்பாட்டிலுள்ளது. இவற்றின் உற்பத்தியில் 70% மேலைத்தேசங்களும் யப்பானும் வாங்குகின்றன.

இந்நிறுவன தோற்றத்தால் சுரண்டிய கம்பனிகள் கூடிய விலை கொடுக்கவேண்டி ஏற்பட்டது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் பாதிப்புற்றன. பல தடவைகள் விலையேற்றம் நடந்தது. பெருமளவு வருமானம் இந்நிறுவன நாடுகளுக்குச் சென்றது.

8. பொதுநலவாயம்:-

பிரித்தானியாவின் தொடர்பினை வைத்திருக்க விரும்பிய நாடுகள் பிரித்தானிய அரசியைத் தலைவியாகக் கொண்ட பொதுநலவாய அமைப்பில் அங்கத்தவராகச் சேர்ந்துள்ளன.

இதன் நோக்கம் ஜனநாயக முறைக்கு மதிப்பளித்தல், விஞ்ஞான அறிவைப் பரிமாறல், புலமைப் பரிசில்களை வழங்கல், அங்கத்தவ நாடுகளிடையே நல்லெண்ணத்தை வளர்த்தல், என்பனவாகும். பர்மா, தென்னாபிரிக்க குடியரசு என்பன விலகிவிட்டன அண்மையில் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் மாகநாடு நடத்தப்பட்டது (1989ல்) 45 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

9. நேட்டோ ( NATO ) :- ( NORTH ARLANTIC TREATY ORGANIZATION )

1949 ஏப்பிரல் 4ம் திகதி வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் நிறுவனம் அமைக்கப்பட்டது. அமெரிக்கநாடுகள், கனடா, மேற்கு ஐரோப்பிய நாடுகளாக 16 தமப்பு நாடுகளைத் தன்னகத்தே ஏற்படுத்திக் கொண்ட ஓர் பாதுகாப்பு ஒப்பந்த நிறுவனமாகும்.

அதாவது அங்கத்துவ நாடு ஒன்றிற்கெதிராக ஆயுதம் எடுக்கப்பட்டால் எல்லோருக்கும் எதிரான செயல் எனக்கருதும் ஒப்பந்தமாகும். ஆக்கிரமிப்புக்களிலிருந்து வட அத்திலாந்திக் நாடுகளைக் காக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது, இதன் கீழ் இரு இராணுவ அணிகள் அதாவது SACEUR என்னும் ஐரோப்பிய அணியும் அத்திலாந்திக் சமுகத்திரத்திற்கான SACLANT என்னும் அணிகளும் பாதுகாப்பளிக்கும் இராணுவ அணிகளாகும்.

10. வார்சோ ஒப்பந்த நாடுகள் ( WAR SAUD PACT ):-

நேட்டோ உருவாக்கப்பட்டதும் அதற்கெதிரான ஓர் அணியை உருவாக்கவேண்டிய அவசியம் கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமை நாடுகளுக்கு ஏற்பட்டது. சோவியத் அணியின் நாடுகள் ஒன்று சேர்ந்து 1955 மே 14ல் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

இதில் சோவியத் யூனியன் பல்கேரியா, கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, ஹங்கேரி, போலந்து, ருமேனியா இ அல்பேனியாவும் இருந்து 1968ல் தனது அங்கத்துவத்தை விலக்கிக் கொண்டது. இவை தமது இராணுவ பலத்தைப் பெருக்க சோவியத்யூனியன் ஆதரவளித்தது. அங்கத்துவ நாடுகளின் சுதந்திரம், பாதுகாப்பு, அமைதி என்பனவற்றை எல்லா நாடுகளும் சேர்ந்து பாதுகாப்பதாகவும் ஏதாவது ஒருநாடு வேறு நாட்டால் தாக்கப்பட்டால் உதவி செய்து அந்நாட்டைக் காப்பதும் நோக்கமாகும்.

கொமிக்கோன் நிறுவனம் :-

வார்சோ ஒப்பந்த நாடுகள் பொருளாதார அபிவிருத்தி நோக்கில் கொமிக்கோன் ஒப்பந்தத்தைச் செய்தன அங்கத்துவ நாடுகளுக்கிடையேயான மூலதனம், தொழில்நுட்பம், கடன் பயிற்சிகள் என்பன பரிமாறிக் கொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்டது.

12. பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம் :- (OECD)

( ORGANIZATION FOR ECONOMIC CO - OPERATION AND DEVELOPMENT ) உலக வர்த்தக விருத்திக்காகவும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவி புரிவதற்க்காகவும் 1961ல் உருவாக்கப்பட்டதே இதுவாகும். 1948ல் உருவாக்கப்பட்ட மார்ஷல் திட்டத்தின் கீழ் அமைந்தது.

இதில் அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, கிறீஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, யப்பான், லக்சம்பேர்க், போத்துக்கல், ஸ்பெயின், சுவீடன், சுவிற்சலாந்து துருக்கி, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்றன அங்கத்துவ நாடுகள் ஆகும்.

13. உங்டாட் தாபனம் ( UNCTAD ) :-

வளம்மிக்க நாடுகள் சீரழிந்திருக்கும் நாடுகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், 1964ல் ஜெனீவாவில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதில் 150 அங்கத்துவ நாடுகளுள்ளன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உலக சனத்தொகையில் மூன்றில் இரு பங்கைக் கொண்டிருந்த போதிலும் சர்வதேச வர்த்தகத்தில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்கையே வகிக்கின்றன, மேலும் கடன்களும் ஆண்டிற்காண்டு அதிகரிக்கின்றது. இன் நிலையிலிருந்து கைதூக்கி விடுவதற்க்காக உங்டாட் பல செயற் திட்டங்களை மேற் கொண்டுள்ளது.

1. வர்த்தகத்திற்கான தீர்வை வரிகளைக் குறைப்பதன் மூலம் அல்லது நீக்குவதன் மூலம் இவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு விருத்தியடைந்த நாடுகளில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல்.

2. இந்நாடுகளின் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தி ஒரு சிலதில் தங்காமல் விலைத் தளம்பல் ஏற்படாமல் தவிர்த்தல்.

3. தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை விருத்தியடைந்த நாடுகளிடமிருந்து நியாயமான விலையில் பெற்றுக் கொடுக்க முயல்கிறது.

சுருங்கக் கூறின் அங்கத்துவ நாடுகளின் இறைமையையும் சுதந்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சர்வதேச ரீதியிலான ஒரு பொருளாதாரக் கட்டுக் கோப்பை அமைப்பதற்கு உதவிகளைச் செய்கின்றது.

14. கொழும்புத் திட்டம் (COLOMBO PLAN ) :-

தென் ஆசிய தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார சமூக முன்னேற்றத்துக்கான திட்டமாக 1950 ஜனவரி மாதத்தில் கொழும்பில் நடந்த பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் உருவாக்கப்பட்டது.

விவசாயம், செய்திப்பரிமாற்றம், சக்தி, கல்வி, சுகாதாரம், போன்ற அபிவிருத்திக்கு குறிப்பாக தொழில் நுட்ப அபிவிருத்திகளுக்கு உதவி வருகிறது விருத்தியடைந்த அங்கத்தவ நாடுகள் உதவி புரிகின்றன தொழில்நுட்பம் அதிகம் வழங்கிய நாடு ஐக்கிய அமெரிக்கா இத்திட்டத்தின் கீழ் வங்களாதேசத்தில் குழாய்க்கிணறுகளை அமைக்க அவுஸ்திரேலியாவும் நேபாளத்தில் காட்டுப்பாதுகாப்புத் திட்டத்திற்கு ஐக்கிய இராச்சியமும் இவ்வாறு பல நாடுகளின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுகிறது.

மேலும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களின் புனர்வாழ்வுக்கான திட்டமொன்று 1973ல் வகுக்கப்பட்டது. அவர்களைத்திருத்தல், எடுத்துச் செல்வதைத் தடைசெய்தல் அதன் தீமை பற்றிய கருத்தரங்கு நடத்துதல் அவைபற்றிய நூல்கள் போன்றவற்றை உறுப்பு நாடுகளுக்கு வழங்குதல், போன்ற பல திட்டங்களை குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றது.

15. ஆசிய அபிவிருத்தி வங்கி:- ( A. D. B)

1966ல் நிறுவப்பட்ட இவ்வங்கியின் தலைமையகம் பிலிப்பைன்ஸ் நாட்டின் மனிலா நகரத்திலுள்ளது. இது ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 31 நாடுகளையும் வெளியேயுள்ள மேற்கு ஐரோப்பா அமெரிக்கா போன்ற 14 நாடுகளையும் உறுப்பு நாடுகளாகக் கொண்டது.

ஆசிய பசுபிக் வலயத்தின் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியைக் கொடுத்தல் மூலதனத்தையும், தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொடுத்தல். 1986ல் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தித்திட்டம், தொழிற்துறைப்பயிற்சித்திட்டம் நகர அபிவிருத்தி சார்ந்த மாநகரத்திட்டம் என நான்கு திட்டங்களுக்கு கடன் அனுமதிக்கப் பட்டுள்ளது. இதுவரை ஆசிய அபிவிருத்தி வங்கி 109 திட்டங்களுக்கு தொழில் நலனுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இதில் 46% விவசாயத்துறை சார்ந்ததாகும். மேலும் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. ஏனைய சர்வதேச தாபனங்களுடன் சேர்ந்து செயற்பட்டு வருகிறது.

ஏனைய நிறுவனங்களாக: மேலும் பலவுள அவற்றுள்ளும் அராபிய நாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன் 1945 மார்ச் 22ம் திகதி கெய்ரோவில் அரபு நாடுகளின் சம்மேளனம் ( ARAB LEAGUE ) உருவாக்கப்பட்டது. 1963 மே மாதம் 32 ஆபிரிக்க நாடுகள் அடிஸ்அபாபா நகரத்தில் ஒன்றுகூடி நூது சுதந்திரம் பொருளாதார விருத்தி கலாச்சார ஒத்துழைப்பு என்பவற்றுக்காக ஆபிரிக்க ஒற்றுமை நிறுவனம் ( O.A.U ) உருவாக்கப்பட்டது. 1948 ஏப்பிரல் மாதம் அமெரிக்க நாடுகள் பல ஒன்றிணைந்து அப்பிராந்திய சமாதானம், அமைதி, பொருளாதார விருத்தி, இறைமை காத்தல் என்ற அடிப்படையில் அமெரிக்க நாடுகள் நிறுவனத்தை (OAS ) அமைத்துக் கொண்டன. கொமிக்கோன் நிறுவனம் கிழக்கு ஐரோப்பிய பொதுவுடைமை நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் நோக்குடன் உருவாக்கப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமது வர்த்தக விருத்திக்காக அமைத்துக் கொண்ட நிறுவனமே ஐரோப்பிய சுதந்திர வர்த்தகச் சங்கம் ( EFTA ) ஆகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் சோவியத்தின் ஊடுருவலை தடுப்பதற்காக வட எல்லையில் பாதுகாப்பை உருவாக்க வேண்டி சென்ரோ ( CENTO ) நிறுவனம் 1955ல் உருவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் பாக்தாத்தில் கைச்சாத்திடதால் பாக்தாத் ஒப்பந்தம் எனப்பட்டது. மேலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளை உறுப்பினராகக் கொண்ட சுதந்திர வர்த்தகச் சங்கம் லப்ரா ஆகும். மத்திய அமெரிக்க நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பொதுச்சந்தை ( CEMA ) எனும் நிறுவனமும் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகம் ( ECOWAS ) என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க ஏனைய சர்வதேச நிறுவனங்களாகும்.

இவ்வாறாக உலகில் உலகின் பொதுவானதாகவோ, அல்லது குறிப்பிட்ட பிரதேச நிறுவனங்களாகவோ பல சர்வதேச நிறுவனங்கள் குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக அல்லது பலதரப்பட்ட நோக்கங்களுக்காக அதிலும் சில சுய நோக்கடிப்படையில் சில உலகப்பொது நோக்கடிப்படையில் எனப் பலதரப்பட்ட வடிவங்களில் உருவாக்கப் பட்டு இயங்கி வருகின்றன எது எவ்வாறாயினும் அந்நிறுவனங்களின் நோக்கம் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற தன்மைகளிலேயே உள்ளது.

வட்ட மீயம் வளர எமது வாழ்த்துக்கள்....



கலா எலக்ரிகல்ஸ்



உங்கள் பற்றரிகளை H1/L0. முறையில் சார்ச் செய்யவும் பற்றரிகளுக்கு உத்தரவாதத்துடன் புதிய செல்ஸ் மாற்றிக் கொள்ளவும், சகல விதமான பற்றரி திருத்த வேலைகளு-
-க்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே

இடம்

கலா எலக்ரிகல்ஸ்

சிவிக்ஸ் சென்ரர் வட்டக்கச்சி.

# உலகை சூழும் பேரபாயம்
****************

இ. பிரேம்குமார்
13 பிரிவு மாணவன்.

உலகமானது மனிதனது புதிய சிந்தனை சக்தியால் உருமாறி வருகின்றது. எ என்பது உண்மை. இருந்த போதும் அவனது சில செயல்கள் மனித குலத்தையே பூண்டோடு ஒழிக்கும் நிலைக்கு வந்திருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். ஏனெனில் இயற்கையின் நன்கொடை எனப்படுகின்ற காட்டுவளத்தை அசுர வேகத்தில் அழித்து வருகின்றான். இது மட்டுமா போதாக்குறைக்கு நவீன தொழிற்சாலைகள் முதலிய இயந்திரமயமாக்கல் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றான். இவ்வாறான பல நடவடிக்கைகள் காரணமாக மனிதன் வளர்ச்சி அடைவதற்கு பதிலாக தன் வாழ்வின் கடைசி அத்தியாயத்தை புரட்டிக் கொண்டிருக்கின்றான் என்பது அவற்கு புரியவில்லை. ஏனென்றால் காட்டு வளத்தை அழிப்பதால் பல தீங்குகளும் ஏன்? பெரும் அபாயங்களும் ஏற்படலாம் என்று புவியியல் அறிஞர்கள் கூறி வருகின்றனர்.

காட்டு வளமானது இயற்கையால் மனிதனுக்கு வழங்கப்பட்ட சிறந்த ஒரு கொடையாகும். இக்காட்டுவளத்தை மிக வேகமாக அழிப்பதால் பூமியின் வெப்பம் இப்போது உள்ள நிலையிலும் பார்க்க பன்மடங்கு அதிகரிக்கலாம் என்று புவியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மேலும் நவீன தொழிற்சாலைகள், அதிலிருந்து வெளிவிடப்படும் பொருட்கள், வாயுக்கள் முதலியன வளிமண்டலத்தை அடைந்து வளிமண்டல இயல்பையே மாற்றி விடுகின்றன. வளிமண்டலமானது பல உட் பிரிவுகளைக் கொண்டது. வெப்ப தட்பத்தை சமாளிக்கும் திறனுடையதாக இருந்து வருகின்றது. காடழிப்பு, தொழிற்சாலை புகை முதலிய செயற்பாடுகள் காரணமாக $CO_2$ காபன் டை ஒக்சைட் என்னும் வாயு வளிமண்டலத்தை அடைந்து வளிமண்டலத்தை வெப்பமாக்கி வருகின்றன. இதனால் பல வின் விளைவுகள் ஏற்படலாம் என புவியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

அதாவது காடழிப்பு, தொழிற்சாலை புகை வெளியேறல் முதலிய செயற்பாடுகள் காரணமாக எந்நேரமும் வளிமண்டலம் வெப்பமாக இருப்பதாலும் இங்கு உருவாகும் முகில்களும் காற்றுகளும் கூடிய ஈரப்பதன் குறைவான மழை பொழியாமல் முனைவு பகுதிகளுக்கு செல்வதாகவும் முனைவு பகுதிகள் வெப்ப காற்றுக்கள் முகில்கள் காரணமாக முனைவுப் பகுதிகளில் இருக்கும் பனிக்கட்டியானது கரைந்து உருகி ஓட ஆரம்பித்தால் கடல் நீர் மட்டம் கிட்ட தட்ட 40' - 50' உயரம் வரை அதிகரிக்கலாம் எனவும் இவ்வாறு அதிகரித்தால் உலகில் உள்ள சில பெரிய தீவுகளும் கண்டங்களின் கரையோர பகுதிகள் முதலியன கடலினுள் மூழ்கடிக்கப்பட்டு அழியலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள் கூறுவதாவது மாலைதீவு இலங்கையில் சில பகுதிகள் அந்தமான் நீக்கோபார் போன்ற தீவுகளும் மூழ்கலாம் எனவும் கூறியுள்ளனர். மேலும் உலகில் சில தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்தி முறைமையினை மாற்றிக் கொள்வதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் பல நாடுகள் காடுகளை அழிப்பதை நிறுத்தி காடு வளர்ப்பினை ஊக்கப்படுத்தியும் வருகின்றன.

இவ்வாறான பல நடவடிக்கைகள் மூலம் தான் மனித இனத்தை பூண்டோடு அழியவிடாமல் பாதுகாக்கலாம் என நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் தான் இந்த அபாயத்திலிருந்து நாம் மீளமுடியும். என்பதில் ஐயமில்லை.

# தமிழ் மொழியில் சிற்றிலக்கியங்கள்

**********************

கௌரி. இ

ஒரு நாடும் மொழியும் செழிப்புற்று வளர்வதற்கு பெருந்துணையாக இருப்பன அந்தந்த நாட்டு இலக்கண இலக்கியங்களே ஆகும். பண்பாடு நிறைந்த ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த நாகரிகங்களையும் ஒழுகலாறுகளையும் அடுத்தது காட்டும் பளிங்குபோல எடுத்துக்காட்டுவன அந்நாடுகளில் வழங்கும் உயர்ந்த இலக்கண இலக்கியங்களேயாகும். "புறத்து மரக்கோட்டம் தீர்க்கும் மாண்பு பஞ்சி நூலுக்கிருப்பது போல் மாந்தர் அகத்து மனக்கோட்டம் தீர்க்கும் மாண்பு சொல்நூலுக்குண்டு" என்பது சான்றோர் கண்ட உண்மை. நூலின்கண் நல்லுணர்வு இன்றும் நூல்கள் புலவர்களின் பொய்யா நாவால் புகழப் பெறும் எய்யாக் கருவூலங்களாகும். இலக்கியங்கள் வாழ்க்கை வழிகாட்டியாக விளங்குவதோடு நாட்டு வரலாறு தவிலும் நயமுடை நூலாகவும் திகழ்கின்றன. இந்த வகையிலே செந்தமிழாகிய நம் தமிழ் மொழியின் சிறந்த படைப்புக்களாக மொழிச் செறிவின் சாறாக தயிர்ச்சட்டியில் வெண்ணெய் திரண்டு வருவது போல் பல்வேறுவகை சிறிய இலக்கியங்களின் செறிவாகத் தோன்றியவையே திரண்ட சிற்றிலக்கியங்களாகும். தமிழ் மொழியின் பல்வேறு இயல்புகளையும் நோக்கங்களையும் கொண்டுள்ள தன்மையின் சிற்றிலக்கியங்கள் பல வகையாய் எண்ணிறைந்தனவாய் எழில் பெற இலங்குகின்றன. அவற்றின் தொகை தொண்ணூற்றாறு வகை என அறிஞர் கூறுவர். அவற்றுள் சில கோவை உலா, பிள்ளைத்தமிழ், பரணி, அந்தாதி, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி, தூது, மடல், சதகம்...... எனப்பல.

சிற்றிலக்கியங்கள் கி.பி 8ம் நூற்றாண்டு முதல் வரவரப் பெருகி வளர்ந்துள்ளன. தமிழ் மொழியில் வழங்கி வரும் பிரபந்தங்களையே சிற்றிலக்கியங்கள் என்பர். தமிழ் மொழியில் வழங்கிவரும் பிரபந்தம் என்பது நன்கு கட்டப்பட்டது என்னும் பொருள்தரும் வட சொல்லேயாகும். எழுத்து முதலிய பலவகை உறுப்புக்களால் அகமும் புறமுமாகிய பொருளுக்கு இடமாக இயற்றப்படுவதால் இவை இப் பெயர் பெற்றன. சிற்றிலக்கியங்களின் வகை தொண்ணூற்றாறு எனக் கூறப்பட்டாலும் இப்பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் பன்னிரு பாட்டியல், வெண்பா,பாட்டியல் போன்றவற்றில் ஒன்றிலேனும் இவை தொண்ணூற்றாறு என்னும் வரையறை கூறப்படவில்லை. இவற்றில் கூறப்படாத சிற்றிலக்கியங்கள் பல இன்று வழக்கில் உள்ளன. இன்னும் காலத்திற்கேற்றவாறு பற்பல இலக்கியங்கள் தோன்றவும் கூடும் எனவும் அவை இத்தனை வகை எனவும் வரையறுத்துக் கூற இயலாது எனவும் வித்துவான் [illegible].ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் கூறுகிறார். தொல்காப்பியனார் செய்த காலத்தில் இத்துணை பல்வேறு வகையான சிற்றிலக்கியங்கள் இல்லையாயினும் காலப்போக்கில் அவை தோன்றுவதற்குரிய விதியை அவர் வகுத்துள்ளார். இச்சிற்றிலக்கியங்களில் நூலறிவும் உலகியல் அறிவும் நிரம்பிய கற்பனைத்திறன்களைக் காணலாம். இவற்றில் காவியச்சுவை களிநடம் புரிகின்றன. இச்சுவைநிறைந்த சிற்றிலக்கியங்களில் சிலவற்றின் தன்மைகளை எடுத்து நோக்குவோம்.

முதலாவதாக உலாபிரபந்தத்தை எடுத்து நோக்குவோம். உலா என்பது பேதை. பெதும்பை, மங்கை, மடந்தை அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் எழுவகை பருவமகளிரும் கண்டு காதல் கொள்ளும் வண்ணம் உலாவருவதை கூறுவது. கலி வெண்பா என்னும் செய்யுள்வகையினால் இதனைப் பாடுதல் மரபு.

அவ்வாறு பல மங்கையர் காதல் கொள்வதாகப் பாடுதல் அற நெறிக்கு மாறுதலின் அம்மங்கையரைப் பரத்தையர் எனக் கொண்டார் உரையாசிரியர். உலா நூல்களில் முதலில்தோன்றியதாக ஆதியுலா எனப்படும் திருக்கைலாய ஞானவுலா விளங்குகிறது. இதைத் தொடர்ந்து மூவருலா, இருவருலா மதுரைச் சொக்கநாதருலா, ஏகாம்பர நாதருலா, திருவானைக்காவுலா முதலிய பல்வேறு உலாப் பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. உலா நூல்களைச் சிலர் தமிழ் நாட்டுப் பெண்களின் கற்பொழுக்கத்திற்கு மாசு கற்பிக்கும் நூல்கள் எனக் குறைகூறுவர் அவர்கள் கூற்றுத்தவறுடையது. உலா நூல்கள் வெறும் கற்பனை நூல்களே. அவை ஒழுக்கத்தை வரையறுக்க எழுந்த நூல்களே அல்ல. நாம்பாடிப்புகழ் மேற் கொள்ளும் தலைவரின் அருமை பெருமைகளைச் சுவைபடக்கூறிச் செல்வதிலே அவற்றின் குறிக்கோள் எனும் கலைவளை மறந்து வாழுங்காரிகையர் எவரும் உலாவரும் தலைவனைக் கண்டு காதல் கொள்வதாக எந்த உலா நூலிலும் கூறப்படவில்லை நச்சினார்க்கினியர் தம் சூத்திர உரையிலே "ஊரொடு தோற்றமும் பரத்தையர்க் கன்றிகுலமகளிர்க்கு கூறப்படாது" எனவும் "உத்தம மகளிர் ஒழிய மற்றைக்கன்னியர் எல்லாம் காமன் சரந்தர கலையுடம்பழியக் கவிழ்ந்து வெம்பி....." வருந்தினர். எப்பவை கொண்டும் உலா நூல்களை மகளிர் கற்பொழுக்கத்திற்கு மாசு கற்பிப்பதாகச் சொல்லுதல் பொருந்தாது. முதலில் தோன்றிய உலாவாக திருக்கைலாய ஞானவுலா விளங்குவதால் இதனை ஆதியுலா என்று ஆன்றோர் போற்றுவர். அரும் பெரும் அதிரான அருணகிரிநாதர் தமது திருப்புகழ்ப்பாடலின் கண் இதனைச் சிறப்பித்துப்பாராட்டியிருத்தல் இதன் அருமை பெருமைகளைப் புலப்படுத்தும். சிவபெருமான் சிவலோகத்தின் கண் சிவபுரத்தில் உள்ளதிருக்கோயிலில் வீற்றிருந்தார். தேவர்கள் அனைவரும் ஒருங்குகூடிச் சிவபெருமானைக்கண்டு தொழுது "எங் கட்குக் காட்சி அருள்" என்று இரந்து நின்றார்கள். இறைவனும் அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கி உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்பட்டதே திருக்கைலாய ஞானவுலாவாகும். இவ் உலா நூலை சேரமான் பெருமான் தாம் திருக்கைலாயத்துக்கு சென்று கொண்டிருக்கும் வழியில் இதனைப் பாடியதாகக் கூறுகிறார். தமிழ் இலக்கியப்பரப்பிலே சிறப்பிற்குரிய உலா நூல்களில் மூவருலாவும் ஒன்று "கோவை, உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்" என்ற சிறப்புவாய்ந்த கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் அநபாயன், விக்கிரமன், ராஜராஜன்,ஆகிய மூன்று சந்ததிச் சோழப் பெருமன்னர்களைப் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டு பாடப் பட்டது. இதன் பின்னரும் பல உலா நூல்கள் தோன்றியுள்ளன.

சிற்றிலங்களின் வரிசையில் சிறப்பிடம் வாய்ந்த அடுத்த இலக்கியம் பரணி ஆகும். போர்க் களத்திலே யானைகளைக் கொன்றுகுவித்து குருதி வெள்ளம் பாயச் செய்த அரசனது வீரச் செயலைப் புகழ்ந்து பாடுவதற்கென அமைந்த நூல்வகையே பரணி. பரணி போர்க்களக்காட்சியை விளக்கும் இலக்கியம் பன்னிருபாட்டியல் "எழுதலைப் பெய்தராவுடை இடமே அடுகளத்தட்டான் பாடுதல் கடனே" என்று பரணிக்கு இலக்கணம் கூற இலக்கணவிளக்கப்பாட்டியல் "ஆனையாயிரம் அமரிடைக் கொன்ற மானவனுக்கு வகுப்பது பரணி" எனவரையறை செய்கிறது. பரணி என்னும் பெயர் வரக் காரணம் பலவாறு கூறப்படினும் காளியையும் யமனையும் தெய்வமாகப் பெற்ற பரணி என்னும் நாள் மீனில் வந்த பெயரே பொருத்தமானது எனப்படுகிறது. பரணிப்பிரபந்தங்களில் சிறப்பானதாகப் போற்றப்படுவது "பரணிக்கோர் செயங்கொண்டார்" எனப் போற்றப்படும் செயங்கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணி ஆகும். இதை விடதக்கயாகப்பரணி, பாசவதைப்பரணி, மோகவதைப்பரணி, போன்றவும் சிறப்பான பரணி இலக்கியங்களே இவ்விலக்கியவகை போர்க்களக்காட்சிகளையே கூறுவதால் துடிப்பானதும் நடிப்பானதுமான ஓசையே மிகுந்து காணப்படும். இவ் இலக்கியங்களில் உயர்வு நவிற்சியும் பேய்களைப்பற்றிய கற்பனையும் மிகுதியாகக் காணப்படும்.

முதலில் தோன்றிய பரணியான கலிங்கத்துப் பரணி பன்னிருபாட்டியல் நூலார் கூறும் பரணி உறுப்புக்கள் பத்தினையும் பெறவில்லையாயினும் சிறப்பாக இந்திரசாலம் இராஜ பாரம்பரியம், அவதாரம் என்னும் மூன்று உறுப்புக்கள் இடம் பெறுகின்றன. பொதுவாக சோழர்காலத்துச் சமய ஒருமைப்பாட்டினை நூலில் காணுவதுடன் சங்க காலத்தில் இருந்து தொடர்ந்து வந்த அகத்திணை மரபுகளை வேணுகின்றவகையிலும் இது சிறப்புடையது. உ--ம்

"கூடிய நூன் களவதனிலே
கொடைநரதங்களொடு அளவுறு
ஊடிய நெஞ்சிறேடுவீர்
உமது நெடுங்கடை திறமினோ"

அகத்திணை மரபுடன்.
புறத்திணை அம்சங்களும் நூல் முழுவதும் விரவிக்காணப்படுகிறது. ஒட்டக் கூத்தரின் தக்கயாகப்பரணியில், அழித்த வரலாற்றை பன்னிருபாட்டியல் கூறும் பத்து உறுப்புக்களையும் அடக்கிப்பாடப்பட்டது. இதைத் தொடர்ந்து அரசன், தெய்வம் முதலியன வகித்த இடத்தை தத்துவங்கள் பெறத் தொடங்கியதும் தத்துவப்பரணிகளிகளான பாசவதைப் பரணி, மோக வதைப் பரணிகள் தோற்றம் பெற்றன.

சிறந்த சிற்றிலக்கியங்களில் கலம்பகமும் ஒன்று பலவகை நிறமும் மணமும் கொண்ட மலர்களைக் கொண்டு தொடுக்கப்படும் மலர் மாலையைக் கலம்பகமாலை என வழங்குவது மரபு "கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல்" என்று தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சிப் பாத் தொடரால் இது புலப்படும். மதங்கு, அம்மனை காலம் சம்பிரதம், புயவகுப்பு, கார், தவம், குறம், மறம், பாண், தழை, களி சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, ஊசல், என்னும் பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டு பாக்களும் பாவினங்களும் பல்வகை நயங்களும் சொரியப் பாடப் பட்டதால் கலம்பகம் என்பது அவ்வகை நூலுக்கு உவமையாகும் பெயர் ஆயிற்று. இவற்றுள் பெரும்பான்மை அகத்திணைச் செய்திகளையும் சிறுபான்மை புறத்திணை செய்தி களையும் அடக்கியிருக்கும். இவை தவிர வேறுபிற உறுப்புக்களும் கலம்பக உறுப்புக் களாகவரும் கலம்பகமாலைகளுள் மதுரைக் கலம்பகமும், அழகர்கலம்பகமும் சிறப்பானவை மதுரைக் கலம்பகம் குமர குருபரராலும், அழகர்கலம்பகம் வேம்பத்தூர் புலவராலும் பாடப்பட்டது. மதுரைக் கலம்பகம் மதுரைச் சோமசுந்தரக்கடவுளை காமுற்ற கவிப்பெருந் தெய்வக்காதல் தேங்கிய உள்ளத்தடாகத்தில் முகிழ்த்தது. அழகர்கலம்பகம் பாண்டி நாட்டுத்திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியிருக்கும் கள்ளழகப் பெருமானைக் காதலித்த உள்ளத்திலின்றும் உருக்கொண்டது.

சிற்றிலக்கியவரிசையில் சிறப்புக்குரிய இன்னொரு பிரபந்தவகை அந்தாதியாகும் அந்தாதி என்னும் தொடர் அந்தம், ஆதி என்னும் இரு சொற்களால் ஆகியது. முடிவில் முதல் அந்தத்தில் ஆதி என்ற முறையில் நினைவு கொள்வதற்கும் தொடர்ந்து மாலையாக அமைதற்கு ஏற்ற கருவியாக அமைக்கப்பட்டபாவின வகையாகும். அந்தாதியென்ற பெயரில் பல நூல்கள் எழுந்தன. தொடக்க காலத்தில் எழுந்த அந்தாதி நூல்கள் பெரும்பாலும் வெண்பாவில் அமைந்தன பின்னர் விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலியனவும் இடம் பெற்றுள்ளன. அந்தாதியமைப்பு பெருகப் பெருக அவற்றின் வகைகளும் பெருகின. மும்மணிக் கோவை, நான்மணி மாலை முதலியனவும் அந்தாதியில் அடங்குவனவே.

யாப்பருங்கலம் அந்தாதிக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறும் :

"ஈறுமுதலாத் தொடுப்பதந்தாதியென்
ஓதினர் மாதோ உணர்ந்திசினோரே" பிறிதொரு நூற்பாவில்

"அசையினும் சீரினும் அடி[illegible]
முந்தா இசைப்பதந்தாதித் தொடையே"

அபிராமியந்தாதி, அற்புதத்திருவந்தாதி, திருத் தொண்டர் திருவந்தாதி முதலிய நூற்றுக்கணக்கான அந்தாதி நூல்கள் தோன்றியுள்ளன. அந்தாதிநூல்களில் சிறப்புக்குரியது காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியாகும். இது நூற் பயன் உட்பட நூற்றியொரு பாட்டுக்களைக் கொண்டது. இந்த நூல் எளிய இனிய நடையில் அமைந்ததாயினும் ஆழ்ந்தகன்றநுண்ணிய கருத்துக்களைக் கொண்டது. அம்மையார்தாம் இறைவனைக் கண்டனுபவித்த பேரின்பத்தை இறைவன் அருளால் அற்புதத்தை அந்தாதி மாலையாகப் பாடினார். அபிராமிபட்டரால் பாடப்பட்ட அபிராமியந்தாதி அகிலாண்டநாயகியான அம்மையின் திருவிளையாடல்களைக் கூறுகிறது. எளிய அழகியநடையில் ஆற்றொழுக்காகச் செல்லும் இந்நூலில் வட சொற்கள் மிகுதியாகக் காணப்படுவதுடன் எதுகை நயம் பொருந்தவும் பாடப்பட்டுள்ளது. அபிராமியந்தாதியி ல் தேவாரதிருவாசகத் திருக்குறள் கருத்துக்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

உ-ம்:- அடைக்கலம் போகேன்.... (தேவாரம்)

பிரபந்த வகைகளில் கோவை என்பதும் ஒருவகை உண்டு. ஐந்திணைக்கும் உரிய அகப் பொருள் துறைகள்பற்றி நானூறு கட்டளைக்கலித்துறையால்பாடுவது. இது நூலைப்பாட்டுடைத்தலைவன் ஒருவன் மேல் ஏற்றிப்பாடுவது அதன் கண்ணே அமைந்துள்ள அகப் பொருளுக்கு உரிய தலைவன் கற்பனைத் தலைவன் ஆவான். இவ் இலக்கிய வகை புலவரின் திறனைக்காட்டுவதற்க மட்டுமே அமைந்ததமையால் சிறப்புடைய இலக்கியமாகப் போற்றப்படவில்லை. கோவை இலக்கியங்களில் திருக்கோவையார். தஞ்சைவாணன் கோவை என்பன இன்றும் போற்றப்படுகின்றன. தெளிவும் இனிய தெள்ளு தமிழில் ஒப்பரிய செந்தமிழில் மாணிக்க வாசகரால் பாடப்பட்டதே திருக்கோவையார். "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று இறைவன் பணிப்பின் பெயரிலேயே அவர் திருக்கோவையாரைப்பாடினார் என்பர். தமிழ்நாட்டு தலைவன் தலைவியருக்குரிய அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தை களவு கற்பு என்னும் இரு பெரும்பிரிவுகளில் வைத்து இருபது கிளவிக் கொத்தாகப்பகுத்து நானூறு துறைகள் அமைந்த செய்யுள்களில் கதை போன்று இந்நூல் அமைகிறது. அகப்பொருள், புறப்பொருள் மரபை ஒட்டி ஒருவர் பெயர் கொள்ளாதநிலையில் திருக்கோவையார் அமைகிறது. இதன்பாட்டுடைத்தலைவன் தில்லைச்சிற்றம்பலவன் சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் இணைத்து தத்துவரீதியாக சமய வாழ்க்கையின் முழுமைக்கு அர்த்தம் கற்பிக்கிறது.

சிந்திக்கத்தக்க சிறப்பான சிற்றிலக்கியங்களில் பிள்ளைத்தமிழும் ஒன்று. இது தமிழ் மட்டும் காணப்படும் ஒரு இலக்கிய வகையாகும். 7ம் நூற்றாண்டில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கற்பனை செய்து பாடிய சிறப்பான செய்யுள்களே பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கியத்துக்கு தோற்றுவாய் எனலாம். சான்றோர்களையும் தேவர்களையும் குழந்தையாக கற்பனை செய்து பாடப்படும் இந்நூல் வகையில் குழந்தைகளின் வளர்ச்சிப்பருவங்கள் பத்துப்பருவங்களாகப்பகுத்து ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பாடல்கள் பாடப்படும். ஆண்பிள்ளையாயின் ஆண்பாற்பிள்ளைத்தமிழ் என்றும், பெண்பிள்ளையாயின் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்னும் பெயர் கொள்ளப்படும் பெரியாழ்வார் பாடல்களைப் படிக்கும் போது படிப்போர் உள்ளம் தாய்மை உணர்ச்சியால் நனைந்து கொள்ளும்.

54



உ-ம்:-"மாணிக்கம் கட்டி வைரம் இடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச்சிறு தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடு தந்தான்
மாணிக் குறளனே தாலே லோ!!
வையம் அளந்தானே தாலே லோ!!!"

பெரியாழ்வாரைத் தொடர்ந்து தமிழில் ஏராளமான பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றித் தமிழ் அன்னைக்குத் தாலாட்டுப் பாடி வருகின்றன. சிறந்த நாதர், நபிகள் நாயகம் போன்றோரையும் குழந்தைகளாகப் பாவனை செய்யும் பிள்ளைத்தமிழ் பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன. பிள்ளைத்தமிழுக்கு பன்னிருபாட்டியல் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறும்.

"பிள்ளையை மூன்றும் பேதையர்க்காகா
ஆடுங்கழங்கு அம்மானை ஊசல்
பாடுங்கவியால் பகுத்த வகுப்புடன்
அகவல் விருத்தத் தால் கிளை அளவாம்"

தமிழ் அன்னையை முதிர்ச்சி அடைந்து சோர்வடையவிடாமல் அவளைக் குழந்தையாக்கி எழில் பெற்ற இன்முகங்காட்டிக் குறுநகை புரிய வைப்பதில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களின் பங்கு சிறப்பானது.

செல்வம் பெற்ற கலைஞர் வறுமையால் வாடியகலைஞர்க்கு வழிகாட்டிய வண்ணம் வள்ளல் ஒருவரிடம் பொருள் பெற அனுப்புவதாக பாடும் சிற்றிலக்கிய வகையே ஆற்றுப்படை எனப்படும். ஆற்றுப்படுத்தல் வழிப்படுத்தல் ஒவ்வொரு ஆற்றுப் படையும் அதை எழுதிய கலைஞர் வகையினரின் பெயரால் பாணராற்றுப்படை, கூத்தராற் றுப்படை..... எனப்பலவாறு வழங்கும். இத்தகைய ஆற்றுப்படைகள் நீண்டபாட்டுக் களாகப் பத்து ப்பாட்டில் ஐந்து உள்ளன. திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பவையே அவை. ஆற்றுப்படைக்குத் தொல்காப்பியம் விரிவாக வரைவிலக்கணம் கூறும். ஆற்றுப்படைநூல்களில் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை சிறப்பிற்குரிய இலக்கியமாகும். இது பத்துப் பாட்டின் முதற்கண்ணதாயியும் பதினோராந்திருமுறையைச் சேர்ந்ததாகவும் நித்திய பாராயணத்துக்கும் உரிய சிறப்புடையது. இது ஏனைய ஆற்றுப்படைகளை விட வேறுபட்ட பண்புகளைக் கொண்டது. இதனைப் பாடிய நக்கீரர் சங்கப்புலவரல்ல என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. 317 அடிகளைக் கொண்ட இந்நூல் தமிழில் எழுந்த ஆற்றுப்படை நூல்களில் முதல் பத்திரமாகக் காட்சியளிக்கிறது. இதை விட இந்த நூற்றாண்டில் இலங்கைப்பல்கலைக்கழகப் பேராசிரியர் காலஞ் சென்ற திரு. கணபதிப்பிள்ளை எழுதிய "காதலியாற்றுப்படை" குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படைக்குரிய இலக்கணம் காலப்போக்கில் விரிவடைந்து சென்றது எனப் பன்னிருபாட்டியல்கூறும்.

மடல் என்றும் ஓர் இலக்கிய வகை தற்கால கட்டத்தில் அருகிக் கொண்டு வருகிறது. காதலியைப் பெறமுடியாமல் ஏமாற்றம் அடைந்த தன்னைத்தான் அழித்துக் கொள்ளும் காதலனின் நிலையை விளக்குவது மடல் என்றும் சிற்றிலக்கிய வகை. பனைமடல்களால் குதிரைவடிவாகச் செய்து அதன் மீது ஏறி தான் விரும்பிய நங்கையின் உருவந்தீட்டிய கிழியை ஏந்தி ஊரறிய வருந்துதல் மடல் ஏறுதல் என்றும் ஆகப் பொருள்தறையாகக் கூறுவர். மடல் ஏறுதல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியது, என மரபு வகுத்தனர்.

வள்ளுவர்

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்" என்பதற்கு விதிவிலக்காகப் பன்னிரு

பாட்டியலை

"மடல்மாப் பெண்டிர் ஏறார் ஏனவர்
கடவுளர் தலைவராய் வருங்காலை" என்கிற திருமங்கையாழ்வார்

பாடிய பெரிய, சிறிய திருமடல்களில் காதலி மடலேறுவதாகக் கூறியுள்ளார். இவ் இலக்கியவகை வெண்பா, கலிப்பா முதலிய பாவகைகளிலேயே செய்தல் மரபு இதற்கு எடுத்துக் காட்டாக வருவ நளாதித்தன்மடலைக்குறிப்பிடலாம்.

சிற்றிலக்கிய வகைகளில் மேற்குறிப்பிட்ட இலக்கிய வகையைத்தவிர 96 வகைப் பிரபந்தங்களில் பள்ளியெழுச்சி, அம்மானை, சிந்து, முதலியவையும் தமிழ் மொழியை வளம்படுத்த அணிகளாகத் திகழ்வனவற்றில் சிலவாகும். எனினும் தொடர்புச் சாதனங்களின் அதி துரிதமான வளர்ச்சியும், விஞ்ஞான முன்னேற்றமும் தேவைகளின் அதிகரிப்பும் வாழ்க்கை முறைகளின் அவசரப்போக்கும் சமுதாய நிலைப்பாடுகளும் இவ்வகையான பிரபந்த வகைகளில் எழுச்சி பெற வாய்ப்பு இல்லை தொடர்ந்தும் வருங்காலப் போக்கையும் சமுதாய அமைப்பையும் நோக்கும்போது இத்தகைய இலக்கியவடிவம் வளர்ச்சி பெறவோ தோன்றவோ வாய்ப்பில்லை எனினும் தமிழ் மொழியின் வளத்திலும் வளர்ச்சியிலும் சிற்றிலக்கியங்களின் பங்கு கணக்கிடமுடியாத தனிச் சிறப்பு வாய்ந்தவை என்பது தமிழ் மொழிவல்ல அறிஞர் கண்ட உண்மை.

*******

உசாத்துணை நூல்கள் :-

* சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (1வது மகாநாடு)
* சிற்றிலக்கியச் சொற்பொழி வுகள் (5வது மகாநாடு)
* இலக்கிய மரபு (மு. வரதராசன்)
* திருமுருகாற்றுப்படை (ஆறுமுக நாவலர் உரை)

"நல்நூல்கள் சிந்தனை செய்யத்தூண்டுவன"
-சாள்ஸ்லாம்-

# நாட்டுப் பாடல்கள்
************

பொ. புனிதராணி,
ஆண்டு 13 கலைப்பிரிவு.

கிராமங்களை இயற்கை தேவி எழுந்தருளியிருக்கும் கோயில் என்றும் அக் கிராமக்களை அத்தேவியை வழிபடும் மக்கள் அல்லது அடியார்கள் என்றும் கூறுதல் மிகையாகாது. அக்கிராமிய மக்கள் என்றும் எளிமையான வாழ்வு வாழ்பவர்கள் பெருஞ்செல்வமாக உழைப்பையே கருதும் அவர்கள் இயற்கையாகவே கூர்மதியும் சமர்க்காரமான பேச்சும் கொண்டவர்கள். இயற்கை அறிவும் கலையுணர்வும் கொண்ட அவர்களின் உள்ளத்திலே பற்பல காரணங்களினாலே உணர்ச்சிகள் தோன்றி கரைபுரண்டெழும் போது அவை பாடல்களாக வெளிவருகின்றன. இவை இலக்கண மரபுக்குட்படாது ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்படாது எழுத்தறிவில்லாப் பெயரறியாக் கவிஞர் களால் பரம்பரை பரம்பரையாக செவிவழியாக பெறப்பட்டு வாய் மொழியாக வரும் செல்வங்கள் கருத்தைத் தெள்ளெனவிளக்கும் எளிமை கூடிய இவை பாமர மக்களின் உணர்ச்சிகளை உயிராகக் கொண்டு நடக்கின்றன. இங்ஙனம் நாட்டுமக்களின் உள்ளத்து உணர்வுகளை, வெளிப்படுத்துவதால் நாட்டுப் பாடல்கள் அல்லது கிராமியப் பாடல்கள் என பெயர் பெற்றது.

நாகரீகம் மேம்பட்ட சமுதாயத்தினர் இசை இலக்கண அமைவோடு கூடிய சங்கீதத்தினை பண்பட்டதொரு, தலையாகப் போற்றுவது போல நாட்டுப்பாடல்களையும் போற்றிக் காக்கின்றனர். ஆதிமனிதன் தன் மன எழுச்சிகளை வெளிப்படுத்தி இன்பம் பெறுவதற்காக ஆடலையும் பாடலையும் கருவியாகக் கொண்டான். ஏடு எழுத்தாணி, அச்சியந்திரம் எதுவும் தோன்றுவதற்கு முன்னரே இப்பாடல்கள் வாய்வழியாக எங்கும் பரவின. பிற்காலத்தில் வாழ்ந்த புலவர்களும் இசை வல்லோரும் அவற்றைப் பின்பற்றி இசை அமைப்பும், கற்பனைச் செறிவும், சொல் நயமும் கொண்ட பாடல்களை இயற்றி உயரிய கலையான சங்கீதத்தை வளர்த்தனர். எனவே நாட்டுப் பாடல்கள் மூத்த கலையாவதோடு சங்கீதக் கலையின் வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் விளங்குகின்றன. இந்நாட்டுப் பாடல்கள் யாவும் மக்களின் இயைப் போக்கு, நம்பிக்கைகள், ஆசைகள், பழக்க வழக்கங்கள், வாழ்வின் நடைமுறைகள் என்பனவற்றின் அளவுகோல் எனலாம். ஒரு நாட்டின் பண்பாட்டை அறிவதற்கு இதனைவிட மேலான பொருள் எதுவுமில்லை. இவற்றில் ஆன்மதத்துவம், சிருஷ்டிதத்துவம் என்பன இவற்றுக்கொரு உரையாசிரியர் தேவையற்ற வகையில் எளிமையாகவும் உவமைச் சிறப்போடும் கற்பனை நயத்தோடும் விளங்குகின்றன. இதனைவிட மக்கள் அனைவரும் ஒரே வகையான இன்பத்திலும் துன்பத்திலும் இயங்குகின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

இப்பாடல்கள் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்து கின்றன. அதாவது ஒருவன் பிறந்து இறக்கும் வரை மனிதனுடைய வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் நாட்டுப் பாடல் பங்கேற்றுள்ளமையைக் காணலாம். இவ்வகையில் இவை பல பிரிவாக பிரிக்கப்படுகின்றன. உயரிய கருத்துக்களும் தத்துவமும் கொண்டு விளங்குவன ஒரு வகையின. இவை சிறிது நாகரீகம் படைத்தோரிடையும் வழங்கி வருகின்றன. விழாக் காலங்களில் ஆனந்தக் களிப்போடு பெண்களின் வாயிலிருந்து பிறப்பன இன்னொரு வகையின. சரித்திர சம்பந்தமான வீரதீரச் செயல்களின் அடிப்படையில் பிறப்பன இன்னொரு வகையின. தாய்மார் மெல்லிசையோடு பாடும் தாலாட்டுப் பாடல் இன்னொரு வகையின. காதலும் நகைச்சுவையும் உயிரோட்டமாக பிளிர நெஞ்சத்தைக் கிள்ளும் திறன் கொண்டன. இன்னொரு வகையின் இவற்றைவிட பொழுது போக்காகவும் வழிபாட்டிற்காகவும் பாடப்படும் கும்மி, கோலாட்டம்,

அம்மானை, காவடிச்சிந்து, மாரியம்மன்பாட்டு, வில்லுப்பாட்டு போன்றன இன்னொரு வகையின. இவை தவிர தொழில் சோர்வு நீங்கப் பாடுவன இன்னொரு வகையின். மரண வீட்டில் பாடப்படும் ஒப்பாரியும் நாட்டார் பாடலுக்குள்ளடங்கும்.

மருத நிலத்தைச் சேர்ந்த கிராமங்களிலே பரந்தகளனிகளிலே வேலை நடைபெறும் பொழுது அங்கு வேலை செய்யும் உழவன் உழத்தி வாய்களில் வரும் பாட்டுக்களில் காதல் கொஞ்சும் நகைச்சுவை விஞ்சும். அதோ ஐப்பசி மாத கடைசிப் பகுதி வரம்பின் மட்டத்திற்கு நீர் அசைந்து கொண்டிருக்கிறது. அந்நீருக்குமேல் பசிய நெற்பயிர்கள் தெரிகின்றன. அங்கு ஆண்களும் பெண்களும் களை எடுக்கின்றனர். அவர்களை மேற்பார்வை செய்ய பொன்னுச்சாமி வரம்பில் நிற்கின்றான். அவன் களை எடுக்கப் பிந்தும் பெண்ணை வேடிக்கை செய்து "கண்ணாடி வளையல் போட்டு
களை எடுக்க வந்த புள்ளே
கண்ணாடி மின்னலிலே - உன்
களை எடுப்புப் பிந்துதடி" எனப் பாடுகின்றான்
அவனுக்கு அவள் சளைத்தவளல்ல உடனே
"வாய்க்கால் வரப்புச்சாமி
வயற்காட்டு பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்கு
காவலுக்கு வந்த சாமி" எனப் பாடுகிறாள்
இதிலே கேலியும் கிண்டலும் இழையோடிக் கிடக்கின்றன. இதோடு இதோடு அறுவடைக் காட்சி ஒன்றினையும் காண்பது நன்று. நெற்பயிர் குலை சுமந்து கல்வியில் வல்ல வித்துவர் போன்று தலை வணங்கிக் கிடக்கிறது. குல தெய்வத்தை வணங்கி தொழிலாளர் அரிவு வெட்டத் தொடங்கினர். அவர்களுள் ஒருவன்.
"மட்டுருக்காலே அரிவாளைச் செய்து
மாரிலங்கம் பிடிதன்னை இறக்கி" எனப் பாட
அனைவரும் அதனை ஒலித்து "தெந்தன தெந்தன தென்னா" என்ற தாளக்கட்டையும் தொடர்கின்றனர்.

தாலாட்டும் இடத்திற்கிடம் வேறுபடுகின்றது. ஊரார் மலடி என்று சொல்லாமல் வந்துதித்த தன்மகனை ஒரு தாய்
"மலடி மலடி என்று மாநிலத்தோர் ஏசாமல்
மலடிக்கொரு குழந்தை மாயவனார் தந்த பிச்சை
இருளி இருளி என்று இவ்விலத்தோர் ஏசாமல்
இருளிக் கொரு குழந்தை ஈசனார் தந்த பிச்சை"
எனத் தன் உள்ளத்திலுள்ள உணர்வுகளைக் காட்டுகிறாள். திருமண வைபவத்திலே அறுகரிசி இடும் சம்பவம் வந்து விடுகிறது அதனை "
"அறுகரிசி தான் இடுவோம் அதற்குரிய பேர்களெல்லாம்
வாரி இறையுங்கோ சிறு மொழியாள் பைங்கிளிக்கு
ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி
மூங்கில் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருங்கோ".
என மனமகிழ்ந்து பாடப்படுகின்றது "அந்தோ" அந்த வீட்டுத் தலைவன் இறந்து விடுகிறான். ஊர்மகளிர் எல்லோரும் சேர்ந்து ஒப்பாரி சொல்கின்றனர். அவர்களில் ஒருத்தி
"பொழுதாய் இலங்குவாய் - நீயும்
பொழுது பட்டால் மங்காயே
நிலவாய் இலங்குவாய் - நீயும்
நிலவு பட்டால் மங்காயே" என உரத்து இசைக்கிறாள்.

இவ்விதமான பாடல்களுக்கு இலக்கியத் துறையில் பெருமளவு இடமுண்டு. புலவர்கள், கவிஞர்கள், இசைவல்லோர் மட்டிதர்கள், போன்றோர்கள் இப்பாடல்களைத் தழுவி பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். உதாரணமாக சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல் வரிப்பாடல்களும் பல புராணவகைகளும் நாட்டுப் பாடல்களைத் தழுவியனவே அன்றி திருவாசகத்தில் வரும் அம்மானையும் இதைத் தழுவியதே. கோபால கிருஷ்ண பாரதியார், சுப்பிரமணிய பாரதியார் இப்பாடல்கள் கவரப்பட்டு இதனைப் பின்பற்றி பாடினார்கள். அமரர்மறைந்த தமிழ் பேராசிரியர் வித்தியானந்தரும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து நாட்டுக் கூத்தை அரங்கேற்றி வைத்ததுடன் பல இன்னோரன்ன பணிகளை ஆற்றியது குறிப்பிடத்தக்கது.

வாய்மொழி இலக்கியமான நாட்டுப் பாடல்கள் பாமரமக்களின் உணர்ச்சிகளை உணர்த்தும் முகமாக எளிமையோடும் இசையமைப்போடும் தாளவுறுதியோடும் கூடி உலவுகின்றன. அன்றியும் இலக்கண ரட்பம் கொண்ட இசைகளை வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கது. எனவே இத்தகையஅருஞ் சிறப்புடைய நாட்டுப் பாடல்களை நாம் பேணிக் காப்பது அவசியமாகும்.

*****

வட்ட நீபத்திற்கு எமது நல்லாசிகள்.

S.E.N வெல்டிங் வேக்ஸ்.



உங்கள் வீட்டிற்குத் தேவையான யன்னல் வகைகள், இரும்புக் கதிரைகள், மேசைகள் மற்றும்



இரும்பு வெட்டும் வேலைகள் சம்பந்தமாக நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

S.E.N வெல்டிங் வேக்ஸ்

கட்சன் ரோட் வட்டக்கச்சி

உரிமையாளர்:
திரு: ஏதல் வேட் நாதர்

ஐ. தி. சத்தியசீலன்
கலைப்பிரிவு

மீண்டும் மண்ணில் பிறப்பாயா
அன்பு வழியில் நடப்பாயா

யேசுவே பூமியில் பிறந்து விடு
யுகத்தை மாற்றி படைத்து விடு
அன்பு வழியை காட்டி விடு
அகிம்சை என்பதை படைத்து விடு

மீண்டும் மண்ணில் பிறந்து விடு
அன்பால் எம்மை அணைத்து விடு
யேசுவே மண்ணில் பிறந்து விடு
அன்பில் எம்மை திளைக்க விடு

இஸ்ரயேல் மண்ணில் உன் ரத்தம்
சிந்தியும் இன்று பயனென்ன
அன்புக்காக நீ அன்று
உந்தன் உடலிலே அடிபட்டாய்
அதனாலேயே உயிர் விட்டாய்

உன் அன்பையும் இன்று காணவில்லை
உன்னையும் இன்று கண்டதில்லை
உன்னைப் போலே தோற்றமளிக்கும்
கற்சிலை உருவம் தெரிகிறது

ஒரு கன்னத்தில் அறைந்து விட்டால்
மறு கன்னத்தை கொடு என்றாய்
அன்று சொன்னாய் இந்த வார்த்தை
இன்று கொடுத்தால் விடுவாரோ
இதையும் நீயும் அறிவாயே

விஞ்ஞானம் இன்று வளர்ந்ததனால்
அஞ்ஞானம் என்பதை மறந்து விட்டு
அராஜக வேலையில் தொடர்ந்தார்கள்
அதனால் மக்கள் அழிந்தார்கள்

ஆயுதம் என்றும் உயிர் கொல்லி
அமெரிக்க நாட்டிற்கு அது சல்லி
விடிவைத் தேடும் மக்களுக்கு
விரலால் கொடுப்பது ஒரு முத்தம்

அடியாய் அடித்து இறப்பார்கள்
மண்ணை முத்தம் இடுவார்கள்
அன்பை அவர்கள் மறப்பார்கள்
துன்பம் பலவும் கொடுப்பார்கள்

அகிம்சை என்று சொல்லுக்கு
ஆதரவளிக்க யாருண்டு
துப்பாக்கி வேட்டுகள் சட சடக்கும்
தப்பாமல் உலகில் உயிர் பிரியும்

யுத்த நாளம் நெறிக்கின்றது
ரத்த வெள்ளம் நிரம்புகிறது
ரத்த வெள்ளம் நிரம்புகிறது
புத்தன் போதனை முடங்கிறது

விஞ்ஞானம் இன்று உலகத்தில்
கொடிகட்டித்தானே பறக்கிறது
ஆனால் மனித உயிர்கள் தான்
அற்பமாக இருக்கின்றது.

இரத்த வாடை மணக்கிறது
இன்று இங்கே உலகத்தில்
பிணங்கள் உண்ணும் கழுகுகளாய்
யுத்த விமானம் பறக்கிறது

லட்சம் லட்சமாய் உயிர் உலகில்
இறப்பதனாலே எது பயன்
மிச்சம் மீதி இல்லாமல்
மக்கள் அனைவரும் அழிவதற்கா
அணுக் குண்டு என்று சொல்கின்ற
அசுரனைக் கண்டு பிடித்தார்கள்

வயல் வெளி எரியுது வெடி குண்டால்
நகரங்கள் நொறுங்குது வெடி குண்டால்
காடுகள் எரியுது வெடி குண்டால்
என்னெய் வயல்களில் வெடி குண்டால்
எரியும் மக்களும் பலவுண்டாம்

இத்தனை இந்த இயற்கைகளை
அழிப்பதற்கு தானே வெடி குண்டு
அத்தனை செய்த செயற்கைகளை
அழிப்பதற்கு தானே வெடி குண்டு

மனிதரை மனிதர் அழிக்கும் காட்சி
உலகத்தில் இன்று தொடர்கிறது
மீட்பர் வருகையை எதிர்பார்த்து
மீண்டும் உன்னைத் தொழுகின்றோம்

விஞ்ஞானத்தை வளர்த்து விட்டால்
நவீன நவீன தொழில் நுட்பம்
நவீன சேவை என்றார்கள்
விஞ்ஞானம் அதனால் வளர்த்தார்கள்
வெடிகுண்டை ஏனோ கண்டார்கள்
துடியுண்டு மக்கள் இறக்கின்றார்

வெடி. குண்டின் வாசனை முகர்ந்தாயா
துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டாயா
கண்ணீர் புகைகளை பார்த்தாயா
கலங்கும் கண்களைப் பார்த்தாயா

மனித குலத்தை அழிப்பதற்கு
மகத்தான ஒரு பலி யொன்று
விஞ்ஞானிகளினால் விரைந்திங்கு
வருவதன் முன்பே பிறந்துவிடு

அமைதி இழந்த மக்களுக்கு
அன்பை கொடுத்து உதவி விடு
மக்களை நீயும் காத்து விடு
மனிதரை மனிதராய் ஆக்கி விடு

மனித உயிர்க்கு விலைமதிப்பில்லை
என்று அன்று சொன்னார்கள்
இன்று எல்லாம் இலவசம் தான்
இதையும் நீயும் அறிவாயே

இலவசமா இன்னுயிர்கள்
இடையில் பிரிந்து போவதனால்
புவியெல்லாம் மரண ஓலம்
இன்றும் நீயேன் பிறக்கவில்லை

உந்தன் மக்கள் படும் துன்பம்
இன்று நீயும் உணராயா
நீயேன் மீண்டும் பிறக்கவில்லை
அதனால் அன்பு வளரவில்லை

அன்பை நிறைத்திய அன்பு இன்று
எங்கோ சென்று மறைகிறது
பாபங்களின் சுமையோ இன்று
சுமக்க முடியாமல் இருக்கின்றது

இயேசுவே மீண்டும் பிறந்துவிடு
அன்பை உலகில் வளர்த்து விடு
பொறமை இனியும் கொள்ளாதே
பொசுங்கி விடும் உன்புவி
உடனே இங்கு பிறந்து விடு
உலகில் அன்பை வளர்த்து விடு

வட்ட தீபம் புதுப் பொலிவுடன் திகழ எமது வாழ்த்துக்கள்!

## சேகர் புத்தக நிலையம்

* பாடசாலைப் புத்தகங்கள், * அப்பியாசக் கொப்பிகள்.
* பாடசாலை உபகரணங்கள், * பத்திரிகைகள்
மற்றும்
* சவர்க்காரம், பிஸ்கற் வகைகள், பால் மா வகைகள்,
* சகலவித எந்திர எண்ணெ வகைகள்
தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்
கொள்வதற்கு நாட வேண்டிய ஒரே
இடம்

SEKAR BOOK SHOP
SILVA ROAD
VADDAKACHCHI.

LUSHIAN

" கல்லா ஒருவன் தகைமை தலைப் பெய்து
சொல்லாடச் சோர்வு படும்"

கு. மணிமேகலை
ஆண்டு - 13

# நான் கண்ட கனவு
************ (மேடைப் பேச்சு)

உங்கள் எல்லோருக்கும் என் அன்பு வணக்கம். நான் இப்பொழுது உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக் கொண்ட விடயம் நான் கண்ட கனவு.

அன்பானவர்களே!

தூக்கம் ஒரு தற்காலிகமான சாவுதான். ஆனால் அதிலிருந்து விழித்துக் கொள்ளலாம். சாவு ஒரு நிரந்தரமான தூக்கம். ஆனால் அதிலிருந்து விழித்துக் கொள்ள முடியாது. என்று எழுத்தாளன் ஒருவன் கூறுகிறான். கனவு காணுவது மனித இயல்பு. கனவு என்பது நினைவின் நிழலாட்டம். மனத்திரை ஓவியங்கள் இப்படிப் பல தரப்பட்ட கருத்துக்களை அறிஞர்கள் கூறுகின்றார்கள். கனவைப் பற்றி விஞ்ஞானம் ஒரு கோணத்திலும் சாஸ்திரம் இன்னொரு கோணத்திலும் சமுதாயம் வேறோர் கோணத்திலும் ஆராய்கிறது. அதைப்பற்றிய கவலை நமக்கேன். அடுத்த விடயத்திற்கு வருவோம்.

சகோதரர்களே!

எங்கும் ஒரே ஆரவாரம். ஒரே ஒளிமயம், மங்கல ஒலி, மங்கள இசை, பூரண கும்பம், தோரணம் நடுவே! அழகாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் அகத்தியர் வீற்றிருந்தார். அடுக்கடுக்காக அமைந்த படிக்கட்டுகளில் தமிழ்ப் புலவர்கள் நிரம்பி வழிந்தார்கள். முன்வரிசையில் ஒளவை, இளங்கோ, கம்பன், பாரதி வள்ளுவன், இவர்களோடு அருணகிரிநாதரும் அமர்ந்திருந்தார். இன்று நடக்கப் போகும் கவியரங்கத்திற்கு பூவுலகில் இருந்து வந்த சிறுமி இந்த ஆசனத்தில் அமரட்டும் என்று அகத்தியர் கூறியதும், ஒளவையார் என்னை வருங்காலக் கவி மணியே வருக என்று வாரி அணைத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் கவியரங்கு ஆரம்பமானது அருணகிரிநாதர் எழுந்தார். கண்களை மூடிக் கொண்டார் கருத்திலே முருகனை இருத்திக் கொண்டு "முத்தைத் தரு பத்தித் திருநகை யத்திக்கிறை சத்திச் சரவண முத்துக் கொரு வித்துக் குருபர எனவோதும்" என்று பாடி முடித்ததும் கடைசி வரிசையில் இருந்த தமிழ்ப் புலவர்களில் ஒருவர் கைகொட்டி நகைத்தது பாரதியாரின் காதில் விழுந்தது. வீறிட்டெழுந்தார், தலைவருக்கு தலைசாய்த்து அமைதி வேண்டிக் கொண்டார். கண்கள் கறங்கெனச் சுழன்றன. நிமிர்த்திய நெஞ்சொடு "திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
எண்ணியே முடித்தல் வேண்டும்.
என்று கூறி அமர்ந்ததும் அவர் வெடித்த குரலிற்குத் தடித்த மீசை துடித்து வழி மொழிந்தது.

ஒளவையார் எழுந்தார்"ஆறுவது சினம் என்று ஒரு வரி கூறி அமர்ந்தார் அந்த ஒரு வரியிலே ஓராயிரம் கருத்துக்கள் இருப்பதை உணர்ந்தேன்.

வள்ளுவர் எழுந்தார்"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்று கூறி அமர்ந்தார். அவ்வாறுகூறி அமர்ந்ததும் வாழ்க வள்ளுவன்! வாழ்க வள்ளுவன் என்று அனைவரும் உரக்கக் கத்தினர். அவர்களுடன் சேர்ந்து நானும் வாழ்க வள்ளுவன்! வாழ்க வள்ளுவன்! என்று உரத்துக் கத்தினேன்.

முதல் கண்விழித்த அம்மா என் மகளே நித்திரையில் வாய்புலம்புகின்றாய்என்று கூறி என்னைத் தட்டி எழுப்பினார் அப்பொழுது தான் நான் அம்மாவின் அண்டையில் இருப்பதை உணர்ந்தேன். திடீரென விண்ணுலகிலிருந்த நான் மண்ணுலகிற்கு வீசப்பட்டேன்.

ஆகவே தூக்கம் ஒரு தற்காலிகமான சாவுதான்!

*நன்றி*

வட்டதீபம் மென்மேலும் வளர எமது நல்வாழ்த்துகள்.

★ பெசன் ரெயிலர்ஸ் ★

கண்டி வீதி கிளிநொச்சி.

★ அரிவையருக்கு அழகூட்டும் அலங்கார ஆடைகள்
★ இளைஞர்களுக்கு மெருகூட்டும் நாகரீக ஆடைகள்
★ மழலைகளுக்கு மகிழ்வூட்டும் மனம் கவர் கலர் ஆடைகள்

இவற்றை
குறித்த தவணையில், குன்றாத்தரத்துடன், குறைந்த செலவுடன்
தைத்துக் கொடுப்பவர்கள்
"பெசன் ரெயிலர்ஸ்"
கண்டி வீதி
கிளிநொச்சி.

LUSHIAN

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளித்தி
ராய்ந்த தமைவுடைய கற்பவே நீரொழிய
பாலுண் குருகிற் றெரிந்து"

# இன்பத்தமிழ்
*******

பொ. பரமேஸ்வரன்
ஆண்டு 12 கலைப்பிரிவு

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து
    முன்தோன்றி மூத்த தமிழ்
பல்கோடி ஆண்டுக்கு முன்னே
    முன்னேறி வாழ்ந்தவர் தமிழர்
புல் தொட்டு நெல் கொண்டு சோழம்
    நன்செய்யும் புன்செய்யுமாக
தொல் குடிமக்களின் தாய் மொழி
    பொதிகையிலே பிறந்த கன்னித்தமிழ்
தமிழுக்கு இலக்கண வரையறுப்பு உண்டு
    தமிழர் வாழ்வுக்கும் உண்டு அஃது
அமிழ்தினும் இனியதென கூறல் கேட்ட
    அரிவியென அறிஞர்கள் நாடி ஓடி
சிமிழுக்குள் அடைத்து வைக்கப்பட்ட
    மூக்குப் பொடியளவில்தான் அறிஞர்கள்
காலமெல்லாம் கன்னியாக நிலைக்க
    அவள் என்ன பெற்றாள்
ஞாலம் முழுவதிலும் தேடினலும்
    இவள் போல எங்குமில்லை
கோலமயில் முருகனுக்கு வாகனமாச்சு
    அந்தக் குமரன் தந்ததிந்தத் தமிழ் - திரு
மாலவனின் மருமகனென்பார் வடிவேலவனை
    தத்துவத்தின் அகப்பொருள்தான் வேறு
புறப் பொருளில் காட்டி நிற்கும் பொருள் ஒன்று
    பாமரர் கவனத்தை ஈர்ப்பதற்கு
அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று
    பாக்களில் கூறியது போல வேறு
பிறமொழி நூல்களில் கண்டதில்லை
    காலத்தால் அழியாத தத்துவங்கள்
மறத்தமிழர் நிலைக்கும்வரை உதவுமிது
    பிறமொழி அறிஞர்களைக் கவருமிது
தெய்வத் தமிழிது தேண்டியதை எண்ணி
    பிறமொழி அறிஞர்கள் பெருமை கொள்ள
நெய்யிருக்கும் ஆவின் பாலைப்போல
    அடக்கியுள்ள சிறப்புக்களோ ஏராளம்
செய்தொழிலும் இல்வாழ்வும் அறவழியில்
    நிலைத்திருக்க வழிகாட்டி முன்னோடிகள்
பொய்யா மொழி உவந்தளித்த திருக்குறளும்
    அகத்தியமும் தொல்காப்பியன் வழிவழியாய்
ஔவை முதல் புலவர் குழாம் பாடிப்பாடி
    நமக்காக விட்டு விட்ட கவியோ கோடி
ஔடதமாய் ஆன்மீக ஏற்றத்துக்காய்

மனித உளவுமுதல் உறவுவரை
அறம் செய்ய விரும்பு முதல் அஃகம் சுருக்காதவரை
இல்லறத்தான் வாழ்க்கை சிறக்கவைக்க
சௌக்யமாய் வாழ வழிவகுத்துதவிய அறிவுரை
மனித இனம் நிலைக்கும்வரை நிலைக்கட்டும்.

***

வட்டதீபத்திற்கு எமது நல்லாசிகள்.

# நியூ நிஷா டெயிலர்ஸ்.

உங்கள் ஆடைகளை நவநாகரீக முறையில்

★ குறைந்த செலவில்

★ தரமான முறையில்

தைத்துப் பெற்றுக் கொள்ள
வட்டக்கச்சியில் நீங்கள் விஜயம்
செய்ய வேண்டிய ஒரே இடம்

## நியூ நிஷா டெயிலர்ஸ்

ART BY LUSHIAN

கிட்சன் ரோட் சந்தி — வட்டக்கச்சி

"கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல் சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு."

## யாவர்க்கும் எமது நன்றி.....

வட்டுக்கச்சி மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் " வட்டுதீபம் " என்னும் மலர் சிறப்பான முறையில் அமைவதற்கு ஊக்கமும், ஆக்கமும் தந்துதவிய கல்விப்பணிப்பாளர் அவர்கட்கும் ஏனைய கல்வித் திணைக்கள உத்தியோகத்தர், எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், இம்மலரினை வெளியிடுவதற்கு நிதியுதவியினைத் தந்தருளிய வர்த்தக விளம்பரதாரர் அனைவருக்கும் இம்மலரினை அச்சிட்டு உதவிய அச்சக உரிமையாளர்கட்கும், ஏனையோருக்கும் உயர்தர மாணவர் ஒன்றியத்தினரின் மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக.

நன்றி.

வட்டதீபம் வளர எமது வாழ்த்துக்கள்

# Arafa Textiles

நிதான விலை!

உயர்ந்த ரகம்!



தற்கால நாகரிகத்திற்கேற்ற

பட்டுப் புடைவைத் தினிசுகள்

கல்யாண பட்டுப் புடைவைகள்

வெளிநாட்டு சேட்டிங் - சூட்டிங்

மற்றும்

றெடிமேட் உடைகளையும்

அழகுசாதனப் பொருட்களையும்

ஒரே இடத்தில்

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

சிறந்த ஸ்தாபனம்

## அறபா ரெக்ஸ்ரைல்ஸ்

சந்தையடி, -- வட்டக்கச்சி.

---

வட்டதீபம் சிறப்புற வாழ்த்துகிறோம்!

# THIRUPPATHY GRINDING MILL

- ☆ நெல் உடைத்து தீட்டியும்
- ★ மா அரைத்தும்
- ☆ மிளகாய் அரைத்தும் கொடுக்கப்படும்

தரமான மில் வேலைகளுக்கு

நாடவேண்டிய இடம்

## திருப்பதி கிறைன்டிங் மில்

கட்சன் வீதி, வட்டக்கச்சி.

*With Best Wishes*

*From:*

**G. A. Q. Students of**

# SCIENCE

## EDUCATION CENTRE

Jeyanthynagar, Karadi-Pokku, Vaddakachchi,

**KILINOCHCHI.**

# துர்க்கா றேடர்ஸ்

ஆறுமுகம் றோட், வட்டக்கச்சி.

பலசரக்குச் சாமான்கள், அழகுசாதனப் பொருட்கள்,
குழந்தைகளுக்குரிய பால்மா வகைகள்
மேலும்
உங்களுக்குத் தேவையான சகல பொருட்களையும்

★ குறைந்த விலையில்

★ குன்றாத் தரத்துடன்

நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

# துர்க்கா றேடர்ஸ்

ஆறுமுகம் றோட், வட்டக்கச்சி.